M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 5

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 5

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 முஹர்ரம் மீ 1934 மே மீ

உள்ளடக்கம்.

1. அல்குர்ஆன் ... 149
2. அல்ஹதீது ... 152
3. புத்தாண்டு ... 155
4. குர்ஆன் கரீமும், முஸ்லிம் அல்லாதாரும் ... 157
5. முஸ்லிம்கள் உணர்ச்சி பெறுவார்களா? ... 161
6. உத்தமப் பெரியார்கள் ... 165
7. சதிபதிகளின் பிரதானக் கடமைகள் ... 169
8. இஸ்லாமும் சன்னியாசங் கொள்ளுவதும் ... 173
9. கர்பலா சம்பவ நிகழ்ச்சி ... 177
10. சுகாதாரம்—பிராணவாயு ... 181
11. புதிய சீர்திருத்த உணர்ச்சி ... 184
12. இஷா அத்துல் இஸ்லாம் ... 187

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 MAY 1934
MADRAS

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ... ரூபா 3
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ... ,, 4
தனிப் பிரதி ... ,, 0 4

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோ[ர்] இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடை[யி]ல் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யு[த்தம்] பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்க[ளும்] பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்[பட]மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொ[ள்]ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,
43 A, போஸ்டாபீஸ் தெரு,
G. T., மதராஸ்.

20838
OFFICE OF THE REGISTRAR OF ...
25 MAY 193
MAD

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1353 முஹற்றம் ௴ 1934 ௵ மே ௴	இதழ் 5

அல்குர்ஆன்

(முஹம்மதே!) நன்னடக்கை புரிவோரில் மிகமிகத் தாழ்ந்தோர் யாராகுமென உங்களுக்கு அறிவிக்க வேண்டாமா வென (மானிடர்களுக்கு) தெரிவித்துவிடுவீராக. அன்னோர், உலக வாழ்க்கை சம்பந்தமான விஷயங்களில் நற்கருமங்கள் புரிவதாய்க் கூறிக்கொண்டு முயற்சி செய்தது வீணாய்விட்டது. அவர்கள் அல்லாஹ்வின் திருஷ்டாந்தங்களையும் (மறுமையில் ஏற்படும்) அவனது சந்திப்பையும் ஒப்புக்கொள்கிறதில்லை. ஆதலின் அவர்களது அமல்களென்னும் நற்செய்கைகள் யாவற்றும் அழிந்து போய்விட்டது; அந்த அமல்களை நிறுப்பதற்காக நாம் முற்படமாட்டோம்.

—அல்குர் ஆன்

அதாவது, மானிடர்களிற் சிலர், வெளித்தோற்றத்தில் தாங்கள் ஏதோ நலமான காரியங்கள் புரிந்துவருவதாய்க் கூறிக்கொண்டு அதிலேயே தங்கள் முழு பிரயாசையையும் செலுத்தி வருகின்றார்கள்; அத்துடன் தாங்கள் நற்கருமங்கள் புரிந்து வருவதாயும் அதன் முடிவு தங்களுக்கு பயனளிக்குமென்றும், ஒருக்கால் மறுமைநாள் ஏற்பட்ட போதிலும் ஆங்கும் வெகு சுவண்டியோடிருப்போமென்றும் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அன்னோரின் இக்கூற்று பெரும் கெடுதலானதாக இருக்கிறதென்றும், மறுமைநாளில் அமல்களையெல்லாம் கணக்கிடப்படுங்காலை அன்னோரின் இந்த அமல்கள், கணக்கிடப்படமாட்டாதென்றும் அல்லாஹ் தஆலா தெரிவித்து அதற்கு, அவர்கள் அல்லாஹ் தஆலாவை ஒப்புக்கொள்ளாமலிருந்ததுடன் மறுமைநாளை மறுத்ததுமே காரணமாகுமென்று அறிவிக்கின்றான் என்பதே.

எவன், உலகமடங்கலையும் சிருஷ்டித்து மானிடனை அழகான சொரூபத்திலாக்கி, அவனில் காது மூக்கு கண் நாவு முதலிய இன்றியமையாச் சாதனங்களை அமைத்துக்கொடுத்து, அவனுக்காக வானுலகிலிருந்து தண்ணீர் இறக்கி பூமியிலிருந்து பலவாறான கனிவர்க்கம் தானியம் முதலியவைகளை உற்பத்தி செய்தும் மிருங்களுக்காக புற்பூண்டுகளை முளைக்கவைத்தும் இன்னும் இவைபோன்ற அநேக விதவித

மான காருண்யங்களை நம்மீது புரிந்துவரும் ஏகநாயனான அல்லாஹ் ஒருவனிருக்கிறானென்று அவன்மீது ஈமான் கொள்ளாமலும் அவனுக்காற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்ற வேண்டிய அவசியங் கிடையாதென்றும் கூறிக்கொண்டு திரியும் தஹ்ரியா-நாஸ்திகரான குப்பார்களைப்போல், முஸ்லிம்களென்று தங்களைக்கூறிக் கொள்பவர்களிற் சிலரும் இதுகாலை அவ்வாறு பிதற்றமுற்பட்டிருக்கின்றனர். அன்னோரின் இக்கூற்று மிகமிக விபரீதக் கூற்றேயாகும். அன்னோர் அல்லாஹ் ஒருவன் உண்டென்பதையே யொப்புக்கொள்ளாதிருக்கும் நிலைமையில், அவர்கள் அவனது கட்டளைக்கு வழிப்பட்டு நடப்பதென்பது எங்ஙனம்? இந்நிலைமையில் அவர்கள், அல்லாஹ்வின் அடியார்களாகிய இதர மானிடர்களுக்கு ஏதாகிலுமொரு நன்மையான காரியம்புரிந்துவிட்டு, தாங்கள் ஏதோ முக்கிய பிரதானக் கடமையை நிறைவேற்றிவிட்டதாகவும், இனி தங்களுக்கு எவ்விஷயத்திலும் யாதொரு கவலையுங் கிடையாதென்றும் உறுதிகொண்டிருக்கின்றனர். அவர்களின் இவ்வெண்ணம் ஏமாற்றமானதாகவும் இஸ்லாமியக் கொள்கைக்கு நேர் விரோதமானதாயுமிருக்கின்றது. இஸ்லாம் மார்க்கத்திலோவெனில், ஈமான் (அல்லாவின் மீது உறுதிகொள்ளல்) முதன்மையானதாகும். அதற்குப் பின்புதான் அமல் (செயல்)களின் விஷயமாய் கவனிக்கப்படும். எனவே, ஈமானில்லாத நிலைமையில் எவ்வாறான அமல்களும் பிரயோசனமளிக்க மாட்டாதென்பது வெளிப்படை. ஆனால் இவ்வாறு கூறுவதுகொண்டு, மானிட சமுகத்தினருடன் தக்க முறையில் நடந்து அவர்களுக்கு உபகாரம் புரிவதும், உயிர்ப் பிராணிகளுடன் கிருபைகொள்வதும் புண்ணியமற்ற காரியமென்று கூறுவதாகக் கருதிவிடுக. சத்திரம்போன்ற விடுதி, மத்ரஸா, கலாசாலை, வைத்தியசாலை முதலியவைகளை ஏற்படுத்துவதும், அகதிகளுக்கும் கைம்பெண்களுக்கும் உதவி புரிவதும், சீர்கெட்டுப் போயிருக்கும் உயிர்ப் பிராணிகளுக்கு இடவசதி செய்துகொடுப்பதும் நலமான காரியங்களாகவும் புண்ணியமளிக்கக்கூடியவைகளாயுமிருந்த போதிலும் இவைகளுக்கெல்லாம் 'ஈமான்' பிரதானமாகும். எனவே, அல்லாஹ் ஒருவனிருக்கின்றான்; அவனின் அபாரசக்தியினால்தான் இவ்விஷயங்களெல்லாம்நிகழ்பெறுகின்றனவென்று ஈமான்—உறுதிகொள்ளாது மேல் கூறப்பட்டுள்ள காரியங்களைச் செய்வதுகொண்டு மானிடன் எவ்வித நன்மையையும் அடைந்துகொள்ள முடியாதென்பதை குர்ஆன் ஷரீபும் நபிகள் பிரான் (ஸல்) அவர்களின் திருவாக்கியங்களான ஹதீது ஷரீபுகளும் பஹிரங்கபோதனைசெய்துகொண்டிருப்பதை சாமான்ய அறியுடையோரும் நன்கறிவர். ஆகவே எவன், அல்லாஹ் ஒருவன் உண்டென்பதை ஒப்புக்கொள்ளாது அவனது கட்டளைக்குமாறுசெய்துகொண்டிருக்கின்றானோ அவன் இதர மானிடர்களுடன் தக்க நேர்மையான முறையில் நடந்துவருவது கொண்டு, இனி தமக்கு யாதொரு விதபயமுமில்லை என்று கூறிக்கொண்டபோதிலும் அவன் பெரும் வழிகேட்டிலேயே யிருக்கிறான்; அவன் நன்மை எனக் கருதிச்செய்யும் சகல வேலைகளும் பிரயோசனம் தரத்தக்கதாகாது; கடிசான காற்று வீசிக் கொண்டிருக்கும்பொழுது சாம்பல் பறந்துவிடுவதுபோல், அவன் நன்மை எனக் கருதிச் செய்யும் காரியாதிகள் யாவும் யாதொரு பிரயோசனமுமளிக்காது பறந்துபோமென்பதும் பின்னர் அவன் கைசேதமடைந்தவனாய் உட்கார்ந்திருப்பானென்பதும் திண்ணம். உதாஹரணமாக, நம்முடைய அடிமையொருவன், நம்மை மதிக்காமலும் அவனுக்கு நாம் எஜமானென்பதை ஒரு சிறிதேனும் மனதில் கருதாமலும் நம்முடைய கட்டளைக்கு மாறுசெய்து கொண்டும் நமக்குத் தொண்டு செய்யாமலுமிருக்கும் நிலைமையில், நம்முடைய மனுஷாள்களுக்கும், நமது இதர வேலைபாட்களுக்கும், உயிர்ப் பிராணிகளுக்கும் தொண்டுபுரிந்து கொண்டிருப்பானாகில் அதனை நாம் ஏற்றுக்கொண்டு அவன்மீது பற்றுதலுடையவர்களா யிருப்போமா? அதனால் அந்த அடிமைக்கு ஏதாகிலும் பிரயோசனம் கிடைக்குமா? இதரர்களாலோ அல்லது உயிர்ப் பிராணிகளாலோ அந்த அடியானுக்கு ஏதாகிலும் நலன் பலன்கள் செய்து கொடுக்க முடியுமா? அத்தன்மைபோல் நாம் எந்தக்காரியத்தைச் செய்தபோதிலும் அல்லாஹ்வுக்காகவென்று செய்தால்தான் பிரயோசனமடைவோம். எனவே, நம்முடைய வாழ்வும் அசைவுதலும் திரும்புதலும் சுருங்கக்கூறின் ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வுக்காகவென்றிருக்குமானால்தான் ஜெயம்பெறுவது நிச்சயம். அவ்வாறில்லாதுபோனால் அவைகளினால் யாதொரு பிரயோசனமும் கிட்டுமென நினைப்பது வீண்கனவேயாகுமென்பதை நன்கு கவனத்தில்

208338

வைத்துக்கொள்வோமாக. நாம் ஒவ்வொரு காரியம் செய்யும்போதும் இந்நோக்கத்தைப் பிரதானமாகக்கொண்டு, அல்லாஹ்வின் பொருத்தத்துக்காக அதைச் செய்யவேண்டும்; நாம் யாருக்கும் உதவி புரியக் கருதுவோமாகில், இவர் அல்லாஹ்வின் அடியாராகையால் நமது சோதிரராய்விட்டார்; அவருக்கு உதவிசெய்வது கொண்டு அல்லாஹ் தஆலா நம்மீது திருப்தி கொள்வான் என்று எண்ணங்கொள்வோமாகில் அதனால் பெரும்பயனடைவோ மென்பது திண்ணம்.

மறுமைநாள் உண்டென்பதன்மீது உறுதி கொள்வதும் ஈமானிலுள்ளதாகும். எனவே, அதனை உறுதிகொள்ளாது ஈமான் நிறைபூர்ணமாகமாட்டாது. அதாவது, நாம் மரணமடைந்த பின் ஒருக்காலத்தில் எழுந்து அல்லாஹ்வின் சன்னிதானத்தில் நிற்கும்படி ஏற்படுமென்பதில் சற்றேனும் சந்தேகங்கொள்வோமாகில் நம்முடைய ஈமான்பூர்த்தியடையாது நம்முடைய காரியாதிகளெல்லாம் அழிந்து நாசமாய்விடும். இதுகாலை பெரும் ஐசுவரியம்படைத்தோர்களிற் சிலர், மரணமாகுந் தருவாயில் தங்கள் ஐசுவரியத்தின் மிகுதபாகத்தைப் பொதுநல வேலைக்காகச் செலவிடவேண்டுமென்று குறிப்பிட்டு விடுகின்றார்கள்: சிலர் கல்விக்காகவென்றும் சிலர் வைத்தியசாலைக்கென்றும் சிலர் இன்னும் வெவ்வேறு பொதுநல காரியங்களுக்காகவென்றும் அநேக ரூபாய்களை ஒதுக்கிவைத்து விடுகின்றார்கள். இந்நன்கொடைகளினால் மானிடவர்க்கத்துக்குப் பிரயோசனமேற்பட்டபோதிலும் அதனை தருமம் புரிபவர் அல்லாஹ்வின்மீதும் மறுமை நாளையில் எழுப்பப்படுவதன் மீதும் ஈமான்— உறுதி கொள்ளாதிருப்பாராகில் நன்கொடை அளித்ததால் அவருக்கு யாதொரு பிரயோசனமுமேற்படாதென்பது இஸ்லாத்தின் சித்தாந்தமாகும். நம்மைப்படைத்து ரக்ஷித்துக் காப்பாற்றிவரும் நாயனது கட்டளைக்கு மாறு செய்துகொண்டும் அவனது பொருத்தத்தைத் தேடாமலுமிருந்துகொண்டு அல்லாஹ்வின் அடியார்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக முயற்சிப்போமாகில், தன் எஜமானனுக்கு மாறு செய்துகொண்டு அவனுடைய பணியாட்களைச் சந்தோஷப்படுத்துவதற்குள்ள காரியங்களில் முற்படும் அடிமையைப் போலாய்விடுகிறோமன்றோ? மேனாட்டாரைப் பின்பற்றி நடக்குதல் என்னும் வியாதியானது நம்மைப் பீடித்து நிற்பதால் ஒவ்வொரு காரியத்தையும் நன்காராய்ந்து பார்த்து அதில் பிரவேசித்துவிடுகிறோம். அதனாலேயேதான் இவ்வியாதியும் நம்மவரைப் பீடித்துக்கொண்டிருக்கிறது.

அல்லாஹ் தஆலா இவ்வுலகினில் தன்னை வணங்குவதற்காகத்தான் மானிடர்களைப் படைத்திருக்கிறான். இதற்கு மாறாய் வழிகேடர்கள்கூறும் கூற்றுக்களுக்குத் தலைசாய்த்து நாமும் அவ்வாறு செய்யமுற்படுவது பகிரங்க வழிகேடேயாகும். ஆகவே, நமக்கு நல்வழி காண்பிப்பதற்காக இப்பூலகினில் தோன்றிய உத்தம சிரேஷ்டரவர்கள், எதை நல்லவேலை என்று அறிவித்திருக்கின்றார்களோ, அதை நல்லதென்றும், எதைக் கெட்டதெனக் கூறியிருக்கின்றார்களோ அதனை கெட்டதென்றும் ஏற்றுக்கொண்டு, நம்முடைய மனம் வேறுவிதமாய் உறுதிகொண்டிருக்குமாயினும் அதை மனதைவிட்டு அகற்றிவிட்டு காரியாதிகளை நடத்திச்செல்லவேண்டும்.

ஹிந்துக்களில் ஒரு சாரார், உயிர்ப்பிராணிகளை அறுத்துப் புசிப்பது கூடாதெனக் கூறிக்கொண்டிருப்பதால், இளகிய ஹிருதயத்தையுடைய ஒவ்வொரு மனிதனுடைய மனமும் அந்தப் பக்கமே சார்கின்றது. ஆனால் சகல இரகசியங்களையும் நன்கு தெரிந்தவனும் எல்லா ஜீவராஸிகள்மீதும் அளவற்ற தயாளமுடையவனுமாகிய அல்லாஹ் தஆலா, குறிப்பிட்ட உயிர்ப்பிராணிகளை அறுத்துப் புசிக்குமாறு அனுமதியளித்திருக்கின்றான். இக்கட்டளையை நிறைவேற்றுங்கால் நம்மை இறக்கமற்ற வன்னெஞ்சர்கள் என்று கூறலாமா? ஆகவே அல்லாஹ் தஆலாவின் கட்டளைக்கு முன் நம்முடைய மனஊசாட்டத்திற்கெல்லாம் எவ்வித இடமும் கிடையாதென்பது திண்ணம்.

இக்காலை முஸ்லிம் அல்லாதாரில் சிலர், மதத்தைவிட உலகம்தான் மேலெனக் கருதுகின்றார்களாதலின் அன்னாரிடம் மார்க்கத்தினுடையவும் அல்லாஹ்வுடையவும் பதவியானது, உலகம் தேசம் இவைகளின் பதவியைவிட தாழ்ந்ததாகயிருக்கின்றது. துர்அதிர்ஷ்டவசமாய் முஸ்லிம்களில் ஒரு சிலரும் இதன் பக்கல் தங்கள் சிந்தனையைச் செலுத்தி கண்மூடித்தனமாய் அந்த சில ஹிந்துக்கள் சொல்லுவதுதான் சரியான விஷயமென்று கூறிக்கொண்டு அதனைப் பின்பற்றியொழுக முற்பட்டிருக்கின்றனர். விக்கிரக ஆராதனைக்காரர்களோவெனில், ஏற்கனவே இவ்வழிகேட்டில் சிக்குண்டுகிடப்பதால் அல்லாஹ் ஒருவன் உண்

டென்று உறுதிகொள்ளாமலே, எதாகிலும் நல வானகாரியம் செய்வதுகொண்டு பிரயோசனம் கிடைத்துவிடுமெனக் கூறிக்கொண்டிருப்பது வெள்ளிடை.

இதுகாலே மேனுட்டார்தங்கள் கொள்கைகளை உலக முழுதிலும் பரப்பிவருவதால் அறி விழந்தவும் மார்க்கப்பற்று குறைந்தவுமாகிய ஒரு சில முஸ்லிம்கள் அவ்வலேயில் சிக்கி அத ற்கும் வழிபட்டுப்போகின்றனர். அதிலும் சன் மார்க்கத்தின் பக்கல் யாருக்கு விருப்பமில்லா திருக்கின்றதோ அன்னோர் அந்த வலேயில் சடு தில் சிக்குண்டுபோகின்றனர். எனவே அன் னோர், மானிடனின் நிர்ணயம் எவ்வாறிருந்த போதிலும் அவன் செய்யும் நலவான காரியங் கள் பிரயோசனமளிக்கக்கூடியதாகிவிடுகின்றது என்று கூறுகின்றனர். ஆனால் அல்லாஹ்த ஆலா, அன்னோர் செய்யும் நல்லவேலேக்கு கானலே உவமானமாக்கிவைத்து, தாகித்திருப் பவன் கானலேப் பார்த்துத் தண்ணீரென உறு திக்கொண்டு எவ்வாறு சந்தோஷமடைந்து அத னைபருகலாமென்று எண்ணிக்கொண்டு அங்கு சென்று பார்க்குங்கால் தண்ணீரில்லாது ஏமா ற்றமடைந்து திரும்புகிறானே அதேபோல், எவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தையும் அவனது அபாரசக்திகளேயும் மறுமை நாளே யும் உறுதிகொள்ளாது, தாங்கள் புரிந்துவரும் காரியத்துக்குத்தக்க பிரயோசனம் கிட்டு மென்று கருதுகின்றனரோ அன்னோர் மரணத் துக்குப்பின் மறுமைநாளேயில் எழுப்பப்பட்ட வுடன் அவர்கள் புரிந்துவந்த அமல்—செயல்க ளெல்லாம் யாதொன்றுமே இல்லாது காணு மற்போய்விடுவதைக் காண்பார்கள். ஆகவே, அவர்கள் மனதில் ஏற்பட்டிருந்த எண்ணங்க ளெல்லாம் பொய்யாய்ப்போய் அவர்களின் கெட்ட அகிதா—நிர்ணங்களின்காரமாய் வேத னை அனுபவிக்கும்படி நேரிட்டுவிடும்.

சோதரர்காள்! நாம் அல்லாஹ்வின் அடியார் களாகும்; அவனை வணக்கம் புரிவதற்காகவே நாம் படைக்கப்பட்டிருக்கிறோம்; நாம் ஏதாகி லும் நலமான காரியங்கள் செய்வதாயின் அவ னுக்காகவே செய்யவேண்டும். ஆகவே, அல் லாஹ்வின் மீதும் மறுமைநாள் உண்டென்ப தையும் உறுதி கொள்ளாது எவ்வாறான நற் கருமங்கள் புரிந்துவந்த போதிலும் அஃது யாதொரு பிரயோசனத்தையும் அளிக்காதென் பது நம் முஸ்லிம்களின் கோட்பாடாகும். எனவே, எவ்வேலேயைச் செய்தபோதிலும் ஈமானுக்குப் பின் செய்வது தான் பிரயோசன மளிக்குமென்பதை கவனத்தில் வைத்து, வழி கேடர்களின் வார்த்தைக்கு செவி மடுக்காதிருப் போமாக.

(வல்லாஹ் அஃலம்.)

அல்ஹதீது

அல்லாஹ் தஆலாவுக்கு வணக்கம் புரிவ தும், அவனுக்கு யாரையும் இணேயாகக் கொள்ளாதிருப்பதும் மானிடர்மீதுள்ள முக் கியக் கடமையாகும்.

எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர் கள் ஒரு நாளன்று, ஹஸ்ரத் அபூதாலிப் அவர் கள் வீட்டில், அல்லாஹ் தஆலாவின் ஏகத்து வம் தூய்மை இவைகளே விவரித்துக் கொண் டிருக்குங்கால், மேற்கூறியவாறு அருள்செய்த தாக ஹஸ்ரத் ஸல்மான் பார்ஸீ (ரலி.) அவர் களேத் தொட்டும் றிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது. இந்த ஹதீதை விரித்துரைக் குங்கால், ஹஸ்ரத் ஷேக் அப்துஹூ அவர்கள், தூய்மை பொருந்திய ஏக சக்தியுடைய அல் லாஹ் தஆலா உலக மடங்கலேயும் படைத்த ஏகனும் எஜமானுமிருக்கின்றான்; அவனேத் தவிர வணக்கத்துக்கு பாத்தியஸ்தன் யாரு மில்லே; அவன் ஜீவித்திருக்கிறான்; அவனே தூக்கமோ மறதியோ தொடுவதில்லே; வானம் பூமி இவைகளிலுண்டாயிருக்கும் வஸ்துக் களெல்லாம் அவனுடையதாயிருக்கும்; அவன் யாருடைய தேவையையும் எதிர்பார்ப்பவனு யில்லே; அவன் நெகிரற்ற சீமானுகயிருக்கி றான்; அவன் தான் சகல படைப்புகளுக்கும் ஆகாராதி அளித்து போஷித்துக் காப்பாற்றி வருகிறான் எனக் கூறிவிட்டு, எந்த நேரான அறிவுடையோனும் இதனே ஒப்புக்கொண்ட பின், அபார சக்தியினேயுடைய அந்த அல் லாஹ்வைவிட்டு சக்தியற்ற வேறு வஸ்துவை வணங்குவதும், அவைகள் நற்கூலி தெண்டனே

அளிக்கிறதென்று கருதுவதும் எவ்வளவு தூரம் அநீதியாகுமென்பதை அவன் உற்றுணர்ந்து பார்க்கவேண்டுமென்று அறிவித்திருக்கின்றார்கள். நேயர்காள்! வேறு யாரிடமும் உங்கள் நாட்டங்களைக்கேட்காது ஏகவல்லமைபொருந்திய அந்த அல்லாஹ்வின் சன்னிதானத்திலேயே உங்கள் சிரங்களைப் பணியச்செய்யுங்கள். அவன் காரியாதிகளை கவனித்து நெகிரற்ற நீதியுடன் ஆக்ஷி புரிந்து வருகின்றான்; உலகமுழுவதிலும் அவன் அதிகாரந்தான் செல்படியாய்க்கொண்டிருக்கிறது; நீங்கள் எவ்வளவு தூரம் அவனுக்கு மாறு செய்துவிட்டபோதிலும் அவனிடம் அடைக்கலம் புகுவீர்களாகில் தனது கிருபையினுடைய தலைவாயலை உங்களுக்காகத் திறந்துவிடுகின்றான். ஆகவே அவனையே வணக்கம் புரிந்து அவனுடைய கட்டளையைச் சிறமேற்றாங்கி நடப்பீர்களாக.

எவன், அல்லாஹ் தம்மீது 'ரிஜ்க்' விஸ்தீரணமாக்கிவைக்க நாடுகின்றானோ அவன் உற்றார் உறவினர்களுடன் சந்தோஷ வாழ்க்கைநடத்தட்டும்.

சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஒருநாளன்று, ஏழை மிஸ்கீன்களையும் குடல்வாதி ஜனங்களையும் ஆதரித்து வரவேண்டியதின் அவசியத்தையும் அதன் மேன்மைகளையும் கூறுங்கால், மேற்கண்டவாறு அறிவித்ததாக ஹஸ்ரத் அபூதர்ரகிபாரீ (ரலி.) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், ஏழைகளின் மனதை திருப்திசெய்வதும் அவர்கள்மீது கிருபை புரிவதும் ஒவ்வொருவர் மீதுமுள்ள பிரதானக்கடமையாகுமென்றும், எவன் சக்தியற்றோர் மீது கிருபைபுரியாதிருக்கின்றானோ அவன் அனியாயக்காரனும் வன்னெஞ்சனுமாவானென்றும் கூறி, இது சம்பந்தமாய் பெருமானார் (ஸல்.) அவர்கள் அருள்செய்திருக்கும் சுபச்செய்தியையும் தெரிவித்திருக்கின்றார்கள். அதாவது, உலகிலுள்ள மானிடர் யாவரும் அல்லாஹ்வின் அடியாராகுமாதலின் எவன் அல்லாஹ்வின் அடியாருடன் தக்க முறையில் நடந்துகொள்ள விரும்புகின்றானோ அவன் மானிடர்களில் சிரேஷ்டமானவனாகும் என்றும், மானிடன் தன்கிருபையை ஆதரவு வைப்பானாகில், தன் அடியார் மீது கிருபையுடையவனாக இருக்கட்டுமென்றும் அல்லாஹ் தஆலா கூறியிருக்கிறான் என்பதே. ஆகவே, எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சதாவும் ஏழைகளின் ஞாபகத்தை சிந்தையில்கொண்டு சிறப்புற்று விளங்கினார்களென்பது அவர்களது வாணாள் சரிதையினின்று நன்கு விளங்கக் கிடக்கின்றது.

ஜிப்ரயீல் (அலை.) என்னிடம் வருந்தோறெல்லாம், அயல்பாகக்காரர்களுடன் தக்க முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி எவ்வளவுதூரம் கூறினார்களெனின், ஒருக்கால் அவர்களை அனந்தர வாரிஸ்களாகச் செய்துகொள்ளுங்களென்று கூறிவிடுவார்களோவென்று கருதினேன்.

எம்பெருமானார் நபியகரீம் (ஸல்.) அவர்கள், மானிடர் சற்குணசீலராய் விளங்கவேண்டுமென சொற்பெருக்காற்றி வருங்காலை, அயல்பாகக்காரர்களுடன் நடந்தொழுகவேண்டிய விஷயமாய் மேற்கண்டவாறு கூறியததாக ஹஸ்ரத் உப்பாதிப்னுஸாமித் (ரலி) அவர்களைத்தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. உலகதயாளர் உத்தமத்தூதர் (ஸல்) அவர்களின் இப்போதனையால், அயல்பாகக்காரர்களின் சுதந்திரங்களைக் கவனிக்கவேண்டியது பிரதானக் கடமையாகுமென்பதையும், அவர்களுக்கு யாதொருகஷ்டமும் கொடுக்காது அவர்களது சுகதுக்கங்களில் நாமும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்பதையும் நன்குதெரிந்து கொள்கிறோம்.

எவன் அல்லாஹ்வின்மீதும், மறுமைநாளின் மீதும் ஈமான்—உறுதிகொண்டவனயிருக்கிறானோ அவன் தம்மிடம் வரும் விருந்தாளிக்கு உபசரணைபுரியட்டும்.

சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்சாரீ (ரலி.) அவர்கள் இல்லத்தில் சொற்பெருக்காற்றுங்கால், விருந்தாளிகளை உபசரிப்பதனாலேற்படும் நற்பயன்களைக் கூறி வரும்போது,மேற்கண்டவாறும் அறிவித்ததாக ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களைத்தொட்டு றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் இமாம்சாலிஹ் ஸஜாயிரீ அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், விருந்தாளிகளை உபசரிப்பது பிரதானக் கடமையாகுமென்றும், உபசாரம்புரிவதென்பது, அவன் சௌகரியமாயிருப்பதை விரும்புவதும், அவன் கஷ்டசங்

கடத்தில் அகப்பட்டுக்கொள்வானாகில் அவனுக்கு உதவிபுரிவதும், அவன் வியாதிஸ்தனாய் விடுவானாகில் அதற்குப்பரிகாரம் செய்வதுமாகுமென்று கூறினார்கள். யாவற்றிற்கும் அல்லாஹ் ரிஜ்க் கொடுத்துக்கொண்டிருக்கிறான் எனக் கருதுபவர்களே! விருந்தாளிக்கு உபசாரம் புரிவதனால் உங்கள் ரிஜ்கில் யாதொன்றும் குறைந்துபோய் விடமாட்டாது; அவனுக்கு உபசாரம் புரிவதனால் நீங்கள் அல்லாஹ்வின் கிருபைக்குப் பாத்தியஸ்தராய் விடுகின்றீர்கள்; இது உங்கள் ரசூல் அவர்கள் நடத்தையுமாகும் என்பதை கவனத்தில் வைப்பீர்களாக.

நீங்கள் ஒரு விஷயத்தைக் கடைபிடித்தொழுகுவீர்களேல் அதனால் உங்களுக்கிடையே பிரீதி அதிகரிக்குமே அவ்வாறான ஓர் காரியத்தை உங்களுக்கறிவிக்க வேண்டாமா? அஃதாவது, உங்களுக்கிடையே 'ஸலாம்' சொல்வதை அதிகமாக்கிக் கோள்வவதாகும்.

நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் ஒருமுறை இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் அம்மார்பின்யாஸிர் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றது. எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் இத்திருவாக்கியத்தால் "ஸலாம்" செய்துகொள்வதின் அவசியம் நன்கு விளங்கக் கிடக்கின்றது. எனவே: எவன் ஸலாம் செய்வதை மரியாதைக் குறைவு என்பதாகக் கருதுகின்றானோ அவன் மார்க்கமறியா மடையனாகுமென்பது நன்கு புலனாகின்றது.

முஃமினான ஒரு மனிதன், மற்றொரு முஃமினின் விஷயத்தில் ஒரு கட்டடத்தைப்போலிருக்கின்றான். அக்கட்டடத்தின் ஒருகல் மற்ற கல்லுக்கு உதவியாயிருப்பதுபோல், ஒரு முஸ்லிம் மற்றவர்களுக்கு உதவியாயிருப்பான்.

எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் ஸல்மான் பார்ஸீ (ரலி.) அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் ஷேக் அப்துஹூ அவர்கள் இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால், பெருமானார் (ஸல்.) அவர்கள் இத்திருவாக்கியத்தில், முஸ்லிம்கள் ஒற்றுமையாய் வாழ்வதால் ஏற்படும் நற்பயன்களை நன்கு விளக்கியிருக்கின்றார்கள் என்றும், முஸ்லிம்கள் ஒருவருடைய சுகதுக்கங்களை தங்களது சுகதுக்கம்போல் பாவித்து நடந்தகாலை பெரும் கீர்த்தியோடு உலகிற்கே பெரும் தீபச்சுடராய்ச் சிறந்துவிளங்கினார்கள் என்றும், கீர்த்தியோடு அரசுபுரிந்துவந்த கிஸ்ரா கைஸர் இவர்களின் சிம்மாசனங்களும் இன்னோரின் பாதாரவிந்தத்தின் கீழ் அடிபணிந்து கிடந்ததென்றும், துர் அதிர்ஷ்ட வசமாய் இதுகாலை இஸ்லாமிய ஐக்கிய ஒற்றுமைக்கு விரோதமாய் காரியாதிகள் நடைபெறமுற்பட்டதன் பயனாய் நாம் இதரார்களின்பார்வையில்இலேசாகக் காணப்படுவதுடன் நிம்மதியற்றவர்களாயுமிருந்து வருகின்றோமென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

எவன் முஸ்லிம் சோதிரனுடைய தேவையைப் பூர்த்திசெய்து வைக்கின்றானோ அல்லாஹ்தஆலா அவனுடைய தேவையை பூர்த்தி செய்துவைக்கிறான்.

நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் இவ்வாறு கூறியிருப்பதாக ஹஸ்ரத் உபைதா (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஹதீதை ஹஸ்ரத் இமாம் ஸாலிஹ் ஸஜாயிரீ அவர்கள் விரித்துரைக்குங்கால், தன் சோதிர முஸ்லிமுக்கு உதவிபுரிவதும் அவன் கஷ்டத்திலகப்பட்டுக் கொள்வானாகில் அக்கஷ்டத்தைப் போக்கிவைப்பதும் அவன் நோய்வாய்ப்பட்டு விடுவானாகில் அதற்குப் பரிகாரஞ் செய்வதும் அவன் பசியோடிருப்பானாகில் அவனுக்குத் தின்னக்கொடுப்பதும் இதர மற்றொரு உண்மையான முஸ்லிமுடைய சேவையின் பிரதானக் காரியமாகுமென்றும், இதுதான் இஸ்லாமிய ஐக்கியமென்றும் கூறியிருக்கின்றார்கள்.

ஏழைகளுக்கு உதவி ஒத்தாசை புரிவதில் முயற்சிப்பவன் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்பவனைப் போலிருக்கிறான்.

ஒரு நாளன்று பெருமானார் (ஸல்.) அவர்கள் ஏழைகளின் மனதை திருப்தி செய்யவேண்டியது அவசியமென்பதை வற்புறுத்தி சொற்பெருக்காற்றுங்காலை இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் அல்லாமா ஸாலிஹ் ஸஜாயிரீ அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மானிடர் புரியும் நல்அமல்களிலெல்லாம் ஏழைகளுக்கு அநுதாபம் காட்டுவதுதான் பிரதானமாகுமென்றும் அறிவு படைத்த ஒவ்வொருவனும் ஏழைகளை தமது சோதிரர்கள்போல் பாவிக்கவேண்டியது பிரதானக் கடமை என்றும் கூறியிருக்கின்றார்கள்.



புத்தாண்டு.

சங்கை மிக்க 'முஹற்றம்' திங்கள் 1-ந் தேதியிலிருந்து ஹிஜ்ரி 1353-ம் ஆண்டு ஆரம்பமாய்விட்டது. இந்த ஹிஜ்ரியின் முதன் ஒவ்வொருமாதமும், எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள், அனியாயகாரர்களின் அதிக்கிரம அடாச் செயல்களைக்கண்டு மனம் வெறுத்து அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப வெளிப்புறப்பட்டுச் சென்ற சம்பவத்தையும், அதன்பயனாய் சன்மார்க்கம் தினே தினே அபிவிர்த்தியடைந்துவந்ததையும் நம் ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறது. சங்கை பொருந்திய இம்மாதத்தில் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மீதும், அருமை சஹாபாக்கள் மீதும் ஆரம்பத்தில் நிகழ்பெற்ற அடாச்செயல்களைச்சிந்தித்துஉணர்ச்சிபெறுவோரும், இஸ்லாம் அபிவிர்த்தி யடைந்ததைக் கண்டு சந்துஷ்டி அடைந்தோரும் நம்மில் யாருமிருக்கின்றார்களா? அக்காலத்தில் நிகழ்பெற்றதைபோன்ற மகத்தான சம்பவத்தை சரித்திரம் இதுகாலவரை வெளியிட்டது கிடையாது. ஆகவே, இத்தியாதிகாரணங்களால் ஹிஜ்ரத்துக்குப் பிரத்தியேக மகிமை ஏற்பட்டிருக்கிறது. அதனைத் தெரிந்துகொள்வதற்கு நேர்மையான அறிவும் விசால திருஷ்டியும் வேண்டற்பாலதாகுமாதலின், நம் முஸ்லிம்கள் அதனைத் தெரிந்துகொள்ள முயற்சியாதிருப்பது விசனிக்கத் தக்கதேயாகும்.

'கர்பலா'வின் கோரச்சம்பவமும் சங்கை பொருந்திய இம்மாதத்தில்தான் நிகழ்பெற்றிருக்கின்றன. எனவே, தியாகிகளின் தலைவராய செய்யிதுஷ்ஷுஹதா ஹஸ்ரத் இமாம்ஹுஸைன் (ரலி.) அவர்கள் தங்களைச் சார்ந்தோர்களுடன் அநீதியாயும் அதிக்கிரமமாயும் கொல்லப்பட்டுப் போனார்களாதலின் இம்மாதத்தின் மகுத்துவமானது 'கர்பலா'வில் நிகழ்பெற்ற கோரச் சம்பவத்தினுள் மறைந்து போய்க்கிடக்கின்றது. அதனால் முஸ்லிம்களின் ஹிருதயத்தில் ஹிஜ்ரத்தின் சம்பவங்களுக்குப்பதிலாய் 'கர்பலா'வின் கோரக்காக்ஷிகளே இடம் பெற்றிருக்கின்றன. ஆகவே, இஸ்லாமிய சரிதை எங்கிருந்து ஆரம்பமாயிற்றோ, இன்னும் முஸ்லிம்களின் கீர்த்தி என்னும் நக்ஷத்திரம் எங்கிருந்து பிரகாசிக்க முற்பட்டதோ அதனை முஸ்லிம்கள் மறந்து 'கர்பலா'க்காக்ஷியின் மீது அவைகளை அற்பணஞ் செய்துவிட்டிருப்பதன்பயனாய் நம்முஸ்லிம்கள் 'ஹிஜ்ரத்' என்பது யாது? நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் எவ்வாறு 'ஹிஜ்ரத்' செய்தார்கள், அதனால் என்ன பிரயோசனமேற்பட்டது, இஸ்லாமிய வருடங்களுக்கு 'ஹிஜ்ரத்'துடன் என்ன சம்பந்தமிருக்கிறது என்பவைகளையே தெரிந்துகொள்ளாதவர்களாய்விட்டனர். எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குமுன் அரப்தேசத்தில் குறிப்பிட்ட விதத்தில் எல்லோரும் ஒரே ஆண்டைக் கையாளாது, ஒவ்வொருவரும் வெவ்வேறுவித சம்பவ நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு ஒரு ஆண்டை ஏற்பாடு செய்துகொண்டு, அதிலிருந்து வருடங்களைக் கணித்துக் கொள்பவர்களாயிருந்தார்கள். உதாஹரணமாக அரப்நாட்டில்

நிகழ்வுற்ற பிரசித்திபெற்ற யானைக் கலகத்தின் வருஷமாகிய 'ஆமுல்பீலெ' முதல் வருடமாக ஏற்படுத்திக்கொண்டு அது முதல் கணக்குவைத்து வருடங்களை கணித்து வந்தார்கள். ஆனால் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்கள் தோன்றி அவர்களின் மக்கா வாழ்க்கையின்போது குறிப்பிட்ட ஒரு வருடக் கணக்கை ஏற்பாடு செய்யவில்லை. பின்னர் குப்பார்களிடம் யுத்தம் புரியுமாறு அல்லாஹ்த ஆலாவில் முஸ்லிம்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட வருடத்தை சஹாபாக்கள் "ஆமுல் இதன்" அனுமதிகிடைத்த வருடமென்று அழைத்தார்கள். இதன்பின் 'ஸூரயேபரூஅத்' இறங்கி அதில் முஸ்லிம்கள் குப்பார்களிடம் உதவி தேடலாகாதென்னும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதைக்கண்டு சஹாபாக்கள் அவ்வாண்டை "ஆமுல்பராஅத்" என்று அழைக்க முற்பட்டார்கள். பிறகு உலக ரெட்சகர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ஜுடைய காலத்தில் கடைசியாக நிகழ்த்திய குத்பாவானது இஸ்லாமிய சரித்திரத்தில் மகத்தானதாய்ச்சிறந்து விளங்கியதால் அந்த ஆண்டை முஸ்லிம்கள் "ஸனதுல்விதாஃ" பிரயாணம் செல்வதின் வருடமென்று அழைத்தார்கள். இவ்வாறே ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் 'கிலாபத்' பதவி வகித்திருந்த காலம்வரை ஒரு குறிப்பிட்ட இஸ்லாமியவருடம் திட்டமாக இல்லாதேயிருந்தது. ஹஜ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள் கலீபாவாக ஏற்படுத்தப்பட்டவுடன் ஜெயங்களானது அரசாக்ஷியை விஸ்தீரணப்படுத்திவிட்டதின் பயனாக வருவாய் அதிகரிக்க ஆரம்பித்ததால், இராஜிய பரிபாலனத்தை ஒழுங்கு செய்வதற்காகவும் வரவுசெலவு கணக்கு ஏற்படுத்துவதற்குச் சௌகரியமாயிருக்கும் பொருட்டும் இஸ்லாத்துக்குச் சொந்தமாக ஏதாகிலு மொருவருடத்தை குறிப்பிட்டு அதிலிருந்து மாதம் நாட்களை குறிப்பிட வேண்டிய அவசியம் காணப்பட்டது. உடனே ஹஸ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள் சஹாபாக்களையும், குறிப்பாய் இதரர்கள் குறிப்பிடும் வருடங்களின் விஷயங்களை நன்கு தெரிந்தவர்களையும் ஒன்று கூட்டியும், கூர்ஜஸ்தானின் அரசரான ஹுர்முஜான் என்பவர் இஸ்லாத்தைத் தழுவியவராய் மதீனமாநகர்வந்திருந்தகாலை அவரிடமும் ஆலோசனை புரிந்தார்கள். அவர் ஈரானியர்களுடையவும் ரூமியர்களுடையவும் ஆண்டுகளைக் குறிப்பிட்டு விட்டு ஹஸ்ரத் அவர்களின் அபிப்பிராயத்துக்கே விட்டு விட்டார். அந்த இடத்தில் ஈரானி, ரூமி வருடங்களைத் தவிர யுள்ள இதர புராதன ஆண்டுகளைப்பற்றிய பிரஸ்தாபமுமேற்பட்டது. ஆனால் கலீபா அவர்கள் ஓர் இஸ்லாமிய வருடத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கருதியதால் அவைகளிலெதையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதுபொழுது ஷஃபான் மாதமென்று குறிப்பிட்டகடிதமொன்று கலீபா அவர்களின் பார்வைக்கு வந்தது. ஹஸ்ரத் அவர்கள் அதைப்பார்த்துவிட்டு கடந்துபோன ஷஃபானா? அல்லது வரக்கூடிய ஷஃபானா? வெனக் கூறிவிட்டு, இதுகாலை வரவு செலவு அதிகரித்து விட்டதால் எதன்படி கணக்கு வைப்பதென்பதை திட்டப்படுத்தி விடவேண்டுமென்று கூறினார்கள். அங்குயாவரும் ஆலோசித்து இஸ்லாமிய வருடத்தின் முந்திய மாதத்தின் முதல்தேதியிலிருந்து ஆரம்பிக்கவேண்டுமென்னும் முடிவுக்கு வந்தனர். எனவே, இஸ்லாமிய வருடம், ஹிஜ்ரத் சம்பவத்திலிருந்து ஆரம்பமாயிற்று. ஆனால் இதர மதஸ்தர்கள் தங்கள் மதத்தலைவர்களுடைய பிறப்பு நாளையோ அல்லது ஏதாகிலும் ஜெயமேற்பட்ட நாளையோ, அதன் ஞாபகார்த்தமாய் அதிலிருந்து வருடக்கணக்கை ஏற்பாடு செய்துவிடுவது வழக்க மாகையால் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள்

இப்பூஉலகின்கண் ஜனனமான தினத்தையோ, அல்லது நபியாக அனுப்பப்பட்ட நாளையோ குறிப்பிட்டு அதுமுதல் வருட ஆரம்பத்தை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கருதியபோதிலும், ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் அபிப்பிராயப்படி ஹிஜ்ரத் சம்பவ நிகழ்ச்சியே இஸ்லாமிய வருடத்தின் ஆரம்பமாக ஏற்படுத்தப்பட்டுப்போயிற்று. ஆகவே, ஹிஜ்ரிவருடமானது இஸ்லாத்தின் ஜெய பேரிகையின் ஞாபகத்தை வருத்திவைக்காது அநீதி அதிக்கிரமம் புரியப்பட்டதையும், உண்மை அடியார்கள் மனோ உறுதியோடு அஞ்சாநெஞ்சம் பூண்டவர்களாய் நின்றதையும், சுயதேசத்தையும் மன விருப்பமான வஸ்துக்களையும் விட்டு வேறுதேசம் சென்றதையும் நமது கவனத்துக்குக் கொண்டுவந்த போதிலும், அது அநேக ஜெயபேரிகைக்குக் காரணமாயும் சந்தோஷமென்னும் கிரீடத்தை அணிந்து கொண்டு உயர்பதவி வகிப்பதற்கு தக்க சாதனமாயும் அமைந்துவிட்டதை சற்று ஊன்றிகவனிப்போர் எளிதில் தெரிந்துகொள்வர். எனவே, ஹிஜ்ரத் சம்பவமானது உண்மையிலே அனியாயகாரரின் நாசத்துக்கு அடிகோலியது போலாய்விட்டது. அதற்குப் பின்பு தான் 'பத்ர்' 'உஹத்' யுத்தமும், 'ஹுனைன்'போரின் அமளிச் சம்பவமும் நிகழ்பெற்றது. அதில், ஏற்கனவே அநீதி புரியப்பட்ட முஸ்லிம்களுக்கு ஜெயமும் அநீதிசெய்தோர்க்குத் தோல்வியும் ஏற்பட்டுவந்தது. மேலும் குர்ஆன் ஷரீபும் ஹிஜ்ரத் சம்பவ நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதால் முஸ்லிம்களது ஆண்டின் துவக்கம் அதுமுதல் ஏற்படுவது மிகமிக ஏற்றுக் கொள்ளதக்கதாய் அமைந்துவிட்டதென்பது யாவருக்கும் இனிது புலனாகுமென்பது திண்ணம்.

குர்ஆன்கரீமும் முஸ்லிம் அல்லாதாரும்

ஐரோப்பாவின் பிரக்யாதி பெற்ற சரித்திராசிரியரும் ஞாயவாதியுமான மிஸ்டர் இஸ்டான்லீ லீன்பூல் என்பவர் தமது பிரக்யாதி பெற்ற 'காயிடைன்ஸ் ஆப் ஹோலி குர்ஆன்' என்னும் நூலில் பின்வருமாறு எழுதுகின்றார் .—

உலக முழுதும் அந்தகார இருள் சூழ்ந்து கொண்டு அறியாமை குடிகொண்டு மானிடத்தன்மை என்பதே உலகத்தை விட்டு எடுபட்டு விக்கிரக ஆராதனை நாலுபாகங்களிலும் சுடர்விட்டெறிந்த பொழுது முஹம்மது (ஸல்.) அவர்கள் தக்கசமயத்தில் குர்ஆன் ஷரீபை உலகோர்முன் முற்படுத்திவைத்தார்கள். அந்த குர்ஆன் ஷரீபானது, பல ஆண்டுகளாய் உலக முழுதையும் மூடிக்கொண்டிருந்த அந்தகாரத்தைப்போக்கி சற்குணத்தைக் கற்பித்துக் கொடுத்ததன் பயனாக, அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடந்த காட்டுமிராண்டிகள் பேணுதலுடைய உத்தமர்களாய்த் திகழ்ந்தார்கள். அதுகாலை இவ்வேதம் வெளியாகாதிருந்தால் மானிடர்களின் சற்குணம் நாசமடைந்தே போயிருக்கும்; உலகமக்கள் பெயரளவில் மட்டும் மனிதரென்று அழைக்கப்பட்டு செயலில் மிருகங்களைப் போன்று காணப்படுவர்.

ரஷ்ய நிபுணர்

ரஷ்யாவின் பிரக்யாதிபெற்ற ஆராய்ச்சியாளரான 'கவ்ன்ட் டால்ஸ்டாய்' என்பவர் 'திலேட்ஆப்ரெலிஜன்' என்னும் தமது உயர்தர நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :—

குர்ஆன் ஷரீபானது முஸ்லிம்களின் மார்க்க கிரந்தமாகும்; அதனை அல்லாஹ் தஆலாவிடமிருந்து இறக்கிவைக்கப்பட்ட வேதமெனக் கருதுகின்றார்கள் ; அது உலகமக்களுக்கு நேர்வழி காண்பிப்பதற்காக நிகரற்ற வழிகாட்டியாய்த் திகழ்கின்றது. அதில் சீர்திருத்தும், சர்குணம், ஐக்கிய வாழ்க்கை, முக்திபெறும் மார்க்கம் முதலியவைகள் தக்கமுறையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இவ்வேதம் மட்டும்

மானிடர்களுக்கு நேர்வழி காண்பிக்கப் போதியன வாயிருக்கின்றது; அத்துடன் இது உலகோர்க்கு எப்பொழுது எடுத்துக் காட்டப்பெற்றதென்றால், பஸாது என்னும் தீயானது உச்சஸ்தானத்தை அடைந்தும், கொள்ளை கொலை களவு முதலியவைகள் தலை சிறந்து விளங்கியும் மானிடர் துர்வார்த்தையாடுவதை விட்டு பேணிக்கொள்ளாததாயுமுள்ள காலமாயிருந்தது. அதுகாலை இவ்வேதமானது அவ்வழி கேடுகளையெல்லாம் அழித்தொழித்து விட்டு நிகரற்ற கிரந்தமாய் இலங்காநின்றது.

தாமஸ் கார்லைல்

ஐரோப்பாவின் பிரக்யாதிபெற்ற சரித்திராசியரும் நிகரற்ற ஆசிரியருமாகிய மிஸ்டர் கார்லைல் என்பவர் தமது கியாதிவாய்ந்த 'தி பாப்புலர் ரெலிஜன் ஆப் தி ஓர்ல்டு' என்னும் நூலில் வரைந்திருப்பதாவது:—

குர்ஆனானது சாமான்யரும் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய சுளிவான வேதமாகயிருக்கின்றது; இதனை முஸ்லிம்கள் அல்லாஹ் தஆலாவிடமிருந்து அனுப்பப்பட்ட வேதமென்று உறுதிகொண்டிருக்கின்றார்கள். உலகின் கீழ்திசை முதல் மேல்திசைவரை, வடக்குமுதல் தெற்குவரை பலவாறான வழிகேடுகள் பரவிப்போயும், மானிடத்தன்மை சற்குணம் ஒழுக்கம் முதலியவைகளின் பெயர்கூட எடுபட்டு நானுபக்கங்களிலும் அமைதியின்மை சமாதானக்குறைவு ஏற்பட்டுமிருந்த காலை குர்ஆன் வெளியாயிற்றென்று திண்ணமாய்க் கூறலாம். அதுகாலை இத்திருவேதம் தோன்றி தன் சத்போனையின் அபாரசக்தியினால் அமைதி சகோதரவாஞ்சை முதலிய சற்குணங்களை மக்களிடையே உண்டுபண்ணி, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் முன்னேற்றமடைந்து வந்த அநீதி அதிக்கிரமங்களை அழித்தொழித்துவிட்டதன் பயனாய் ஆயிரக்கணக்கான வழிகேடர்கள் நேர்வழி பெற்றுவிட்டனர்; கணக்கற்ற காட்டுமிராண்டித் தனமுடையவர்கள் மானிடத்தன்மையுடையவர்களாய்மாறி விட்டனர். எனவே, இவ்வேதம் உலகின் போக்கையேமாற்றி கல்வி அறிவு அற்றோரை விவேகிகளாகவும் அனியாயகாரர்களை கிருபையுடையோராகவும் மிதமிஞ்சிய சுகபோகங்களை அனுபவித்து வந்தவர்களை பேணுதலுடையவர்களாயும் ஆக்கிவைத்து விட்டது. இவ்வாறான மேன்மை பொருந்திய வேதமானது இதுகாலை 40 கோடி மக்களுக்கு அதிகாரம்புரிந்து கொண்டிருப்பதன் பயனாய் அன்னோர் அதன் கட்டளைக்குக் கீழ்படிந்து நடக்க தங்களை தத்தம் செய்திருக்கின்றார்கள்.

புரோப்ஸர் ஹார்பட்வாயில்.

ஐரோப்பிய சரித்திராசிரியர்களில் உண்மையை அதிகம் எடுத்துரைப்பவராகிய புரோப்ஸர் ஹார்பட்வாயில் என்பவர் 'ஏலெக்ஸரான இஸ்லாம்' என்னும் நூலில் அடியிற்காணுமாறு வரைகின்றார்:—

சற்குணம் நேர்வழிபெறுவதற்குள்ள வழிகளும், அதிஅற்புதநுட்பமான வாக்கியங்களும் நிறைந்திலங்கிக்கொண்டிருக்கும் குர்ஆனானது, உலகின் நானுபாகங்களிலும் இருள்சூழ்ந்துகொண்டு பூமிமுழுதிலும் யாதொரு நன்மையும் தென்படாதகாலத்தில், உலகமக்களை நிகரற்ற சீர்திருத்த முடையவர்களாயும் அநாகரீகர்களை நாகரீகம்பெற்ற சீர்திருத்தவாதிகளாகவும் செய்துவிட்டது. அதன் வாக்கியங்களில் அமைந்து கிடக்கும் அபாரக் கருத்துக்களை ஆழ்ந்து நோக்குபவன் நிகரில்லா இணையற்ற பரிபூர்ண சட்டத்தைப்பெற்றுக் கொண்டவன் போல் மகிழ்வெய்துவான். சுருங்கக்கூறின், மானிடன் சர்புத்ரனாய்த் திகழ்வதற்குள்ள வழிகளடங்கலும் அதில் மிளிர்ந்து காணப்படுகின்றது. மானிடவாழ்க்கைக்கு இன்றியமையாத ஒவ்வொரு வஸ்துவையும் நாம் எடுத்துக் கொண்டபோதிலும், அதுசம்மந்தமாய் அந்தகுர்ஆனில் கூறப்பட்டிருக்கும் ஒழுங்கு நீதியின்படி ஒருவன் நடப்பானாகில் அவன் நிச்சயம் முன்னேற்றமடைந்துவிட முடியுமென்பது எமது துணிபு. ஆகவே, மானிடர்களில் சிறந்து விளங்கக் கூடிய குணங்களாய உண்மைபேசுதல், பேணுதல், கிருபை, அன்பு, தயாளம் முதலிய சகல நேர்வழிகளும் குர்ஆனில் காணப்படுகின்றன. இதுவன்றி உலகசம்மந்தமுடைய குணங்களாய சொல் உறுதி, தைரியம், வீரியம், பிரயாசைப்படல், கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளல் முதலிய சகல நேர்வழிகளும் அதில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. சுருங்கக்கூறின், அஃது நிகரற்றதோர் சட்டகிரந்தமாய் இலங்கா நிற்கிறதென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

ஜான்டியூன் போர்ட்

மிஸ்டர் ஜான்டியூன் போர்ட் என்னும் பிரக்யாதிபெற்ற ஆராய்ச்சியாளர் தமது

'தி கிரேட் டீச்சர்' என்னும் நூலில் வரைவதாவது :—

ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்களுக்குப் பின் உலகின் நிலைமை மாறுதலடைந்துவிட்டதன் பயனாய், ஒவ்வொரு திசையிலும் அறியாமை என்னும் இருளே சூழ்ந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு பக்கலும் சமாதானமின்மை, அச்சந்தீராமை என்னும் கங்கியே சுடர்விட்டெறிந்துகொண்டிருந்தது; கற்கள் வணக்கத்துக்குத் தகுதியுடையதெனக் கருதப்பட்டுவந்தது; துர்வார்த்தைபாடுவதை விட்டு யாரும் தங்கள் நாவைப் பேணுதலுடன்வைத்துக்கொள்பவர்களாயில்லை. இந்நிலைமையில் 611-ம் ஆண்டில் (ஹஸ்ரத்) முஹம்மது (ஸல்.) இப்பூவுலகின்கண் ஜனனமாகி குர்ஆனின் சத்போதனைகளைப் பிரசாரஞ்செய்தார்கள். அந்த குர்ஆனானது வெகு சுளிவானவும், சாமான்யரும் விளங்கிக்கொள்ளக்கூடியவுமான ஓர் மார்க்கசட்டமாக இருக்கின்றது. அதில் மானிட வாழ்க்கையின் சீர்திருத்தத்துக்குள்ள சகலனவும் மிளிர்ந்து கிடக்கின்றது. அதிலுள்ள முக்கிய பிரதான விசேஷமென்னவெனின், அதன் போதனைகள் யாவும் மானிடத் தற்சுபாவத்துக்கேற்றதாய் அமைந்திருப்பதேயாகும். அது தனது சத்போதனையால் மானிடர்களைச் சீர்திருத்தத்தின் பக்கல் அழைக்கின்றது. அதன் பொது போதனையால், மடமைகுடிகொண்டிருந்த காட்டுமிராண்டிகளான அரபியர்கள் சீர்திருத்தம் பெற்றபேணுதலுடையவர்களாய் விட்டார்கள். சன்மார்க்க சம்மந்தமான இச்சட்டமானது ஒருபக்கல் ஆத்மசீர்திருத்தத்தை அளித்துவந்ததுடன் மற்றொருபக்கல் உலகமுன்னேற்றத்துக்கான நிகரற்ற சட்டதிட்டங்களையும் கற்பித்துக் கொடுத்திருக்கின்றது. அது மானிடர்களை நோக்கி, உங்கள் வாழ்க்கைக்காக கஷ்டப்பட்டுத் தேடுவதைத்தவிர யாதொன்றையும் அடைய முடியாது எனக் கூறுகின்றது. சாமான்ய மனிதனும்அந்தபோதனைகளை நன்கு ஆராய்ந்து பார்த்தபின், மானிடரின் தற்சுபாவத்துக்கு மாற்றமாயுள்ள ஏதாகிலுமொன்று அதிலிருப்பதாகக் கூறமுடியுமா? அதனை சிந்தையில்கொண்டு நடந்தவன் ஆத்மபரிசுத்தமடைந்துவிடுகிறான் என்பதற்கு சரித்திரம் சான்றுபகருகின்றது. இதுவன்றி உலக விவகாரங்களிலும் அதனைப் பின்பற்றி நடப்பவன் அபார அனுபவசாலியாய் விடுகின்றான்; அவனை யாவரும் அணைத்து ஆலோசனைசொல்பவனாய்ச் செய்து கொள்ளுகின்றார்கள்; பணக்காரன் ஏழை என்னும் வித்தியாசமின்றி எல்லோருடனும் ஒரே விதமாய் நடந்து கொள்கின்றான். நாம் எதார்த்தமாகக் கூறுவோமாகில், மானிடர்களை நன்மையின் பக்கல் அழைப்பதற்கும் கெடுதியைவிட்டுக் காப்பாற்றிக்கொள்வதற்கும் சத்தியசன்மார்க்க வழிகாண்பிப்பதற்கும் குர்ஆனைவிட வேறு எதையும் காண முடியாதென்பது என் துணிபு.

சரித்திர ஆசிரியர் கிப்பன்

மிஸ்டர் கிப்பன் என்பவர் தமது 'தி ஹிஸ்டரி ஆப் இஸ்லாம்' என்னும் பிரக்யாதிபெற்ற சரித்திர நூலில் பின்வருமாறு கூறுகின்றார் :—

குர்ஆனானது நேர்வழி பெறுவதற்குள்ள நிகரற்ற கிரந்தமாய் விளங்குகிறதென்பதை ஒவ்வொரு நியாயவாதியும் தானே கூறுவதற்கு நிர்பந்திக்கப்பட்டவராயிருக்கின்றார். அதன் சத்தியபோதனையானது மானிட தற்சுபாவத்துக்கு ஒற்றமைந்ததாயிருக்கின்றது. அது பிரயோசனமளிப்பதில் பிரத்தியேக அபார சக்தியை தன்னுள் அமைத்து வைத்திருக்கின்றது. எனவே காட்டுமிராண்டிகளான அரபியர்களைத் தக்கமுறையில் சீர்திருத்தம் செய்து சகோதரவாஞ்சை, அன்பு, பிரீதி இவைகளை அவர்களின் மனதில் நிறப்பியதுடன் இரத்தப்பளியை அவர்களின் மனதைவிட்டு அகற்றியுவிட்டது. இச்சேவை குர்ஆனின் அபார சக்தியேயாகும்.

பைரோஜ் ஷாஹ், எம். ஏ.

பார்ஸீ வகுப்புத் தலைவரும் 'ஜாமஜம்ஷீத்' பத்திரிகையின் உப ஆசிரியருமான பைரோஜ் ஷா, M. A., என்பவர் தம்மாலியற்றப்பெற்ற 'மார்க்கப்பிரகாசம்' என்னும் கிரந்தத்தில் அடியிற்காணுமாறு கூறுகின்றார் :—

குர்ஆனானது முஸ்லிம்களின் மார்க்க சம்மந்தமாயுள்ள ஓர் கிரந்தமாகும். அதற்கேற்பட்டிருக்கும் கீர்த்தி மகாத்மியம் முதலியவைகள் வேறு எந்த கிரந்தத்துக்கு மேற்பட்டிருக்கவில்லை. இது, உலகமுழுதிலும் அனீதி அதிக்கிரமென்னும் பேரமளி ஏற்பட்டு நாஞபாகங்களிலும் திடுக்கம், அமைதியின்மை காணப்பட்டிருந்த தக்க சமயத்தில் உலகோர் முன் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்.) எந்த இடத்தில் ஜனனமானார்களோ, இன்னும் எந்த இடத்தில் இவ்வேதம்

ஆரம்பமானதோ அந்த அரபுதேசமானது உலகத்தின் இதரபாகங்களைவிட மிகமிக கெடுதியான நிலைமையிலிருந்து வந்தது. எனவே, ஆங்கு எவ்வாறான சட்ட திட்டத்துடன் கூடிய அதிகாரமுமிருக்கவில்லை; அங்குள்ளோர் சிறிய அற்பவிஷயங்களுக்கெல்லாம் மிருகங்களைப்போன்று சச்சரவு செய்து கொள்பவர்களாயிருந்தார்கள்; அந்த சச்சரவு நூற்றுக்கணக்கான காலம்வரை துயர்படியாய் நிகழ்ந்துகொண்டுமிருந்தது. விக்கிரக ஆராதனையும் வழிப்பறிக்கொள்ளையும் அரபுநாட்டில் வசிப்பவர்கள் ஆனந்தத்தோடு செய்யும் காரியமாக இருந்தது. அன்னோரின் இருதயங்களில் இருள்சூழந்திருந்ததால் இப்பாவக் காரியங்களைச் செய்வதுகொண்டு பெருமைபாராட்டுபவர் களாயிருந்தார்கள். இதுகாலை சீர்திருத்தத்தின் முன்னணியில் நிற்பதாய்ப் பெருமை பாராட்டிக் கொண்டிருக்கும் ஐரோப்பாவும் அதுபொழுது இவ்வாறான தாழ்ந்த நிலைமையில் தானிருந்தது. எனவே, அதன் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் அறியாமை என்னும் அந்தகாரமே சூழ்ந்து ஒழுங்கான சட்டதிட்டங்கள் இல்லாது ஒழிந்திருந்ததன்பயனாய், அங்குமானிடத் தன்மைக்கு யாதொருசங்கையுமில்லாதிருந்தது. இந்நிலைமையில் அரேபியாவில் நேர்வழி என்னும்சூரியன் பிரகாசிக்க ஆரம்பித்து முஹம்மது (ஸல்.) அவர்கள் குர்ஆனை உலகோர்முன் வெளிப்படுத்தவே, அதன் சாதாரண போதனையானது உலகிலேயே ஒரு பெரும் மாறுதலையுண்டுபண்ணி ஒழுக்கம் ஞாயம் இவைகளின் பிரகாசத்தைப் பரத்திவைத்து விட்டது.

ஷான்தாராம், எம். ஏ.

பம்பாயிலுள்ள ஆந்திர காலாசாலையின் புரோப்ஸராகிய பண்டிட் ஷான்தாராம் என்பவர் தம்மால் இயற்றப்பெற்ற 'ஹஸ்ரத் முஹம்மது சாஹிப்கா ஜியூன் ஸர்தர்' என்னும் கியாதிவாய்ந்த நூலில் கூறியிருப்பதாவது :—

இஸ்லாம் மதமானது இவ்வாறான நிகரற்ற முன்னேற்றத்தை எவ்வாறு அடைந்தது? எக்காரணத்தால் குர்ஆனுக்கு இவ்வாறான கியாதி ஏற்பட்டுஜெயம்பெற்று வருகிறதென்பதை எத்துணையோ ஆண்டுகள்வரை யான் சிந்தனை செய்து பார்த்ததில், அதன் சத்போதனைகள் சுளிவாகவும் பொது விளக்கமுடையதாயும் அதன் கட்டளைகள் மானிட சுபாவத்துக்கேற்றதாயும் அமைந்திருப்பதுதான் பிரதானக் காரணமென்று நன்குதெரிந்துகொண்டேனாகையால், அதில் கூறப்பட்டுள்ள எவ்விஷயமும் மானிடர்களால் அனுஷ்டித்து நடக்க முடியாதவையாகவும் அல்லது அதனால் பழிப்பு ஏற்படக்கூடியதாகவு மிருக்கவில்லை என்பது பிரத்தியக்ஷம். ஆகவே குர்ஆனானது, எவ்வித சீர்திருத்தத்தையும் விரும்பாத மடமைத்தனம் நிறைபூர்ணமாய்க் காணப்பட்ட அரபியர்களை தக்கமுறையில் சீர்திருத்தம்செய்து நேர்வழிக்குக் கொணர்ந்துவிட்டது; அநேக நூற்றாண்டுகளாய் வளர்ந்து முதிர்ச்சியடைந்திருந்த வழிகேடுகளெல்லாம் சில நிமிஷ நேரத்தில் பஸ்மமாக்கப்பட்டுப் போயிற்று. சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் தங்கள் சோதரர்களின் இரத்தங்களை ஒட்டிக்கொண்டிருந்த அந்த மூடமதி கொண்ட மாக்கள் சமாதானம் சகோதர வாஞ்சையின் கொடிதாங்கிபவர்களாய் வெளிவந்தது குர்ஆனின் பிரத்தியேக விசேஷித்த மகிமையாகுமென்பது திண்ணம்.

நேயர்காள்! இவ்வாறு பிரமதஸ்தர்களால் போற்றிப் புகழப்பட்டு வரும் குர்ஆன் ஷரீபின் மீது இதுகாலை இதர மதஸ்தரிலுள்ள அறியா மாக்கள் குறைகூறி வருவது ஒருபக்கல் கிடக்க, நம்மவரென்று நவிலும் ஒரு சில வேஷதாரிகள் திருமறையின் திவ்யமொழிகள் அமைந்துள்ள வாக்கியங்களுக்கு குயுக்தியான வியாக்யானஞ்செய்து நம்மக்களை வழிகெடுப்பது பரிதபிக்கத்தக்க விஷயமன்றோ? எல்லாம் வல்ல அல்லாஹ்தஆலா நம்மனைவர்களையும் அவ்வாறான குயுக்திவாதஞ் செய்பவர்களின் அடாச் செயல்களினின்று காப்பாற்றிக் கொள்வானாக.

சந்தா நேயர்கட்கு!

1934-ம் ஆண்டு ஆரம்பமாகி நான்கு மாதங்கள் சென்று போயும், அநேகர் தங்கள் சந்தாக்களை அனுப்பாமலே யிருந்து வருகின்றீர்கள். சந்தாக்களை முன் பணமாக அனுப்பி அருமை மாசிகையை அன்போடு ஆதரித்து வந்தால் தான் தக்க முறையில் நடத்திச் செல்ல ஹேதுவாயிருக்குமென்பது உங்களுக்குத் தெரியாத விஷயமன்று. ஆகவே உங்கள் சந்தாக்களையும் உங்கள் நண்பர்களின் சந்தாக்களையும் அனுப்பிவைத்து ஆதரவு புரிவீர்களென்று மிக மிக எதிர்பார்க்கின்றோம்.

மானேஜர்.

முஸ்லிம்கள் உணர்ச்சி பெறுவார்களா ?

கரீம்பக்ஷ் 'அல்லாஹ் அக்பர்' என்று வெளியிடும் ஓசையானது 'ஹிஸார்' என்னுமூரிலுள்ள பள்ளிவாயலின் சுவர் முழுதிலும் எதிரொலி பரப்பிக்கொண்டிருந்தது. அவருக்கு மஸ்ஜிதின்மீது அளவற்ற பற்றுதல் ஏற்பட்டிருந்ததால் அவருடைய அதிகநேரத்தை அங்கேயே போக்கிக் கொண்டிருந்தார். கரீம்பக்ஷ் எழுதப்படிக்கத் தெரியாத மனிதராயிருந்தும் மார்க்கப்பற்றில் கற்றறிந்த ஒரு ஆலிமைப் போல் விளங்கினர். சன்மார்க்கப் பற்றுதலுக்குப் பின் அவருக்கு தன் இளவாலிபமுடைய மனேயாளாகிய 'ஈதின்' மீது அடுத்தபடியாக முழுவிருப்பமுமிருந்து வந்தது. அவ்விளநங்கை அழகு சௌந்தரியமில்லாதவளாயிருந்தும் அவளது வதனத்தில் மனக் கவர்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஒருவித தேஜஸ் வெளியாய்க் கொண்டிருந்தது. எனவே, அவ்விளநங்கை நறுமணங்கமழும் புஷ்பம்போல் திகழ்ந்தாளாகையால், அவர் மோகங்கொண்ட பறவையைப் போலாய்விட்டார்.

'ஈதின்' என்னும் இந் நங்கை குக்கிராமவாசியாயும், அவளது தாய்தந்தையர்கள் மார்க்கமறியா மதீயீனர்களாயுமிருந்த திணிமித்தம் அவளுக்கு மார்க்க அறிவு புகட்டாதிருந்தால் விவாகத்துக்கு முன் தொழுகை நோன்பு போன்ற சன்மார்க்கப் பிரதானக் கடைமைகளைக்கூடத் தெரிந்து கொள்ளாதவளாயிருந்தாள். ஆனால், தான் ஒரு முஸ்லிம் மாதுவென்றும், தன் நாயன் ஒருவனென்றும், தன் தீர்க்கதரிசி கடைசி நபியாகுமென்று மட்டும் நிர்ணயங்கொண்டிருந்தாளாகையால் அவள், தன்னை முஸ்லிம் மாதுவென்று கருதிக்கொண்டாள். அவள் ஈதுடைய நாளில் ஜனனமான திஞல் ஈதின் என்று பெயரிடப்பட்டிருந்தாள். அதனுல் அவள் பிறப்பிலிருந்தே நற்குறியுடைய சீதேவியாக விளங்குவதற்குள்ள அறிகுறி ஏற்பட்டுப்போயிற்று.

கரீம்பக்ஷ் சிறுபிராய முதல் தொழுகை நோன்பு போன்ற மார்க்கக் கடைமைகளை பயபக்தியோடு நிறைவேற்றி வந்தாராகையால் அவருடைய ஒரு நேரத்துத் தொழுகையும் தவறிப் போகாது சரிவர நிறைவேற்றப்பட்டு வந்தது. அதிகாலையில் வெகு நேரத்தோடு எழுந்து பள்ளிவாசலுக்குச் சென்று ஒளுச் செய்து தமது முழுவிருப்பமான சந்தோஷத்தோடு 'அல்லாஹ் அக்பர்' என்னும் சப்தத்தை உயர்த்தி ஏகத்துவவாதிகளை இணையற்ற அல்லாஹ்வின் வணக்கத்தின் பக்கல் அழைப்பது அவருக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகயிருந்தது. எனவே அவர் எல்லோருக்குமுன் பள்ளிவாசலில் நுழைந்து கடைசியில் அதைவிட்டு வெளியாகிறவராயிருந்தார்.

ஆரம்பத்தில் இவரது செய்கையானது ஈதினுக்குப் பிடித்தமாக இல்லாத போதிலும், கரீம்பக்ஷ் தன் எஜமானுடன் கலப்பற்ற பிரீதி கொண்டிருப்பதானது மார்க்கப்பற்றுடைய அவருடைய மனேயாளின் மனதைக் கவர்ச் செய்து விட்டது. எனவே, தன் புருடன் அதிகாலையில் எழுந்து பள்ளிக்குச் செல்வதும் ஐந்து நேரத் தொழுகையையும் ஒழுங்குடன் அதற்குள்ள நேரங்களில் நிறைவேற்றுவதும் ஈதின் மனதில் ஒருவித விருப்பத்தை அளித்ததன் பயனுய் தானும் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் எண்ணம் அவளுடைய மனதில் இடம்பெற்றுவிட்டது. இந்நிலைமையில் ஒருநாளன்று கரீம்பக்ஷ் இஷாத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வீடுவருங்காலை, ஈதின் தன் பர்தாவை நோக்கி, பெண்களுக்கு தொழுகை மன்னிக்கப்பட்டுப் போயிற்ரு? என வினவினள். உடனே கரீம்பக்ஷ் தமது சட்டைக்கையை உயர்த்திக்கொண்டு குஞ்சு தாடியை உருவிக்கொண்டே, நமது சன்மார்க்கத்தில் ஆண்பெண் என்னும் வித்தியாசமின்றி யாவர் மீதும் தொழுகை கடைமையாக்கப் பட்டிருக்கிறது என்று கூறினர். உடனே அம் மாது சிரோன்மணி தன் பர்தாவை நோக்கி எதற்காக இதுவரை என்னைத் தொழும்படி கூறவில்லை எனக்கேட்டாள். அதற்கு அவர், உன்னை யான் விவாகஞ்செய்து கொள்வதாகக் கூட சொல்லவில்லைபோலும்! எனக் கூறினர். உடனே ஈதின், கோபத்தைவிட அன்பு நிறைந்திருக்கும்படியான தன் பர்தாவின் வதனத்தை

நோக்கி, யாரும் என்னை அழைக்காது தானுக வா தங்களிடம் வந்துவிட்டேன் னெனக்கேட்டாள். உடனே கரீம்பக்ஷ், தொழுகும்படி வாயால் சொல்லாது அனுஷ்டான முறையில் தொழுகையை அறிவித்து வந்திருக்கிறேன்: உனக்கு முன்பாகவே ஐந்து நேரமும் ஒளூச் செய்துகொண்டு பள்ளிக்குச்சென்று வருவது உனக்குத் தெரியவில்லையா? சரி! நல்லது இப்பொழுது வீட்டிலேயே ஒளூச்செய்கின்றேன்; அதனைப் பார்த்துக்கொண்டு ஒளூச்செய்வதற்குக் கற்றுக்கொள்வாயாக. ஈதின் நாணத்தால் தலைகுனிந்து மெல்லியதொனியில் நல்லது, இதுபொழுது எனக்குதொழும் முறையைக் கற்பித்துக்கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அவர், அல்லாஹ் தஆலா தொழுகையின்மீதுவிருப்பத்தைக் கொடுத்துவிடுவானுகில் இரண்டு மூன்று தினத்தில் தொழுகை நிறைவேற்றும் விதத்தைத் தெரிந்துகொள்வாய்! ஈதின் என்னும் மாது, ஒருவிஷயத்தைத் தெரிந்துகொள்ள ஆர்வங்கொள்பவர்களே போன்று கரீம்பக்ஷ்இடத்தில் தொழுகையை நிறைவேற்றும் முறையைதக்கவிதத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றவளாய்விட்டாள்.

அதற்குப்பின் கரீம்பக்ஷ்க்கு பாங்கு சொல்வதன்மீது முன்னைவிட அதிகப்பிரீதி ஏற்பட்டு பாங்கு சொல்வதற்காக நிற்குந்தோரெல்லாம், இதுபொழுது ஈதினும் ஒளூச்செய்துகொண்டு தொழுகைக்காக ஆயுத்தமாயிருப்பாள் என்னும் எண்ணம் அவருடைய மனதில் ஊசலாடமுற்பட்டுவிடும்.

ஈதின் என்பவள் ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்து சூரியன் உதயமாதவற்கு முன் 2 படி கோதுமை அறைத்து விடுவதால் அவளுக்கு எவ்வளவு சந்தோஷ மேற்பட்டுக் கொண்டிருந்ததோ அதைவிட பதிமடங்கு சந்தோஷம், அதிகாலையில் எழுந்து பஜ்ர் தொழுகையை நிறைவேற்றுவதால் ஏற்பட்டுக் கொண்டுவந்தது.

பள்ளிவாசலில் வெளுத்த தாடியையுடைய ஒரு விர்த்தாபிபர் வந்து மனக்கவர்ச்சியைக் கொடுக்கக்கூடிய தமது பிரசங்கமென்னும் வலையைவீசி யாவரையும் வசப்படுத்திவிட்டார். எனவே, அவருடைய வார்த்தையில் இனிமையும் கண்களில் ஒருவித கவர்ச்சியின் சக்தியும் காணப்பட்டதால் கரீம்பக்ஷ் அவரிடத்தில் பூர்ண நம்பிக்கை கொணடவராய் விட்டார். புருடன் கொண்டிருந்த பிரீதியின் பயனுக ஈதினும் அப்பெரியார்மீது நநம்பிக்கை கொண்டு அவருக்குப்பணி செய்வதைத் தமது பாக்கியமெனக் கருத ஆரம்பித்தாள். அநேகமாய் மௌலானு, கரீம் பக்ஷின் இல்லத்திலேயே போஜன மருந்திக்கொண்டிருந்ததால் ஈதின் அதிகப்பிரயாசையோடு அவருக்காக அன்ன ஆகாராதிகள் தயாரித்து, தாங்கள் எதைப் புசித்தபோதிலும் அவருக்காக கோதுமை உண்ணக்கொடுத்தும், தாங்கள் எண்ணெய் உபயோகித்தபோதிலும் அவருக்கு நெய்தருவித்தும் தக்கபடி உணவு தயாரித்துக்கொடுத்து வந்தாள்.

இந்நிலைமையில், இரண்டு வாரத்துக்குப்பின் மௌலானு அவர்கள் வெளியூர் புறப்பட்டுச் செல்லக்கருதியபோது கரீம்பகஷ் மிக்க மேதை மரியாதையோடு முன்வந்து, மௌலானு அவர்களே! ஹஜ்ஜு செய்வதற்கு என்மனம் அதிக விருப்பங்கொண்டுஅதிலேயே என் முழு கவனமும் செல்படியாய்க்கொண்டிருக்கிறது; என் மனைவி திருகைசுற்றி எழுவருடத்தில் 200 ரூபாய் சேகரித்து வைத்திருக்கின்ருள்; இத்தொகையால் அந்தக்காரியம் நிறைவேறுவதாகயிருந்தால் அல்லாஹ்வுக்காக பெரிய மனது வைத்து யாருடனுகிலும் என்னை அங்கு அனுப்பிவிடுங்கள்; யான் அங்கு சென்று பெருமானர் (ஸல்.) அவர்களின் 'ரௌளா' ஷரீபை தெரிசித்து வருகிறேன் என மிக தயவாய் வேண்டிக்கொண்டார். கரீம்பக்ஷ் மிக்க தாழ்மையோடு உருகிய மனத்தோடு வேண்டுதல் புரிந்து கொண்டதைக் கண்ணுற்ற மௌலானுவின் கண்களிலிருந்து தாரைதாரையாக தண்ணீர் வடிய ஆரம்பித்தது. உடனே கரீம் பக்ஷை விழித்து, நீர் அல்லாஹ்வின் உண்மை அடியாராக இருக்கும்; உம்மிடம் 200 ரூபாய் இருக்கும் நிலைமையில் ஹஜ்ஜுப் பிரயாணஞ் செய்து வரவேண்டுமென்று உறுதிகொண்டிருக்கின்றீர்; என் விஷயத்தை நினைக்கும்போது பெரும் கவலையைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது; இதுபொழுது என்னிடம் 2 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக இருக்கும் நிலைமையில் என் மனதில் ஒருபொழுதும் இவ்வாருன எண்ணமே ஏற்படவேயில்லை. உமது ஹிருதயத்தில் தோன்றிய எண்ணம் மிகமிக மேலானதாயிருக்கின்றது. இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் பொழுது மௌல்வீ சாஹிப் அவர்களுக்கு ஒருவித நிலைமை ஏற்பட்டதால் அதிலேயே மூழ்

கியவராயிருந்தார். கரீம்பக்ஷும் அவருடனே யே இருந்ததால்அவரைநோக்கி, யான்என்னிட மிருக்கும் தொகையுடன் ஒரு ஆயிரத்தைச் சேர்த்து மூவ்வாயிரமாக என் குமாரரிடம்வியா பாரஞ் செய்வதற்காகக் கொடுத்துவிட கருதி யிருந்தேன். சம்பாத்தியஞ் செய்வதிலேயே என் வாணுளும் கழிந்துவிட்டபோதிலும் பண ஆசை என் மனதைவிட்டு அகன்றுபோகவே யில்லை. நான் இந்த பன்னிரண்டு மாதமாக ஹிந் துஸ்தானைச்சுற்றி சாமான்ய மனிதர்களை எல் லாம் ஏமாற்றி, சில இடங்களில் பள்ளிவாசல் பெயரையும் சில இடங்களில் மத்ரஸாவின் பெய ரையும் வைத்து பணம் பறித்து வருகிறேன். ஆனல் இன்று அல்லாஹ்வின் கிருபை யால் மறதிகேட்டை விட்டு வெளிவந்து மானிடன் முக்திபெறுவதற்கு எப்பாதையில் நடக்கவேண்டு மென்பதையும் தெரிந்து கொண்டு விட்டேனுகையால் யான்மிக நன்றி யுள்ளவனுகயிருப்பதுடன் உம்மை எனக்கு நேர்வழி காட்டி என்பதாகவும் எண்ணுகின் றேன். ஆகவே, தாம் எம்மோடு ஹஜ்ஜுப் பிரயாணஞ் செய்யவேண்டு மென்பதை உம் மிடம்வேண்டிக் கொள்கிறேன். யான் நம்மிரு வரின் செலவுக்காக வேண்டியும் ஆயிரம் ரூபாய் கொண்டு வருகிறேன். அது இருவருக் கும் போதுமாகும். உம்மிடமிருக்கும் இரு நூறு ரூபாயையும் ஈதின் இடம் கொடுத்து விட்டு வருவாயாக எனக்கூறினர்.

மௌலவீ சாஹிப் அவர்களே! நல்லது. அந்த 200 ரூபாயையும் எடுத்து வருகிறேன்; தங்களுடன் யான் செல்வதே எனக்குப் போதும்; யான் கூலிவேலை செய்யக்கூடியவ னுகையால் என் கை வசமிருக்கும் ரூபாய் செலவானவுடன் கஷ்டமெடுத்து கூலிவேலை செய்து என் தேவையைப் பூர்த்திசெய்துகொள் வேன் என கரீம்பக்ஷ் கூறினர். அதன்மீது மௌல்வீ சாஹிப் வற்புறுத்திக்கூறியும் கரீம் பக்ஷ் அவரிடமிருந்து பண உபகாரம் பெறு வதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

கரீம்பக்ஷ், 'ஈதுல்பித்ர்' பெருநாள் கழிந்தவுடன் பம்பாய் போய்ச் சேர்ந்து மௌல்வீ சாஹிபை யும் சந்தித்தார். மௌலவீ சாஹிப் தக்க கல்வி அறிவுடையவராகவும் செல்வாக்குள்ளவராயு மிருந்ததால் பம்பாயின் பற்பல பாகங்களுக்கும் சென்று வந்ததால் அவரைக்கண்டு கொள் வதில் கரீம்பக்ஷுக்கு சிரமமேற்படவில்லை. ன்னர் டிக்கட்பெறும் வேலை, கப்பலில் இட வசதி பெறுவது முதலிய சகல காரியமும் மௌல்வீ சாஹிபின் விருப்பப்படியே நடை பெற்றது. அங்குகரீம்பக்ஷ் ஒரு இடத்தில் உட்கார்ந்துகொண்டு சாமான்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஷவ்வால் மீ 4-ந்தேதி கப்பல் பம்பாய் துறைமுகமிருந்துபிரயாணமாயிற்று. மௌல்வீ சாஹிப் சுயதேசத்தை விட்டுப்பிரிய நேர்ந்த தையுன்னி மனேநிம்மதியற்றவராயும், நிலைமை மாறியவராயு மிருந்தார். ஆனல் கரீம்பக்ஷின் மனதிலோ அல்லாஹ்வின் வீட்டை சந்திக்க வேண்டுமென்னும்பிரீதிஅதிகரித்துஅதிலேயே மோகங்கொண்டு விட்டாராகையால், பம்பாயி லிருந்து கப்பல் அதிக தூரம் செல்லச் செல்ல அவ்வளவுக்கு சந்தோஷமும் அதிகரித்துக் கொண்டே போயிற்று. எனவே சுடர் நெறுப் புக்கங்கிக்குச் சமீபத்திலிருப்பதை விட்டு உல்லாசப் பூங்காவனத்துக்குச் சமீபம் செல்ப வரே போன்று மனதில் ஒருவித ஆனந்த பரவசம் கொண்டார். ஆகையால் அவர் திரே கத்தில் ஓர் உணர்ச்சி ஏற்பட்டு மௌல்வீ சாஹிபை நோக்கி, ஹஜ்ரத்! ஈதினையும் அழைத்து வராத்ததால் நான் ரொம்ப விசனப் படுகின்றேன்; துர்அதிர்ஷ்ட வசமாய் செல வுக்குப் பண மில்லாது போய்விட்டது; ரூபாயை எதிர்பார்த்துக்கொண்டே ஒவ்வொரு ஆண்டுகளாகச் செல்படியாய்க் கொண்டிருந் தது.

கவலையடைய வேண்டாம்; இதுபொழுது ஈதினுக்கும் ஹஜ்ஜுடைய நன்மை கிடைத்து விட்டது; அவள் உமக்கு பண உதவி செய் திருக்கின்றுள் என மௌல்வீ சாஹிப் கூறி னர். பம்பாயிலிருந்து கப்பல் பிரயாணமானது முதல் மௌல்வீ சாஹிபுக்கு சற்று சுகக் குறைவு ஏற்பட்டு விட்டது: ஆரம்பமாக மிதமிஞ்சிய வாந்தி ஏற்பட்டு தொந்திரை கொடுத்தது. பின்னர் ஜுரம் ஆரம்பமாயிற்று. அதுபொழுது கரீம்பக்ஷ் தக்க உபசரணை புரிந்தார். ஆனல் மௌல்வீ சாஹிபுக்கு வயது அதிகமாய் விட்டதால் காற்று வித்தியா சத்தால் 'அதன்' செல்வதற்குள் அவருடைய உடம்புசரியான நிலைமையிலில்லாது போயிற்று. அதனல் தாம் பிழைப்பது கஷ்டமெனத் தெரிந்துகொண்ட மௌல்வீ சாஹிப், கரீம்பக் ஷை சமீபத்திலழைத்து, அன்பார்ந்த நண்பரே! யான் பாக்கியமற்றவனுக இருக்கின்றேன்; பீர் கபரில் தொங்கிக்கொண்டிருக்கும்போது ஹஜ்

ஜுடைய நாட்டம் ஏற்பட்டிருக்கிறது; அல்லாஹ்தஆலா அந்த பாக்கியத்தை எனக்களிக்க மாட்டான்போலிருக்கிறது; யான் இன்னும் சில நாளின் விருந்தாளியாகத்தான் இவ்வுலகில் இருப்பேன்போல்தோன்கிறது. ஆகவே ஏதாகிலும் அசம்பாவிதம் நிகழ்ந்துவடுமாகில், பயப்படாது மனதை தைரியப்படுத்திக்கொண்டுஅல்லாஹ்வின் மீது நம்பிக்கைக்கொண்டு மற்ற காரியங்களை கவனித்துச் செல்லவேண்டும்; குறிப்பிட்டுச் செல்லுமிடம் போய்ச்சேர்ந்தவுடன் எனக்காகப் பிரார்த்தனை புரியவேண்டும்; என் வாணாள் முழுதும் முகஸ்துதிசெய்வதிலேயே செல்படியாய் கடைசியாக உம்முடைய செயற்கையால் அந்த வியாதி விலகிப்போயிருக்கிறது. ஆகவே கஃபத்துல்லாவின் பர்தா — திரையைப் பிடித்து பாவ மன்னிப்புத் தேடவேண்டுமென்னும் 'அவா' எனக்கதிகரித்திருந்தும் துர்அதிர்ஷ்டவசமாய் அவ்வாறான சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமென்பது புலனாகவில்லை. தாம் நற்சுகமாய் அங்கு சென்றவுடன் எனக்காக அந்தக் காரியத்தை நிறைவேற்றிவிடவேண்டும். அல்லாஹ்தஆலா உமக்கு மட்டற்ற நற்பாக்கியங்களை அளிப்பானாக. என்னுடைய சாமான்களையெல்லாம் உம்முடையதாகக் கருதி உமதிஷ்டப்படி செலவுசெய்து கொள்வாயாகயெனக் கூறினார்.

இவ்வார்த்தைகளைக் கூறிவிட்டு மௌல்வீ சாஹிப் வாய்மூடிக்கொண்டார். பின்னர் இரவில் அவருடைய ஆத்மா உடலினின்று பிரிந்து போயிற்று. கரீம்பக்ஷுக்கு, மௌல்வீ சாஹிபுடனிருந்தது பெரும் ஆறுதலை அளித்துவந்ததாகையால் ஆரம்பத்தில் பயந்தாராயினும் பிறகு மனதை சமாதானப்படுத்திக்கொண்டு உலகில் தனியாக இருப்பதை பயப்படுவது பெரும் மடத்தனமாகுமென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார்.

ரூபாய்களைத்தவிரயுள்ள சாமான்கள் ஏக தேசத்தில் இருவருக்கும் பொதுவாகையால் கரீம்பக்ஷ் அவைகளை இரண்டாக பாகித்து ஒரு பங்கை தமக்காக வைத்துக்கொண்டு மற்றொரு பங்கை அல்லாஹ்வின் பாதையில் தர்மஞ்செய்துவிட்டார். இதுவன்றி மௌல்வீ சாஹிபின் விரிப்பு, அவருக்குச் சொந்தமான இதர சாமான்களையெல்லாம் பந்தோபஸ்தாக தம்மிடம் வைத்துக்கொண்டார். அத்துடன் மௌல்வி சாஹிபின் ரூபாய்களையும் பத்திரப்படுத்திக்கொண்டார்.

கரீம்பக்ஷ் ஹஜ்ஜை நிறைவேற்றிக்கொண்டு மதீனாமுனவ்வரா சென்று எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் முபாறக்கான ரௌளாஷரீபை தெரிசித்து தமது கண்குளிர்ச்சியை அடைந்தார். அங்கு வந்தவுடன் அவரிடமிருந்த ரூபாய் முழுதும் சரியாய்விட்டதால் அங்கு ஒரு தேயிலைக் கடையில் மாதம் நான்கு ரூபாய் சம்பளத்தில் ஊழியம்புரிய ஏற்றுக்கொண்டார். மௌல்வீ சாஹிபின் ரூபாயில் போதிய அளவு அவரிடமிருப்பது யாருக்கும் தெரியாது. அதைக்கொண்டு தாராளமாய்ச் செலவுசெய்துகொள்ள வசதி ஏற்பட்டிருந்த போதிலும் மரணமடைந்துபோன ஒரு மனிதருடைய சொத்தை எவ்வாறான பராதீனமுஞ் செய்யலாகாதென மனதிலெண்ணி அவை யாவற்றையும் மௌலவீசாஹிபின் குமாரரிடம் சேர்ப்பித்துவிட வேண்டுமென்று ஏற்கனவே உறுதிகொண்டிருந்தாராகையால் மிக ஜாக்கிரதையுடன் அவைகளைப் பாதுகார்த்து வந்தார்.

ஹாஜிகள் திருப்பும் காலமானவுடன் யாவரும் சுயபதியை நோக்கிப் புறப்பட்டார்களாயினும் கரீம்பக்ஷ் இடம் யாதொன்றுமில்லாதத்தால் வீடுதிரும்ப ஹேதுவில்லாது ஐந்தாண்டுவரை அங்கேயே கூலிவேலைசெய்துகொண்டு காலங்கழித்துவந்தார். இதற்கிடையே வியாதியால் பீடிக்கப்பட்டும் பலவாறானகஷ்டசங்கடத்துக்குள்ளாகியும் பெரும்கஷ்டப்படுங்கால் பலவாறான தேவைகள் ஏற்பட்டும் மௌல்வீசாஹிபின் ரூபாயில் அறவே கைவைக்கவில்லை. அங்கிருந்தலைந்தாண்டிற்குள் பெரும் பிரயாசையோடு ஹிந்துஸ்தான் திரும்பி வருவதற்குப் போதுமான ரூபாய்களை சம்பாத்தியஞ் செய்துகொண்டு மதீனாமுனவ்வராவை விட்டுப்பிரிய மனமில்லாதிருக்கும் நிலைமையில், வெகு மனசஞ்சலத்தோடு பிரயாணமானார். அங்கிருந்து தெஹ்லிவரை சௌகரியமாய்ப் பிரயாணஞ்செய்து வந்தார். ஆனால் அதுவரை அவரிடமிருந்த ரூபாய்களெல்லாம் செலவாகி 3, 4 நாள் சாப்பாட்டுக்குப் போதிய அளவுமட்டும் கையிலிருந்ததால் ஹிஸார்வரை ரயில் பிரயாணஞ்செய்யஹேதுவில்லாது கால்நடையாகச்சென்று பெரும்பிரயாசை கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு மூன்றாம் நாள் ஹிஸார் வந்துசேர்ந்தார். இதற்கிடையே ஒவ்வொரு ஆண்டிலும் ஹாஜிகள் திரும்பிவரும் காலம் சமீபிக்கும் பொழுதெல்லாம், ஈதின் தம் கணவரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டே இருப்பாளாகையால், அவர்கள்

வரும்காலம் முடிவு பெற்றவுடன் தமது கண வன் மதீனாவின் மண்ணுக்கு இறையாய்விட்ட தாகக் கருதிக்கொண்டிருந்து விடுவாள். இங்ஙிலே மையில் ஒருவெள்ளிக்கிழமை இரவு ஈதின், கரீம்பக்ஷ் தமக்கு 'ஜம் ஜம்' தண்ணீர் புகட்டு வதுபோல் கனவு கண்டாள்; அன்று திருகை சுற்றிக்கொண்டிருக்கும்போது வலதுகை துடித் துக்கொண்டும் மனதில் ஒருவித திடுக்க மேற் பட்டுக் கொண்டுமிருந்ததால் ஒருக்கால் தன் எஜமான் வரக்கூடுமென்னும் எண்ணம் அவ ளுடைய மனதில் ஊசாடிற்று.

மாலைநேரத்தில்,வீட்டில் உட்கார்ந்துகொண்டு மக்ரிபுக்கு பாங்கு சொல்வதை எதிர்பார்த் திருக்குங்கால் 'அல்லாஹ் அக்பர்' என்னும் சப்தம்கேட்டது. அந்த ஓசை இவளுடைய காதுக்கெட்டியவுடன் மதிமயங்கி விட்டாள்; கரீம்பக்ஷுடைய அதானில் ஏற்பட்டுக்கொண் டிருந்த இன்பத்தை வெகு காலத்துக்குப்பின் பெறுவதாக எண்ணினாள். அந்த பாங்குமுடி வடைந்தவுடன் கரீம்பக்ஷ்வந்துவிட்டாரென்று தெருவெல்லாம் ஒரே கூச்சலேற்பட்டுப் போயிற்று.

ஈதினின் நிலைமையோ அவள் சிலகால் அழுதுகொண்டும் சிலகால் சிறித்துக்கொண்டு மிருந்தாள். பின்னர் ஒருமணிநேரம் வரை யாவரும் கரீம்பக்ஷின் கையை முத்தியிட்டன ராதலின் எல்லோரையும்கண்டு தெரிசித்து விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ஈதின் தலை வாயலண்டை நின்று கண்ணீர்விட்டுக் கொண்டி ருந்தாளாகையால், அதைக்கண்ட கரீம்பக்ஷின் கண்களிலிருந்தும் தண்ணீர்வடிய ஆரம்பித்தது. பின்னர் பிரயாண ஸ்ரமபரிகாரஞ் செய்து கொள்வதற்குமுன் ஈதினை விழித்து, ஏதாகி லும் சிற்றுண்டி தயார் செய்து கொடுத்து விட்டு ரூபாய் கொஞ்சம் கொடுப்பாயாக. இன் னும் எமது பிரயாணம் முடிவடையவில்லை; யான் மௌல்வி சாஹிபின் ஊருக்குச்சென்று அமானிதத்தைச் செலுத்தி வந்து விடுகிறேன் எனக்கூறினர்.

கரீம்பக்ஷ் 6, 7 மணிநேரத்தை வீட்டில் கழித்துவிட்டு பைரோஜ்பூர் சென்று மௌல்வீ சாஹிபின் புத்ரரிடம் ரூபாய் சாமான் முத லிய யாவற்றையும் கொடுத்துவிட்டு,ஒரு வாரத் துக்குப்பின் அங்கிருந்து திரும்பிவந்தார். அது பொழுது ஊர்வாசிகள் யாவரும் கரீம்பக்ஷை நோக்கி, ஹாஜீசாஹிப் அவர்களே! ஒருவார மாக தாங்கள் எங்கு சென்றிருந்தீர்கள் என்று வினவினர். அதற்கு மறுமொழியாக, யான் ஹஜ்ஜுசெய்துவிட்டு வந்துவிட்டேனாயினும் மற்றொரு பிரதானக்கடைமை என்மீதிருந்த தாகையால் பைரோஜ்பூர் சென்று அதனை நிறைவேற்றி வந்தேன் எனக் கூறினர்.

[சோதரீர்! கையில் யாதொரு காசுமில்லா திருந்த கரீம்பக்ஷுக்கு எவ்வாறு ஹஜ்ஜு செய்வதன் மீது விருப்பமேற்பட்டிருந்தது பார்த்தீர்களா? அவருடைய மனைவி திருகை சுற்றி வீட்டுச்செலவு செய்துகொண்டு அதில் மீதப்படுத்தி பர்தாவுக்கு உதவிபுரிந்தது மெச் சத்தக்க செயலல்லவா? மௌல்வீ சாஹிப் தமது ரூபாய் முழுதையும் கரீம்பக்ஷ் செலவு செய்துகொள்ளுமாறு அனுமதியளித்திருந்தும் அதனை அமானத் எனக்கருதி அதற்குடையவ ரிடம் எவ்வாறு கொண்டு சேர்த்தார் பார்த் தீர்களா? தமக்கு எவ்வளவு சங்கடங்கள் நேர்ந்தும் நோய்வாய்ப்பட்டு செலவிற்கு வழி யில்லாது கஷ்டப்படும்பொழுதும் ரயில் பிர யாணஞ் செய்வதற்கு ஹேதுவில்லாது கஷ் டத்துடன் கால் நடையாகச் செல்ல நேர்ந்த காலும் அந்த ஆமானத்தை அப்படியே காப் பாற்றி வந்தது மெச்சத்தக்கதல்லவா? இச் சம்பவங்களை நம் முஸ்லிம் நேயர்கள் கண்டு உணர்ச்சிபெறலாகாதா?]

உத்தமப் பெரியார்கள்

ஹஸ்ரத் அபூஅய்யூப் அன்ஸாரீ (ரலி.)

தங்கள் திருநாமம் காலிதாகும். தந்தையின் பெயர் ஜைத். காரணப்பெயர் 'அபூஅய் யூப்'. தாங்கள் கஜ்ரஜ் கோதிரத்தைச் சார்ந்த பிரக்யாதிபெற்ற முக்கியஸ்தராகும்.

தாங்கள் நுபுவ்வத்தின் 11-ம் ஆண்டு கி. பி. 622-ல் மீனாவுக்குச் சமீபத்திலுள்ள 'லைலத் துல்உக்பா' என்னுமிடத்தில் தூய்மைவாய்ந்த இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்கள். ஹஸ்

ரத் அவர்கள் இஸ்லாத்தைக்கொண்டு சிறப்புற்றபின் சுயபதியாகிய மதீனாமுனவ்வராவுக்குச்சென்று தங்கள் சுற்றத்தார்களை விழித்து, அல்லாஹ் தஆலாவின் கிருபையால் எனக்கு இஸ்லாம் என்னும் காருண்யம் கிடைத்திருக்கின்றது; யான் உத்தமத் தலைவர் எம்பெருமானார் நபிகள்திலகம் முஹம்மதுமுஸ்தபா (ஸல்.) அவர்களின் அடிமைகளிலொருவனாகும் பாக்கியம் பெற்றுவிட்டேன் என அறிவித்து, பெருமானார் (ஸல்.) அவர்கள் உண்மையாகவே அல்லாஹ்வின் பக்கல் அழைக்கிறவர்களாகும்; அவர்களின் பேணுதலானது போற்றக்குறியதாயிருக்கிறது; முழுமனதோடு ஏழைகள்மீது கிருபை பூண்டிருக்கிறார்கள்; அவர்கள் தற்சுபாவத்திலேயே பலவாறான நலன்கள் ஒலித்தோடிக் கொண்டிருக்கிறது; எண்ணங்கள் யாவும் தூய்மைவாய்ந்ததாயும் போற்றக்குறியதாயுமிருக்கின்றது; அவர்கள், அரபிகள் முன் நடந்துகொள்ளும் தோரணையானது அன்னோரின் குணங்களை பரிசுத்தப்படுத்தி விடுவதாகயிருக்கிறது. மகான் அவர்கள் மானிடர்களை இஸ்லாத்தின் பக்கல் அழைப்பதில் பராக்காயிருக்கின்றார்கள். அம்மார்க்கம் மிகமிக தூய்மைபொருந்தியதாகவும் தகுதியுடையதாயு மிருக்கின்றது. அந்த இஸ்லாம் இவ்வுலகின்கண் தோன்றுவதற்குமுன் அரபிகள் விக்கிரகங்களில் ஏதோ அபாரசக்தியிருப்பதாகவும் நற்கூலி தண்டனை அளிப்பதில் அவைகளுக்கு சம்பந்த முண்டென்றும், விதியை அவைகளால் மாற்றியமைக்க முடியுமென்றும், இன்னும் உலகிலுள்ள சகலவஸ்த்துக்களின் மீதும் அவைகளுக்கு பூர்ண சக்தியுண்டென்றும் கருதி அதனை ஆராதனைபுரிவது தங்களது பிரதானக்கடமை என முழுநம்பிக்கை பூண்டவர்களாயிருந்தார்கள். ஆனால் இஸ்லாம் மார்க்கமானது இவ்வெண்ணங்களையெல்லாம் ஒரே அடியாய் அகற்றிவிட்டு, தூய்மை வாய்ந்த ஏகவல்லநாயன் உலகமடங்கலுக்கும் எஜமானும் தனித்தவனுமாயிருக்கிறான்; வணக்கத்துக்கு பாத்தியஸ்தன் அவனைத்தவிர வேறுயாருமில்லை; யாருடைய தேவையும் அவனுக்குக் கிடையாது; அவன் சிருஷ்டிகளடங்கலையும் வளர்த்து, உயிர் பிராணிகளுக்கு உணவளிக்கின்றான். ஆதலின் உண்மையான அந்த ஏகப்பரம்பொருளாகிய அல்லாஹ் தஆலாவை விட்டு வேறு விக்கிரங்களை வணங்குவது அனீதியாகுமல்லவா? இந்த கற்றுண்டுகளுக்கு அல்லாவுக்குள்ள சக்தியிருப்பதாகக் கருதுவது மடத்தனமல்லவா? அவைகளால் ஒரு சிறிய அணுப்பிரமாணமாகிலும் எதாகிலும் நன்மை புரியமுடியுமா?

இஸ்லாம் மார்க்கமானது, ஒருவரோடொருவர் கலப்பற்ற மனத்தினராய் ஐக்கிய வாழ்க்கை நடத்த பொறுப்பேற்று, முஸ்லிம்களடங்கலும் ஏகசகோதரராகும்; அவர்கள் அடங்கலும் ஒரே மனிதனைப் போன்றிருக்கின்றார்கள்; ஒரு முஸ்லிம் இதர முஸ்லிமுக்குப் பெரும் உபகாரியாய்த் திகழ்ந்து கொண்டிருக்கின்றான்; இஸ்லாம் நிகரற்ற சமத்துவத்தைப்போதித்துகொண்டிருக்கிறது; இஸ்லாம் என்னும் சந்திரன் பிரகாசிப்பதற்கு முன் ஒவ்வொரு இடத்திலும் அக்காலத்தின் அமீர்களும் குடும்பத்தலைவர்களும் கெளர்தியை எதிர்பார்க்கிறவர்களாக யிருந்ததுடன், ஏழைமக்கள் ஜீவித்திருப்பதன் நோக்கமானது, அமீர்களுக்கு ஊழியம் புரிவதற்கும் அவர்களால் புரியப்படும் அநீதியைச்சகித்துக்கொண்டிருப்பதற்காகவுமேயிருந்தது. அனால் இஸ்லாம் பிரகாசிக்க ஆரம்பித்தபின் மனிதனுக்கு மனிதன் அடிமைப்பட்டு வாழ்வதன் அஸ்த்திவாரத்தையே களைந்தெறிந்துவிட்டு, மானிடர் யாவரும் ஆதமுடைய மக்களாகும்; ஆதம் (அலை.) மண்ணினால் படைக்கப்பட்டிருக்கின்றார்களாதலின் மானிடன் எவ்வாறு பெருமை பாராட்டமுடியும்? இஸ்லாத்துக்குமுன் ஏழைபணக்காரன் உயர்ந்தவன் தாழ்ந்தோன் யாவரும் ஒரே அந்தஸ்தை வகித்திருக்கின்றார்கள். ஆனால் மானிடர்களுக்கிடையே உயர்வு தாழ்வு எற்படுவதாயின் அவர்கள் அல்லாஹ்வை பயந்து நடப்பதையும் நற்கருமங்கள் புரிவதையும் தான் பொருத்து ஏற்படக்கூடியதாக இருக்கிறது.

இஸ்லாத்தில் மிளிர்ந்து காணப்படும் இவ் உன்னத நீதிகளானது என் ஹிருதயத்தில் பதிந்து பெரியதோர் குணபாட்டை யுண்டு பண்ணிவிட்டதால் யான் இஸ்லாமிய பந்தத்தில் கட்டுண்டு அதில் சேர்ந்துக்கொண்டேன். ஏ எனது பந்து மித்திரர்காள்! நீங்கள் இம்மை மறுமை இருபதிகளிலும் பாக்கியம் பெற்று கவர்விக்கப் படுவதற்கு நாடுவீர்களாகில், உண்மையான இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி நடந்து கொள்ளுங்கள் எனக்கூறினார்கள். ஹஜ்ரத் அவர்களின் அரும்மொழிகளை செவியுற்ற அவர்களின் பெண்சாதி உம்மு அய்யூபும் வேறுசிலபந்துக்களும் உடனே மனவிருப்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி.) அவர்கள் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களை அன்புடன் ஆதரித்து உபசரணை புரிந்ததின் காரணமாக அல்லாஹ்தஆலா அவர்களுக்கு மேன்பதவி அளித்தானென்பது திண்ணம். அதாவது, நுபுவ்வத்தின் 13-ம் ஆண்டு (கி. பி. 622) சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் மக்கமா நகரிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனமா நகர் சிறப்புற்றகாலை,ஹஸ்ரத்அபூஅய்யூப் அவர்களது இல்லத்தில் தங்கினார்கள். அச்சம்பவ நிகழ்ச்சியின் வரலாறு பின்வருமாறு :—

சத்திய சன்மார்க்கத்தூதர் (ஸல்.) அவர்கள் 'ஹிஜ்ரத்' செய்து வரும் செய்தி ஏற்கனவே மதீனவாசிகளுக்குத்தெரிந்து விட்டதால், அப்பட்டணம் முழுதுமே பெருமானார் (ஸல்.) அவர்களின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு சிசுக்கள் முதல் யாவரும் "அல்லாஹ்வின் ரசூல் வருகின்றார்கள்" என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டிருந்தனர். அம்மகிழ்ச்சியின் காரணமாய் பட்டண வாசிகள் யாவரும் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் தங்கள் இல்லங்களை விட்டு வெளியாகி ஊருக்கு வெளியிலுள்ள ஓர் இடத்தில் சேகரமாய், பெருமானார் (ஸல்.) அவர்களது வருகையை எதிர்பார்த்தவர்களாய் மத்தியானம் வரை அங்கேயே நின்று விட்டு வருத்தமுற்றவர்களாய் வீடு திரும்பி வருவது வழக்கம் என்று பெருமானார் (ஸல்.) அவர்கள் மதீனாவினுள் பிரவேசிப்பதாகயிருந்ததோ அன்றும் பட்டணவாசிகள் வழக்கம்போல் அதிகாலையிலே வந்து வெகு நேரம் வரை எதிர்பார்த்துக் கொண்டிருந்து விட்டு திரும்பிவிட்டார்கள். தற்செயலாய் ஓர் எஹூதி தமது வீட்டின் உயர்ந்த மேல் தளத்தில் ஏதோ தமது சொந்த அலுவலி நிமித்தம் உட்கார்ந்திருந்தவர், சத்திய தூதர் (ஸல்.) அவர்களது வருகையைக் கண்டு சிற்சில அறிகுறியால் இவர்கள் முஹம்மது (ஸல்.) அவர்களாயிருக்குமென்று மனதிலெண்ணி,

ஏ அரபவர்க்கத்தினர்களே! எந்தப் பெரியாரின் வருகையை வெகு நாளாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தீர்களோ அவர்கள் வந்து விட்டார்கள் என உரத்த தொனியில் தெரிவித்தார். இச்செய்தியை அறிந்த நகர வாசிகள் யாவரும் சந்தோஷ மகிழ்ச்சி கொண்டதன் காரணமாய், பட்டணம் முழுதும் 'அல்லாஹ் அக்பர்' என்னும் சப்தம் எதிரொலிபரப்பியது. அன்ஸார்கள் ஆனந்த மகிழ்ச்சி கொண்டவர்களாய் வீட்டை விட்டுக் கிளம்பி, பெருமானார்(ஸல்.) அவர்களை வரவேற்பதற்காக ஊருக்கு வெளியில் வந்து விட்டார்களாதலின் 'குபா' வென்னுமிடத்தில் பெருமானார் (ஸல்.) அவர்களைத் தெரிசிக்கும் பாக்கியத்தை அடைந்தார்கள். உடனே ஒவ்வொருவரும் சலாம் செய்து கை கால்களை முத்தமிட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். பதினான்கு நாள் வரை நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் 'குபா' என்னுமிடத்தில் தங்கியிருந்து விட்டு, 15-ம் நாள் பட்டணத்தினுள் பிரவேசிக்கக் கருதியது வெள்ளிக்கிழமையாக யிருந்தது. அன்று தாங்கள் புறப்பட்டு 'சாலிமிப்னு அவ்ப்'வின் தெருவுக்கு வருங்காலை, தொழுகை நேரம் சமீபித்துவிட்டதால் அந்த மஹல்லாவிலேயே தொழுகையை நிறைவேற்றக்கருதி, அங்கு தொழுகைக்கு முன் இனிய மனக்கவர்ச்சியை அளிக்கவல்ல பிரசங்கமொன்று நிகழ்த்தினார்கள். அதில், மானிடர்களை ஏகநாயகனை வணங்கும்படியும் உண்மையைக் கடைபிடித்து பேணுதலுடன் நடந்துகொள்ளுமாறும் உபதேசித்தார்கள். இதுதான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் ஆரம்ப ஜும்ஆவும்,முதல்குத்பாவுமாகும். தொழுகையை நிறைவேற்றிக்கொண்டு பெருமானார் (ஸல்.) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுஒட்டகத்தின்மீதுவீற்றுச் செல்லுங்கால், அப்பாஸிப்னு உபாதா, உத்பானிப்னுமாலிக் போலொற்ற தலைவர்களைச் சந்திக்கும்பொழுது, அன்னோர் பெருமானார் (ஸல்.) தங்கள் இல்லங்களிலேயே தங்கவேண்டுமென அதிகம் விரும்பினார்களாயினும் உலகதயாளர் (ஸல்.) அவர்கள், ஒட்டகத்தைஅதுபோகும்விதத்திலேயேவிட்டு விடுங்கள்; அது அல்லாஹ் தஆலாவால் ஏவப்பட்டிருக்கிறதென்று கூறினார்கள். அவ்வொட்டகம் அதிவேகமாய்ச்சென்று கொண்டே வந்து ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி.) அவர்களதுவீடு வந்தவுடன் அங்குஉட்கார்ந்துவிட்டதால் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அங்கு இறங்கிவிட்டவுடன் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் சாமான்களை எடுத்து உள்ளால் அனுப்பிவிட்டு சற்குணத்தூதர் (ஸல்.) அவர்களை தம்முடன் அழைத்துச்சென்றார்கள். இம்மகத்தான சிறப்பைப்பெறுவதற்கு அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி.) அவர்களைத் தேர்ந்தெடுத்தான்போலும். எனவே, ஹஸ்ரத் அவர்கள்தங்களுக்கு இவ்வாறான பாக்கியம்கிடைத்ததையுன்னி மகிழ்வுற்று சதா

வும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு பணி விடை செய்வதிலேயே தங்கள் முழு கவனத் தையும் செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

'சஹீ முஸ்லிம்' என்னும் கிரந்தத்தில் ஹஸ்ரத் உப்பாதிப்னு ஸாமித் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருப்ப தாவது :—

நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரசூல்(ஸல்.)அவர்கள்,வீட்டின் கீழ்பாகத்திலும் ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி.) மேல் மெத்தையி லும் வாசஞ்செய்து வந்தார்கள். இந்நிலைமை யில் ஒருநாளன்று இரவில் துயில் புரிந்து கொண்டிருந்தவர்கள் திடீரென்றெழுந்தபோது, உலகதயாளர் உத்தமத்தூதர் (ஸல்.) அவர்கள் கீழ்பாகத்திலும் தாங்கள் மெத்தை மீதுமிருப் பது பெரும் மரியாதைக் குறைவாய் இருப்ப தாகக் கருதி அதே சிந்தனையில் மெத்தையின் ஓர் மூலையில் உட்கார்ந்துகொண்டே இரவு முழுதையும் போக்கினார்கள். பின்னர் அதி காலையில் எழுந்து சமூகமணுகி அல்லாஹ்வின் ரசூலே! மெத்தை மீதிருக்க என் மனம் இடங் கொடுக்கவில்லையாகையால் தாங்கள் மெத் தைக்குச் செல்லுமாறு வேண்டிக் கொள்கின் றேன் எனக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், யான் வசிப் பதற்கு கீழ்பாகந்தான் ஏற்றதாயிருக்கின்றது ; வந்து போகும் மனிதர்களுக்கு இதுதான் சௌகரியமாக இருக்கும் எனக்கூறினார்களாயி னும் ஹஸ்ரத் அபூஅய்யூப் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளாது, எந்த மெத்தையின் கீழ் தாங்களிருக்கின்றீர்களோ அதற்கு மேல் யான் வாசஞ்செய்ய ஒருபொழுதும் சம்மதிக்க முடியாதென்று வற்புறுத்திக்கூறி விட்டதால், பெருமானார் (ஸல்.) தங்கள் இருப்பிடத்தை மேல் மெத்தைக்கு மாற்றிக்கொண்டார்கள், ஹஸ்ரத் அபூ அய்யூப் கீழே வந்து விட்டாகள். அந்தஇடத்திலேயே நபிகள் திலகம்(ஸல்.)அவர் கள் ஏழுமாத காலம் தாமதித்திருப்பதற்கிடை யே நுபுவ்வத்தின் ஒளி தக்கமுறையில் பிரகா சிக்கமுற்பட்டுவிட்டது.

'ஹஜ்ரத்' அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி.) அவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது அளவற்ற பிரீதிகொண்டிருந் தார்களாகையால், தங்களுக்குப் பணியாற்று வதை மகத்தான சேவிதனத்துக்குள்ள பிர தானக் காரியமாகக் கருதிவந்தார்கள். எனவே, பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒளுச்செய்துமிச் சப்படும் தண்ணீரை புண்ணிய தீர்த்தமெனக் கருதி வந்தார்கள். இந்நிலைமையில்பெருமானார் (ஸல்.)அவர்கள் ஒருநாளன்று மிக்க அன்போடு அவர்கள் தலைமீது கைவைத்து விட்டார்களாத லின் அதற்குப்பின் வாணாள் முழுதும் முடி இறக்கிக்கொள்ளாமலும் மயிர் கத்தரித்துக் கொள்ளாமலுமிருந்து விட்டார்கள். இச்சம்பவ நிகழ்ச்சிகளால் ஹஸ்ரத்அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி.)அவர்கள், பெருமானார் (ஸல்.) அவர்கள் மீது அளவற்ற பிரீதிகொண்டிருந்தார்களென் பது நன்கு புலனாகிறதல்லவா ?

ஹஸ்ரத் அபூஅய்யூப் அவர்கள், அன்ஸார் களில் மிக்க கியாதிவாய்ந்த பெரும் தைரிய சாலியாக இருந்தார்கள். அல்லாஹ்தஆலா அவர்களுக்கு மனோதைரியத்தையும் வீரியத் தன்மையையும் உறுதியான ஹிருதயத்தையும் அளித்திருந்தானாகையால் 'பத்ர்' போர் முதல் அவர்களின் வாணாள் முடிவுவரையில் ஒவ்வொரு யுத்தங்களிலும் தக்கசேவை புரிந் திருக்கின்றார்கள். தாங்கள் ஒவ்வொரு போர்க் களங்களிலும் படைக்கு நடுவில் நுழைந்து பகைவர்களை எதிர்க்கிறவர்களாயிருந்தார்கள். எப்பக்கம் கவனத்தைச் செலுத்திய போதி லும் அதை ஒழிப்பவர்களாகவே இருந்தார்கள். யுத்த களத்தில் பெரும் அனுபவத்தோடு வாள் வீசுவதில் தக்கதேர்ச்சி—திறமை இவர் களுக்கு ஏற்பட்டிருந்ததென்று ஹஸ்ரத் அபூ உபைதா கூறியிருக்கின்றார்கள்.

ஹிஜ்ரீ 51-ம்ஆண்டில், ஹஸ்ரத் அபூஅய்யூப் (ரலி.) அவர்கள் முஸ்லிம் படையுடன் சேர்ந்து ரூம் தேசத்தில் சதிசெய்து கொண்டிருந் தோரை எதிர்ப்பதற்காக அங்கு செல்லுங்கால் குஸ்தந்தனியாவுக்குச் சமீபம் சென்றவுடன் ஹஸ்ரத் அவர்கள் வியாதியால் பீடிக்கப்பட்டு அங்கேயே அல்லாஹ்வின் திருஅடி சேர்ந்தார் கள். குஸ்தந்தனியாவின் இடது பக்கம் ஹஸ் ரத் அவர்களது கபர்ஷரீப் இலங்கிக்கொண் டிருக்கின்றது.

முந்துங்கள் !—நம் அருமமாசிகையின் நான்காம் வால்யூம் பைண்டு செய்யப்பட்டு தயாராக யிருக்கிறது. சொற்பப் பிரதிகளே கைவசமிருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள். கிரயம் ரூ. 3-8-0. வி. பி. வேறு.

சதிபதிகளின் பிரதானக் கடமைகள்

எவ்விஷயம் தக்க அத்தாக்ஷிகளின் மூலம் உச்சஸ்தானம் அடைந்திருக்கின்றதோ, இன்னும் எவ்விஷயத்தை தக்கமுறையில் தெரிந்து கொள்ளாதிருக்கின்றனரோ அவைகளை மறுத்துவிடுவது மேனாட்டார்களில் காணப்படும் ஓர் துர்பழக்காகவே இருந்துவருகின்றது. அன்னோர், இவ்வாறு அறியாத்தனத்தால் இதரர்கள்மீது குறைகூறுபவைகளில், "இஸ்லாம் மார்க்கச் சட்டங்களானது மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாச் சகல சாதனங்களையும் பொருந்தியதாயிருக்கவில்லை; அதிலும் வாழ்க்கை நடத்துவதன் சம்மந்தமாய் இஸ்லாம் எவ்வித ஒழுக்கங்களையும் அறவே அறிவித்துக் கொடுக்காமலே இருக்கிறது" என்று கூறுவதும் ஒன்றாகும். இவ்வாறு இஸ்லாம் மார்க்கத்தின்மீது அன்னோர் குறைகூறுவது ஆதாரமற்ற வீண்விபரீதக் கூற்றேயாகுமாதலின், அதனை மறுப்பதற்கு நமது அருமையான நேரங்களைச் செலவுசெய்வது அவைகளை வீணாகக்கழிப்பதாக இருந்தபோதிலும், அவர்களின் கூற்றை மறுத்து நிற்கும் இரண்டோர் விஷயங்களைமட்டும் இங்கு குறிப்பிடுவோம் :—

இஸ்லாம் மார்க்கமானது மானிடவாழ்க்கைக்குள்ள சகல விஷயங்களிலும் தக்கவழி காண்பிப்பதில்லை என்று குறைகூறுவது பெரும் அவதூறான அநீதியேயாகும். ஏனெனில், உலகிலுள்ள மார்க்கங்களிலெல்லாம் இஸ்லாம் மார்க்கம் ஒன்றுதான் எக்காலத்திலும் உலக மானிடர் யாவருக்கும் தக்கவழிகளை காண்பித்துக்கொண்டிருக்கிறதென்பதை பஹிரங்க அத்தாக்ஷிகளுடன் நிரூபிக்கத்தயாராக இருக்கிறோம். மேலும் அதனை உலகிலுள்ள தக்க மேதாவிகளெல்லோரும் ஏற்றுக்கொண்டுமிருக்கிறார்கள். ஆகவே, இஸ்லாம் மார்க்கமானது மானிடவாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயங்களில் எதையும் விட்டுவிடாது அவை யாவற்றையும் தக்க தெள்ளத் தெளிவானமுறையில் அறிவித்திருக்கின்றது. அக்கட்டளைகளை, அறிவுடைய மனிதன் மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்திலும் தம்முன்வைத்துக் காரியாதி நடத்தி வருவானாகில், நிச்சயமாய் இம்மை மறுமையாகிய இருபதியினுடையவும் முன்னேற்றம் பெறுவானென்பது திண்ணம். எனவே, இஸ்லாம் மார்க்கமானது எவ்வகையிலும் குறைவின்றிபரிபூர்ணமாக மிளிர்ந்துகொண்டிருக்கின்றது. இதுவன்றி ஆத்மா முன்னேற்றமடைவதற்காக இஸ்லாம் மார்க்கத்தில் கூறப்பட்டிருக்கும் காரணங்களாய, அல்லாஹ்வை பயந்து நடப்பது, தியாகம் புரிவது, அன்பு கிருபை கொள்ளுதல், பத்தினித்தனம், பயம் முதலியவைகள்விஷயமாய் இஸ்லாம் மார்க்கம் கட்டளையிட்டிருப்பது யாவருமறிந்ததேயாகும். மேலும் உலக முன்னேற்றத்துக்கான காரணங்களாய கஷ்டப்படுதல், பிரயாசையோடு காரியம் புரிதல், மனோஉறுதியான யோசனை, ஊக்கம், ஆழ்ந்த சிந்தனை முதலிய சகல விஷயங்களையும் இஸ்லாம் மார்க்கம் தக்கமுறையில் போதித்துத் தானிருக்கின்றது. ஆகவே, நாம் நன்கு கவனித்துப் பார்ப்போமாகில், ஒவ்வொரு காலத்திலும் உலக மானிடர்களுக்கு சன்மார்க்க வழி காண்பிப்பதற்கு இஸ்லாம் மார்க்கம்தான் தக்க வழி காட்டியாய்த் திகழ்ந்து கொண்டிருக்கிறதென்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஆனால் மேல்நாட்டாரும் மற்றவரும் இஸ்லாத்தின் சத்போதனைகளை நன்கு கவனித்து ஆராய்ந்து பார்க்காததின் காரணமாக, இஸ்லாத்தின்மீது குறைகூறமுற்பட்டுவிடுகின்றனர். இஸ்லாத்தின் சத்போதனைகளை நன்காராய்ந்து பாராததது நம்முடைய குறையாகுமேயன்றி ஒருக்காலும் இஸ்லாத்தின் மீதேற்பட்ட குறையாகமாட்டாதென்பது வெளிப்படை.

இவ்வுலகினின்று நியாயம் எடுபட்டுப்போகாதிருக்குமாயின் கீழ்குறிப்பிடும் விஷயங்களை ஏற்றுக்கொள்வதில் யாருக்கும் ஆக்ஷேபனையிராதென்பது திண்ணம். அதாவது:— இஸ்லாம் மார்க்கமானது காட்டுமிராண்டித்தனமுடைய அரபியர்களுக்கு சற்குணத்தை போதித்து அதில் உச்சஸ்தானமுடையவர்களாச் செய்து வைத்தது ; உலக வாழ்க்கை சம்பந்தமாய் இஸ்லாம்மார்க்கம் அறிவித்த சட்டதிட்டங்களைவிட இதுவரை வேறு எந்த மதத்தினரும் மேலான சட்டதிட்டங்களை அமைத்துவிடவில்லை; பல நூற்றாண்டுகளாய்த் தழைந்தோங்கிவந்த -வழிகேடுகளெல்லாம் சொற்பநேரத்திற்குள் பஸ்ப

மாய்ப் போய்விடக்கூடிய ஒரு சீர்திருத்தத்தை உலகிற்குமுன் வெளிப்படுத்திற்று; பலவாறுன கெடுதிகளுக்கும் தாயகமாய்ச் சிறந்து விளங்கி வந்த அந்த அரபுநாடானது சில நாளைக்குள் புண்ணியமிக்க கண்ணியம்பொருந்திய பூமியாய் மாறிவிட்டது; தங்கள் சோதிரர்களின் இரத்தத்தை ஓட்டுவது ஒரு சாதாரண அற்பகாரியமென மதித்துவந்த அந்த அரபியர்கள் ஆழ்ந்த திருஷ்டி சீர்திருத்தம் பெற்றவர்களாய் மிளிர்ந்து உலகினின்றுமே எடுபட்டுப்போயிருந்த சுபேக்ஷை, அச்சமின்மை முதலியவைகளை மறுபடியும் நிலைநாட்டிவைத்துவிட்டதுடன் தாங்களும் அந்த சமாதானத்தைப் பேணுதலுடன் காப்பாற்றுபவர்களாயுமாகிவிட்டார்கள் என்பதே. அம்மகான்கள் கையாண்டுவந்த நேர்வழிகள் இதுகாலை நம் கண்முன் இலங்கி நின்றுகொண்டிருந்தபோதிலும், துர்அதிர்ஷ்டவசமாய் நாம் அதனை ஒரு பாக்கியமெனக்கருதி அனுஷ்டானமுறையில் கொண்டுவர முயற்சியாது வாளாவிருந்து வருகிறோம். ஒருவனுடைய வீட்டில் கல்வி, இதர சீர்திருத்த சாதனம் இவைகளின் பொக்கிஷம் நிறைந்துபோயிருக்கும் நிலைமையில், அவன் மனம் நிலைகொள்ளாது பலவாறுன விஷயங்களில் அவன் மனதைச் செலுத்திக் கலக்கத்தில் விட்டுக் கொண்டிருப்பானுகில் அவனை நியாயவாதிகள் துரதிருஷ்டசாலியன்று கூறுவரென்பது திண்ணம். நம்மிடம் சிறந்த மேலான சன்மார்க்கம் இருக்கும்போது, நாம் அதை மறந்து அபாயந்தரும் துர்வழியில் சென்றுகொண்டிருக்கிறோம். ஆகவே, நாம் இஸ்லாமிய மார்க்கம் போதித்து அறிவித்திருக்கும் கட்டளைகளை கண்முன்வைத்து அதனைப் பின்பற்றி யொழுகமுற்படுவோமாகில் அதுபொழுது நம் நிலைமை மிகமிக உச்சஸ்தானத்தை அடைந்ததாய் விடுமென்பதும், சிலகாலத்துக்குள் நமக்குச் சொந்தமாயிருந்த முன்னேற்ற சாதனங்களை சாவதான முறையிலேயே அடைந்து விடலாமென்பதும் திண்ணம். இக்காலையுள்ள முஸ்லிம்களின் அபாயகரமான வாழ்க்கை முறையை சிலர்கண்டு, இஸ்லாம் சம்பூர்ண சட்ட திட்டங்களுடைய மார்க்கமாக யில்லாத்ததால் அது வாழ்க்கை சம்பந்தமாயுள்ள எவ்வாறுன கட்டுப்பாடான ஒரு திட்டத்தையும் ஏற்படுத்தி வைக்கவில்லை எனக் குறை கூறமுற்பட்டிருகின்றனர். உண்மையில் அவர்கள் கூறும் குறை சரியானதாயிருக்கின்றதாவென கவனிப்போமாகில், அவர்கள் இவ்வாறுன தீர்மானத்துக்கு வந்தது மிகமிகத் தவறுகுமென்றும் இச்சிலர், இஸ்லாத்தின் போதனையினின்று வெகு தூரம் பின்னுலிருக்கும் முஸ்லிம் எனப்படுபவர்கள், இஸ்லாத்தின் கோலத்தில் தோன்றும் முறைகளைக்கண்டு இவ்வாறு குறைகூறுகின்றூர்கள் என்னும் முடிவுக்குத்தான் வரவேண்டியதாக இருக்கின்றது. ஆகவே, அவ்வாறுன முஸ்லிம்கள் தங்கள் ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்தி, இஸ்லாம் மார்க்கம் எடுத்துப் போதித்துள்ள வாழ்க்கைக்குறிய சட்டதிட்டங்கள் தங்களில் காணப்படுகின்றதா வென்பதைத் தெரிந்து, அவ்வாறில்லாது போயின் அதற்காகத் தலை குனிந்து வெட்கித்து, பிற்கால வாழ்க்கையிலாகிலும் இஸ்லாமிய சட்டதிட்டங்களைக் கைகொண்டு தங்கள் காரியாதிகளை சீர்திருத்தஞ் செய்துகொள்வது பிரதானமாகும்.

நாம் இவ் வேண்டுகோளைச் சமர்ப்பித்து வைத்தபின், சதிபதிகளின் கடமை யாது? அவர்கள் எவ்வாறுன வாழ்க்கை நடத்தவேண்டும் என்பனவற்றை, நம் சன்மார்க்கம் தெளிவுபடுத்தி விளக்கியிருப்பதை ஹதீது பிக்ஹு இவைகளின் தக்க ஆதாரங்களுடன் இவண் குறிப்பிடுவாம். அதனைப் பார்ப்பது கொண்டு இஸ்லாம் மார்க்கம், உலகவாழ்க்கை சம்மந்தமாய் எவ்வாறுன சட்டதிட்டங்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறதென்பதை உலகம் நன்கு தெரிந்துகொள்ளும்.

இஸ்லாம் என்னும் சூரியன் இப்பூஉலகின் கண் பிரகாசிப்பதற்குமுன், எங்கு பார்த்தாலும் வழிகேடே பரவியிருந்ததென்பதும் சதொழுக்கம், சீர்திருத்த முறை, மானிடத்தன்மை, கெளரவ முதலியவைகளின் அறிகுறிகூட காணப்படாதுமிருகங்களைவிட மானிடர்கேவலமாக மதிக்கப்பட்டு அன்னோருக்கு ஒரு பொறுப்பான அந்தஸ்த்தும் இருப்பதாகக் கருதப்பட்டதில்லை என்பதும் இங்கு விவரிக்க வேண்டிய அவசியமற்ற பஹிரங்க கூற்றுகும். ஆனல் இஸ்லாம் மதம் பிரகாசிக்க முற்பட்டு, அவ் வனீதிகளையெல்லாம் போக்கிவைத்து, மானிடனை தாழ்மை என்னும் படுகுழியிலிருந்து உயர் பதவிக்குக் கொணர்ந்து சேர்த்துவிட்டது.

பெண்கள்மீது எவ்வாறுன கடமை ஏற்பட்டிருக்கின்றதோ அவ்வாறுன கடமை (ஆண்

கள்பேரில்) அவர்களுக்கு மேற்பட்டிருக்கின் றது. (அல்குர்ஆன்.)

மேன்மை பொருந்திய இத்திருவாக்கியத்தால், பெண்கள் பலவகையிலும் ஆண்களே போன்று பாத்தியதை அடைய அருகதையுடையவர்களாயிருக்கின்றார்கள் என்பதும், இவ்விருவர்க் கிடையிலும் பாத்தியதை அடையும் விஷயமாய் எவ்வித வித்தியாசமுங் கிடையாதென்பதும் நன்கு ஸ்திரமாகின்றது. இச் சமத்துவ சம்மந்தமாய் நாம் தக்கமுறையில் ஆராச்சிசெய்து பார்த்தபோதிலும் மேல் கூறப்பட்டுள்ள முடிவுக்கு வருவதில் யாருக்கும் எவ்வித தற்கவாதமு மிராதென்பது வெளிப்படை. உண்மையை யுணர்ந்துபார்ப்போமாகில், ஆண்பெண் இருவரும் மானிடர்தான்; இருவருக்கும் ஆறிவு ஆற்றல் விளக்கம் முதலியவை களிருக்கின்றன; இருவரும் தங்களுக்கு ஏற்படும் இலாபநஷ்டங்களை அறிந்து ஆராய்ந்துபார்க்க சக்திபெற்றவர்களாயிருக்கின்றார்கள்; அவர்களில், நற்காரியங்களைக்கொண்டு சந்துஷ்டி அடையவும் கெட்ட காரியங்கள்மீது வெறுப்புக் கொள்வதற்கும் ஹேதுவான ஹிருதயமிருக்கின்றது. இன்னிலையில் அவர்களிலொருவரை எஜமானகவும் அடக்கி ஆளுபவராகவும் அதிகாரியாகவும், மற்றொருவரை தாழ்மையாகவும் கருதுவது எவ்வாறு நியாயமாகும்? ஆகவே இஸ்லாம் மார்க்கமானது இவ்வாறான அடக்கிஆளும் சக்தியை அழித்தொழித்து விட்டது.

மேலே கூறப்பட்டுள்ள திருவாக்கியத்தில், சதிபதிகளி லொருவருக்கு மற்றவர் மீதிருக்கும் கடமைகள் விவரித்துக் கூறப்படாதபோதிலும், நாம், பொதுமக்களிடையே காணப்படும் ஒழுக்கங்களை ஆராய்ந்துபார்த்து அவைகளைத் திட்டப்படுத்தவேண்டியது ஆவசியமாகும். ஆனால், இந்த ஆயத்தில் பொதுவாக ஆண்கள் பெண்டீர்களுடன் தக்கமுறையில் நடந்து கொள்ள வேண்டிய அவசியம் புலனாவதுடன் பெண்கள் பாத்தியதைகளைப் பெறுவதில் ஆண்களுக்குச் சமமானவர்களாய் இருக்கின்றார்களென்பதும், ஆண்கள் பெண்டீர்களிடம் சுகம் பெறுவதற்கு நாடுவார்களாயின் அதற்காக பெண்டீர்கள் வசதி அளித்துக் கொடுப்பதும் அவர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்து வைப்பதும் அவசிய மாகுமென்பது நன்கு புலனாகின்றது.

இவ்வாயத்து இறங்கியவுடன் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் தங்கள் அருமைப் புதல்வியாகிய ஹஸ்ரத் பாத்திமா (ரலி.), மருகராய ஹஸ்ரத் அலி (ரலி.) இவ்விருவர்களையும் அழைத்து, நீங்களிருவரும் உங்களில் ஒருவருக்கேற்படும் சுகதுக்கங்களை மற்றொருவருக்கேற்பட்ட சுகதுக்கமென பாவிக்கவேண்டுமென்றும், சமத்துவம் பாராட்டுவதைக் கவனித்துநடக்கவேண்டுமெனவும் உபதேசம்புரிந்ததுடன் பெண்ஜாதி, வீட்டுக்காரியாதிகளை கவனிப்பதிலும் பிள்ளைகளை வளர்க்கும்சேவையிலும் ஈடுபட்டிருக்கவேண்டியது கடைமையாகுமென்றும், புருடன் வீட்டிற்குவெளியேசென்று ஜீவனோபாயத்துக்குள்ளவழியைத்தேடுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்றும், பிள்ளைகளுக்கு கல்விபுகட்டமுயற்சிப்பதிலும் தன்னைச் சார்ந்தவர்களுக்கு சாப்பாடு தேடுவதிலும் முயற்சிக்க வேடியது கடைமையாகுமென்றும் அறிவித்து, ஏ பாத்திமாவே! நீர் வீட்டுக்காரியத்துக்காக பொறுப்பேற்றுக்கொள்வீராக! அலீ அவர்களே! வீட்டிற்கு வெளியிலுள்ள காரியாதிகளின் பொறுப்பு தங்கள் மீதேற்பட்டிருக்கிறதென அறிவித்ததாக முபஸ்ஸிரீன்களான சில வியாக்கியான கர்த்தாக்கள் கூறியிருக்கின்றார்கள்.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இவ்வாறு திர்ப்புக்கூறியதை புக்ஹாக்கள் ஆதாரமாகக் கொண்டு, சதிபதிகளின் கடைமையாதாகுமென்பதை விபரித்துக் கூறுங்கால் பெண் சாதியானவள், புருடன் தம்மோடு சம்மந்தப்படுவதை விலக்காம லிருப்பதுடன், வீட்டுக் காரியாதிகள் செவ்வையாய் நடைபெறுவதற்கு முயற்சித்து வருவாளென்றும், புருடன் பெண் சாதிக்குஅன்னவஸ்திரம் அளிப்பதுடன் அவள் ஆரோக்கியமாய்க் காலங்கழிப்பதை விரும்புவானென்றும் விவரித்திருக்கின்றார்கள். புக்ஹாக்கள் இக்கடைமைகளைத் தெரிவித்து, இவ்விஷயங்களை சதிபதிகள் இருவருமே பின்பற்றி நடக்கவேண்டியது பிரதானமென்றும் அவ்விருவரில் யாரேனும் அவ்வாறு நடக்கவில்லையாகில் நன்மைதீமைகளுக்கு கூலிகொடுக்கப்படும் நாளில் அல்லாஹுதஆலாவின் புறத்திலிருந்து கடிஸானகேள்வி ஏற்பட்டு பாத்தியதைகள் சரிவர பேணிநடக்காததற்குள்ள தண்டனை அனுப்பவிக்க நேரிடுமெனவும் கூறியிருக்கின்றார்கள்.

ஸிராஜுல் ஆரிபீன் ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்கள், பெண்சாதி புருஷன்

இவர்கள் மீதுள்ள கடைமை யாதாகுமென்பதைக் கூறுமிடத்து, அடியில் வருமாறு தெரிவிக்கின்றார்கள். அதாவது, இஸ்லாம் மார்க்கமானது, புருடன் பெண்சாதி இருவரும் தங்களில் ஒருவருக்கேற்படும் சுகதுக்கங்களை மற்றொருவருக்கு ஏற்பட்டதென பாவிக்கவேண்டுமென அறிவித்திருப்பதுடன் புருடனானவன் பெண்சாதிக்கு கவர்வம் கொடுக்கவேண்டுமென்றும், அவள் அழகு சௌந்திரியமில்லாதிருந்தபோதிலும் அவளைச்சந்தோஷப்படுத்துவதற்காக அவளுடைய சற்குணங்களைப் புகழவேண்டுமென்றும், அவள் துக்கமுடையவளாயிருப்பாளாகில் அந்த துக்கத்தில் தானும் கலந்துகொண்டுதம் மனவருத்தத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றும், அவள் சினேகிதிகளுடனும் அன்பாயிருக்கவேண்டு மென்றும், அவளுடன் வார்த்தையாடும்பொழுது இன்பம் பொருந்திய வார்த்தையாகப் பேசவேண்டுமென்றும், அவளில் ஏதாகிலும் தவறுதல் ஏற்பட்டு விடுமாயின் அதற்காக அவள் மீது சதாவும் குறை கூறி அவள் வெட்கிக்கும்படி செய்யலாகாதென்றும், வசதி ஏற்படுமாயின் அவள் விருப்பப்படியுள்ள ஆபரணங்களையும் உடுபுடவைகளையும் தயாரித்துக் கொடுக்கவேண்டுமென்றும், அவள் செய்யும் பணியை கூடியவரை சிலாக்கித்துக் கூறவேண்டுமென்றும், அழகு சௌந்தரியமுள்ள இதர பெண்களை அவள் முன்னிலையில் புகழ்ந்து கூறி இவள் மனம்வருந்தும்படி செய்யலாகாதென்றும், புருடன் சுகபோக மனுபவிக்க விரும்புவானாகில் அதனை இவள் தடுக்கலாகாதென்றும், பர்லான நோன்புகளைத் தவிரவுள்ள இதரநோன்புகளை அவன்அனுமதியின்றிநோற்கலாகாதென்றும், அவனது அனுமதியின்றி வீட்டினின்றும் வெளிச் செல்லலாகாதென்றும், அவன் சொத்து சாமான்களைக் காப்பாற்றி வரவேண்டுமென்றும், அவன் சுகதுக்கங்களை தம்முடையதாகப் பாவிக்கவேண்டுமென்றும், அவனில் ஏதாகிலும் கெடுதி ஏற்பட்டிருக்குமாயின் அதனைப்பிரஸ்தாபிக்கலாகாதென்றும், புருடன் வீட்டிற்குள் பிரவேசிப்பானாகில் அவனை வரவேற்று சதாவும் சிறித்த முகத்துடன் அவனை முன்னோக்கி வார்த்தையாட வேண்டுமென்றும், அவன் முன்னிலையில் பரபுருடர்களைப் புகழ்ந்து பேசலாகா தென்றும், அவனினின்று ஏதாகிலும் கெடுதி நடைபெற்று விடுமாயின் சதாவும் அதைக்கூறி அவனை வெட்கமடையச் செய்யலாகாதென்றும், அவன் வீட்டினுள் பிரவேசிக்கும்போதே, அவன் வதனத்தில் சந்தோஷ அறிகுறி தோன்றுகிறதா அல்லது துக்கப்பட்டு வருகிறானா என்பதை கவனித்து அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார்கள்.

முடிவாகக் கூறுமிடத்து, சதிபதிகளி லொவ்வொருவரும் மற்றவரின் மன உணர்ச்சியை மதித்து நடந்து வருவதுடன் எதனால் அன்னியோன்ய வாழ்க்கைக்கு ஹானி ஏற்படுமோ அதனை விட்டொழிக்க வேண்டிய மார்க்கத்தைத் தெரிந்துகொள்வது பிரதானமாகும். இதுதான் சதிபதிகள் இன்பமாய் வாழ்க்கை நடத்துவதற்குள்ள தக்கசாதனமாகுமென்பது திண்ணம்.

இஸ்லாமும் சன்னியாசங் கொள்ளுவதும்

(மௌலானா அப்துஸ்ஸலாம் சாஹிப் நத்வீ வரைவது)

இப்பூவுலகினில் இஸ்லாம் ஜ்வலித்துப் பிரகாசிப்பதற்குமுன், ஒன்றுக்கொன்று நேர்முரணான இருகுணங்கள் சற்குண ஜாபிதாவில் கணக்கிடப்பட்டு வந்தது. அதிலொன்றுவெனில், உரோம ஈரானிய சக்ரவர்த்திகளும், அமீர் தலைவர் தனவந்தர்களும் உலக வாழ்க்கையைத் தக்க முறையில் வெளியாக்குவதற்கு அவைகள் காரணங்களாகுமெனக் கருதியிருந்தனர். இதுகாலை அக்குணங்கள், ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேல் நாடுகளில் வாஸஞ் செய்பவர்களிடம் சென்று பல வருணங்களுடன் முன்னிலும் தக்கமுறையில் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன் உலக முழுதும் அதனைப் பின்பற்றி நடக்க இடுப்புக்

சுட்டிக்கொண்டுமிருக்கிறது. இரண்டாவதோவெனில், ஹிந்து யூதர் கிறிஸ்து முதலியோரின் மார்க்கத் தலைவர்கள் பின்பற்றி யொழுகிய குணங்களாகும். அதில் தீர்ச்சியான வரட்சியும் கஷ்டமெடுத்துக்கொள்ளுதலும் காணப்பட்டது. அநேகர் அதனை வெகுவாய் மதித்து, அன்னோருக்கு சங்கை செய்பவர்களாயுமிருந்தார்கள். எவர்கள் அவ்வாறான வாழ்க்கையை விரும்பவில்லையோ அன்னோரும் அவர்களுக்குச் சங்கை செய்கிறவர்களாயிருந்தார்கள். இதுகாலையும் பகீர் மஸ்த்தான் போப் சன்னியாசி முதலியோர்களுக்கு முன் அநேகர் தலை சாய்ப்பவர்களா யிருக்கின்றார்கள்.

இஸ்லாத்துக்கு முன் உலகின் போக்கில் இவ்வாறான இரண்டு நிலைமை காணப்பட்டு, ஒவ்வொன்றை ஒவ்வொரு சாரார் கையாண்டு, ஒன்றுக்கொன்று முரண்பட்டதேபோல் காணப்பட்டுவந்தது. இஸ்லாம் பிரகாசிக்க ஆரம்பித்த காலை இவ்விரு குணங்களும் உச்சஸ்தானத்தை அடைந்திருந்ததெனக் கூறுதல் மிகையாகா. ஆனால் இஸ்லாம் மார்க்கமானது ஒரே அடியாய் இவ்விரண்டையும் வெறுத்து, அவைகளுக்குப் பகரமாய் அவ்விரண்டுக்கு மத்தியிலுள்ள நடுத்தரமான ஓர் முறையை ஏற்பாடு செய்து, மானிட தற்சுபாவத்துக்கு ஏற்றதாய் அமைத்து, அதில் வேறெதற்கும் இடமில்லாது செய்து விட்டது. எனவே, தாய்தந்தையர்களுக்கு வழிப்பட்டு நடக்கும்படியும், பிள்ளைகளுடன் அன்பாயிருக்குமாறும், பெண்டீர்களுடன் தக்க முறையில் நடந்துகொள்ளும்படியும், எல்லோருடனும் மிருதுவாய் வார்த்தையாடுமாறும், ஸலாம் சொல்பவர்களுக்கு தக்கமுறையில் மறுமொழி கூறும்படியும் இன்னும் இவைபோலொற்ற ஆயிரக்கணக்கான விஷயங்கள் சற்குணத்தின் பாகங்களாகுமென்றும், இவ்விஷயங்களை சிறார்களுக்கு முதியோர் கற்பித்துக் கொடுக்க வேண்டுமென்றும் செய்துவிட்டது.

இவ்வாறான சாதாரண குணங்களைக்கேள்விப்பட்ட மாத்திரத்திலே கடைசி காலத்தின் கடைசி நபி அவர்களின் போதனை இது தானோ? இதிலென்ன ஆச்சரியம் காணப்படுகிறது? என்னும் கேள்வி ஏற்படக்கூடும். அதற்கு இரண்டு விதத்தில் பதில் கூறலாம் :—

(1) உலகமும் அதிலுள்ள வஸ்துக்களும், எவ்வஸ்துக்களைக் கொண்டு நிலைபெற்றிருக்கின்றனவோ அவை சாதாரண இயற்கையான வஸ்துவாக இருக்கின்றது; சிலகால் செயற்கை வஸ்துக்கள், இயற்கையை மறைக்கும்படியும் செய்துவிடுகின்றது. அதுபொழுது ஒரு நபியுடைய வேலையானது, உலகினில் காணப்படும் செயற்கையில் போர்த்தப்பட்டிருக்கும் மூடியை நீக்கி, இயற்கையின் அந்தரங்கம் யாவருக்கும் துலங்கும்படி செய்துவிடுவதாகும். பால், தண்ணீர் இவைகள் சதாரணமாய் இயற்கை வஸ்துக்களாயிருக்கின்றன; இவ்விரண்டு வஸ்துக்களினாலும் மானிட ஜீவிப்பிற்குள்ள வளர்ச்சி காணப்படுகின்றது. ஆனால் ஒரு குடிகாரன் இவ்விரண்டையும்விட சாராயம் மேலாகுமெனக் கூறுவானாகில், சாராயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இன்பத்துக்கு முன், மேலே கூறப்பெற்ற இருஇயற்கை வஸ்த்துக்களுக்கும் எவ்வித மதிப்புமில்லாது போய்விடுகிறது. இந்நிலைமையில், ஒருமனிதன் பால், தண்ணீர் இவைகளினாலேற்படும் பிரயோசனம், சாராயத்தினாலுண்டாகும் நஷ்டம் இவைகளைக் கூறுவானாகில், அவன் ஸைன்ஸிலுள்ள பெரியதோர் நுட்பமான விஷயத்தைக் கண்டுபிடித்துக் கூறிவிட்டதாக எண்ணிக்கொள்வதா? அவனுடைய கருத்து சாராயத்துக்குள் அமைத்து வைத்திருக்கும் போதையின் கெடுதியை மானிடர்களிடம் எடுத்துக்காட்டி, அதனை வெளிப்படுத்திவிட வேண்டுமென்பதாகும். இவ்வாறே எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் காலத்தில், சற்குண சம்பந்தமாயுள்ள உலக விஷயமும், குடிகாரர்கள் விஷயம்போல் தான் காணப்பட்டது. ஒரு பக்கல், உரோமர் ஈரானியர் முதலிய சக்ரவர்த்திகள் தங்கள் ராஜபரிபாலனத்தின் மகிழ்ச்சியினாலேற்பட்ட போதையில் மூழ்கிப்போயிருந்தனர். மற்றொருபக்கல் யூதர், கிறிஸ்தவர், இந்துக்கள் முதலியோரின் தலைவர்கள் பழைய கிழிந்த உடையிலே பங்கரையான கோலத்தில் தென்பட்டார்கள். இதே நிலைமையில்தான் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் ஓர் நடுத்தரமான, சாதாரணகுணத்தை—கோலத்தைக் கற்பித்து அவ்விரு வகுப்பார்க்கு மிடையிலிருந்து மறதிகேடு என்னும் திரையை நீக்கி, பட்டினாலுண்டான ஒளிபொருந்திய சட்டைக்குள்ளும் கிழிந்துபோன கம்பளிப்போர்வைக் குள்ளும் மறைந்திருந்த இயற்கை அழகை உலகிற்குமுன் வெளிப்படுத்தி வைத்தார்கள்.

(2) எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் எவ்வாறான வாழ்க்கை முறையை

ஏற்படுத்தினர்களோ அவைகள் சாதாரணமாகத் தோன்றினும், அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட காலத்தின் நிலைமையை நம் முன்வைத்துப்பார்ப்போமாகில், தாங்கள் கற்பித்த முறையானது முழுதும் அக்காலத்திய நடைமுறைக்கு நேர்விரோதமாக இருந்ததென் பதைத்தெரிந்து கொள்கிறோம். ஒருவருடைய நோக்கத்துக்கு விரோதமான நிலைமை தலைசிறந்து விளங்குங்கால் ஒருவர், தம் நோக்கத்தை நிறைவேற்றி ஜெயங்கொள்வதும், காலத்தின் நிலைமைக்கு மாற்றமாய் நடப்பதும் பெரியார்களின் வேலையாகும். அக்காலத்தில் அரபியர்கள் அதிலும் குறிப்பாய் சஹாபாக்கள் தரித்திர—கஷ்ட நிலைமையிலேயே வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ஒரு சஹாபி அறிவிப்பதாவது:—நான் ஏழாவது முஸ்லிமாகும்; இஸ்லாத்தின் ஆரம்பத்தில் யாங்கள் இலை தழைகளைத் தின்று காலங்கழிக்கும் நிலைமையிலிருந்தோம்; பொதுவாக மதீனாவாசிகள் பேரீத்தம் பழம் தொலிக் கோதுமை இவைகளைப் புசிப்பவர்களாயிருந்தார்கள்; சஹாபாக்கள் வீட்டில் சல்லடை இல்லாதிருந்ததால் மாவைச்சலிக்க இயலாது அறைத்தவுடன் வாயால் ஊதி அதிலுள்ள உம்மி எடுபட்டவுடன் மீதத்தை சாப்பிடுவார்கள்; அநேக சஹாபாக்களிடம் ஒரு துப்பட்டியைத் தவிர வேறொன்று மில்லாதிருந்ததால் அதைக் கழுத்தில் முடிந்து கிரண்டைக்கால் வரை தொங்கவிட்டு, சாரம் சட்டை இவ்விரண்டுக்குப் பகரமாய் அதை உபயோகித்து வந்தார்கள்; ஒரு சஹாபி, பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி ஒரு துப்பட்டியோடு தொழுகை நிறைவேற்றுவது கூடுமா? என வினவினர்; அதற்கு, பெருமானார் (ஸல்.) அவர்கள் உங்களில் ஒவ்வொருவரிடமும் இரண்டுதுணி இருக்கிறதோ? எனக் கேட்டார்கள். விவாகங்களின் போதும் கல்யாணப்பெண் மாப்பிள்ளைகளுக்கு சாதாரண இரண்டு உடுப்புக்கள் கிடைப்பது கூட கஷ்டமாக இருந்தது. ஹஜ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களிடம் அழுத்தமான ஓர் சட்டையிருந்ததால், கல்யாணப்பெண்ணைச் சிங்காரிக்குங்கால் அச்சட்டையை இரவலாக வாங்கிச் செல்வார்கள். ருமால் சாதாரணமான ஓர் வஸ்துவாகயிருந்தும் சஹாபாக்களுக்கு அதுகூட கிடைக்காதிருந்ததால், சாப்பிட்டவுடன் தங்கள் கைகளை குதிகாலில் துடைத்துக்கொள்வார்கள்; சங்கைவான்களான சஹாபாக்கள் இயல்பில்லாத ஸ்திதியில் வாழ்ந்து சிறிய வீடுகளில் வாசஞ்செய்து வந்ததால் மலங்கழிப்பதற்குக் கூட வீட்டில் வசதியில்லாதிருந்தது; அநேக வீடுகளில் விளக்கு வைக்கப்படுவதுமில்லை என்பதே. இஃது சந்நியாசத்தைக்கைகொண்ட பரதேசிகளுடைய நிலைமைக்கு ஒற்றதாக இருந்தது. அதுகாலை நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சந்நியாசம் பூண்டொழுக வேண்டுமென்று உபதேசம் புரிந்திருப்பார்களாயின், அவ்வுபதேசம் சஹாபாக்களின் நோக்கத்துக்கு ஏற்றதாயிருப்பதால் யாவரும் அதனை அன்புடன் அங்கீகரித்திருப்பார்கள்.

இதுவன்றி, மடமை குடிகொண்டு அந்தகார இருள் சூழ்ந்திருந்த காலத்தில், மார்க்க சம்மந்தமானநடப்புகள் எவ்வாறிருந்ததென கவனிப்போமாயினும், அதிலும் அரபிகள் சன்னியாசம் பூண்டொழுகுவதையே பிரதானமாகக் கொண்டிருந்தார்களென்பது நன்கு புலனாகும். மார்க்க அமல்—செயல்களில் அன்னோருக்கு ஹஜ்ஜை நிறைவேற்றுவதுதான் மிகமிக உவப்பான செயலாக இருந்ததால், அவர்கள் பலவாறான கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு அக்கடமையை நிறைவேற்றுபவர்களாயிருந்தார்கள். உதாரணமாக, எமன்வாசிகள் ஹஜ்ஜுக்காகப் பிரயாணம் செல்லுங்கால், சாப்பாடு முதலியவைகளுக்காக எதையும் தங்களுடன் எடுத்துச்செல்லாது, "யாங்கள் அல்லாஹ்வின்மீது முழு ஆதரவு வைத்து அவன்வீட்டை தெரிசிக்கச்செல்வதால், அவன் எங்களைப் பட்டினிப்போட்டு விடமாட்டான்" எனக்கூறுவார்கள். ஆனால் மதீனாவுக்குவந்தவுடன் பிச்சைவாங்க ஆரம்பித்துவிடுவார்கள். அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றிவிட்டுத் திரும்பச்செல்லுங்காலை, தலைவாயல் மார்க்கமாய் வீட்டிற்குள் பிரவேசிக்காது வீட்டுடைய முகட்டில்ஏறிஉள்ளால் செல்வாக்கள். ஹஜ்ஜுடைய காலத்தி குரைஷ்யர்களைத் தவிரயுள்ள ஆண்பெண் யாவரும் நிர்வாணமாய்த்"தவாப்" செய்யும் வழக்கமிருந்தது. அதற்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டிருக்கிறது (1) குரைஷியர்கள் கஃபாவின் பாதுகாவலர்களாயிருந்ததால், அன்னோர் இதர அரபிகளைவிட தங்களுக்கு விசேஷ தனிச்சிறப்பு இருக்கவேண்டுமென்பதைக் கருதி, இவ்வாறான ஒரு நூதன விஷயத்தை ஏற்பாடு செய்தார்கள். (2) அரபிகள் உடுப்பு அணிந்துகொண்டு மார்க்க அனுஷ்டானம் புரிவதை, உலகத்தை வெறுத்திருப்பதற்கு முற்றும் விரோதமாகக் கருதியதால், அவ்வாறு செய்துகொண்டிருந்தார்கள்

மடமை குடிகொண்டிருந்த மௌடீக காலத்தில் காணப்பட்ட கஷ்டங்கள் முழுதும் இஸ்லாத்தின் ஆரம்பத்திலும் தலை சிறந்து காணப்பட்டது. உதாஹரணமாக, ஒரு விர்த்தாபியர் தமது இரு குமாரர்களின் உதவிகொண்டு நடந்து செல்வதை எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பார்த்து, அதன் காரணம் யாதாகுமென வினவியபோது, அவர் கஃபத்துல்லாஹ் வரை கால்நடையாகச் செல்வதற்கு நேர்ச்சை செய்திருப்பதாய்த் தெரிய வந்தது. ஒரு சஹாபி இவ்வாறு நேர்ச்சை செய்துகொண்டு நடந்து செல்வதைப்பார்த்து, கால்நடையாகவும் வாகனத்தின்மீது வீற்றும் செல்வீராக வென்று பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறினார்கள். இதுவன்றி ஒருவர் ஒட்டகத்தைப்போல் மூக்குகயிறு மாட்டிக்கொண்டு மற்றொருவர் அதைப்பிடித்து தவாப் செய்வதை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் நேரிலேயே பார்த்திருக்கின்றார்கள்.

சிலர் நோன்பு நோற்பதிலும் பற்பலவாறான கஷ்டங்களை தங்கள்மீது ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். எனவே, நோன்பு நோற்றிருக்குங்கால் வெயிலில் நின்றுகொண்டிருப்பார்கள்; யாருடனும் பேசமாட்டார்கள். இவ் விஷயங்களெல்லாம் உலகத்தை வெறுத்து சன்னியாசங் கொள்வதற்குள்ள மார்க்மென்று உறுதிகொண்டிருந்தார்கள். இந்நிலைமையில், இஸ்லாம் தோன்றியவுடன் சஹாபாக்கள் முன்னிலும் கடிஸான முறையில் முழுவிருப்பத்துடன் அமல் செய்ய முற்பட்டு, உலகப்பற்றையே மனதினின்று நீக்கி சன்னியாசம் புகுவதில் அதிகவிருப்பங் கொண்டவர்களாய்க்காணப்பட்டார்களாதலின், நம்பிராட்டிமார்களிடம் சென்று பெருமானார் (ஸல்.) அவர்களின் வணக்கம் எவ்வாறானதாயிருக்கிறதென்று வினவி, பெருமானார் (ஸல்.) அவர்கள் வணக்கம் புரியும் விதத்தைத்தெரிந்து கொண்டு, அதனைமிக அற்பமானவை என மதித்து, தங்களுக்கும் ரசூல் நாயகம் (ஸல்) அவர்களுக்குமிடையில் பெரும் வித்தியாசமிருக்கிறதென்றும், அவர்களின் பாவங்கள் யாவற்றும் மன்னிக்கப்பட்டுப் போயிருப்பதால், அவர்கள் அதிகமாய் வணக்கம்புரிய வேண்டுமென்னும் ஆவசியங் கிடையாதென்றும் கூறினார்கள். அதுபொழுது அவர்களிலொருவர், தாம் இரவு முழுதும் தொழுகை நிறைவேற்றி வருவதாயும், மற்றொருவர் தாம் சதாவும் நோன்பு நோற்று வருவதாயும், வேறொருவர் தாம் எப்பொழுதும் விவாகஞ் செய்து கொள்ளப்போவதில்லை என்றும் தெரிவித்தார்கள். ஹஸ்ரத் உதுமானிப்னு மத்வூன் (ரலி.) அவர்கள் சன்னியாசத்தை அதிகமாய் விரும்பும் சஹாபியாகயிருந்ததால், தங்கள் மீது பெண், வாசனை திரவியம், சுவை பொருந்திய வஸ்துக்கள் முதலியவற்றை விலக்கிவைத்துக் கொள்ள நாடினார்கள். இதுவன்றி இன்னும் எத்துணையோ சஹாபாக்கள் தங்கள்மீது பல வாறான கஷ்டங்களை ஏற்படுத்திக்கொண்டு வணக்கம் புரிவதிலேயே தங்கள் காலம் முழுதையும் செலவிட்டிருக்கின்றார்கள். ஒரு நாளன்று பள்ளிவாயலின் இரண்டு தூண்களுக்கிடையே கயிறு தொங்கிக் கொண்டிருந்ததை எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பார்த்து, எதற்காக இவ்வாறு தொங்கவிடப்பட்டிருக்கிறதென்று வினவியபொழுது, இன்னசஹாபி அதைத் தொங்கவிட்டிருக்கின்றார்; அவர்தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருக்கும்பொழுது ஏதாகிலும் சடவு தோன்றினால் அதில் சற்றுநேரம் தொங்கி சடவைப்போக்கி நித்திரை ஏற்படாது செய்துகொண்டு மறுபடியும் வணக்கம் புரிவதிலீடுபட்டு விடுவார் என அறிவிக்கப்பட்டது. இதுவன்றி ஒரு சஹாபி சதாவும் பகலில் நோன்புநோற்றுக் கொண்டும் இரவு முழுதும் தொழுகை நிறைவேற்றிக் கொண்டுமிருந்ததாக கூறப்படுகின்றது.

இஸ்லாம் மார்க்கத்தில், பகைவர்களுடன் யுத்தம் புரிவதும் ஓர்வணக்கமாகயிருப்பதால், அநேக சஹாபாக்கள் அதன்மீது விருப்பங் கொண்டு உலகத்தைவெறுப்பதற்கே முற்பட்டு விட்டார்கள். உதாஹரணமாக, ஹஸ்ரத் ஸஅதிப்னுஹிஷாம் (ரலி.) அவர்கள் கூறுகின்றார்கள்: யான் என் மனைவியை நீக்கிவிட்டு மதீனமாநகர் வந்து அங்குள்ள பூமியைவிற்று யுத்தஆயுதம் வாங்கிக்கொண்டு இஸ்லாத்தின் விரோதிகளுடன் போர்புரியநாடினேன் அதுபொழுது சில சஹாக்களைச் சந்திக்கநேர்ந்ததால், தங்களிலும் அருவர் அவ்வாறு செய்ய உத்தேசித்திருப்பதாக அன்னோர் தெரிவித்தனர்.

இவை யாவற்றையும்விட சஹாபாக்களில் 'அஸ்ஹாபசுப்பா' என்னும் ஒரு கூட்டத்தார் இருந்தனர். அன்னார் முழுதும் சன்னியாச வாழ்க்கையே கைகொண்டு, தங்களை முழுதும் இஸ்லாத்துக்கு ஊழியஞ்செய்வதற்காகவே தத்தம் செய்திருந்தார்கள். அன்னோருக்கு உலக

சம்மந்தமாயுள்ள யாதொரு வேலையுமில்லா திருந்தது. அதாவது, வெள்ளாமை செய்வது, தொழில் புரிவது, கூலிவேலைசெய்வது முதலிய வைகளைவிட்டு வணக்கம்புரிவதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தார்களாதலின் இராப்பகல் காலங்களை, தொழுவதிலும் குர் ஆன்ஷரீப் ஓதுவதிலும் செலவிட்டு வந்தார் கள். அவர்களிற் சிலர், பகற்காலங்களில் காட் டுக்குச் சென்று விறகு வெட்டிச் சுமந்து வந்து அதனை விற்று தங்களுட னிருப்பவர்களுக்குச் சாப்பாடு தயார் செய்வார்கள். அன்னோ ருக்கு புத்திர சந்ததிகளுங் கிடையாது. அவர் களிலெவரும் விவாகம் புரிந்து கொள்வாராயின் அவர் அக்கூட்டத்தை விட்டுநீங்கி விடுகின்றார். அவர்களில் யாரிடமும் துப்பட்டி சர்ரம் இவை களிரண்டும் ஏககாலத்திலிருந்தது கிடையாது. அவர்கள் துப்பட்டியை கழுத்தில் முடிந்து கால்வரை தொங்கவிட்டு விடுவார்கள். அநேக அன்ஸார்கள் பேரீத்தங் குலைகளை அறுத்து வந்து தொங்க விட்டு விடுவார்களாதலின், அதி லிருந்து கீழே விழும் பேரீத்தம் பழங்களை எடுத்துச் சாப்பிடுவார்கள். சிலகால் சேர்ந்தாப் போல் இரண்டு தினங்கள்வரை சாப்பிடா மலே இருந்து விடுவார்கள். நபிகள் பெருமா னார் (ஸல்.)அவர்களிடம் ஸதகாச் சாப்பாடுவரு மாகில், அதை அவர்களிடம் அனுப்பிவிடுவார் கள். விருந்துச் சாப்பாடுவருமாகில் அவர்களை யும் அழைத்துக் கூடவைத்துச் சாப்பிடுவார் கள். சில நேரங்களின் இராக் காலங்களில் முஹாஜிர் அன்ஸார்களிடம் ஒப்புவித்த சாப் பாடு கொடுக்கும்படியும் செய்வார்கள். இவ்வாறு 400 நபர்வரை இருந்ததாகத் தெரிகிறது.

இச்சம்பவ நிகழ்ச்சிகள் யாவற்றையும் நன் காராய்ந்து பார்ப்போமாகில், இஸ்லாத்தின் ஆரம்ப சரிதையானது முழுதும் உலகத்தை வெறுத்து சன்னியாசங் கொள்வதளவில் அழைப்பதாக இருந்ததென்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம். ஆனால் எம்பெருமா னார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இதனை வெறுத்து, சன்னியாசங் கொள்வதற்குப் பகர மாய் நமக்கு சுளிவான—நேர்மையான ஓர் பாதையை அல்லாஹ் தஆலா சன்மான மளித் திருப்பதைத் தெரிவித்ததுடன், எவர்கள் விவாகம் புரிவது மார்க்கப் பற்றுதலுக்கு முரண் பாடுடைய தாகுமெனக் கருதினார்களோ அவர் களை நோக்கி "விவாகம் புரிந்து கொள்ளுங்கள்; உங்களின் மிகுதத்தைக் கொண்டு உம்மத்து கள் விஷயமாய், இதர நபிமார்களுக் கிடையே பெருமை பாராட்டுவேன்" எனக்கூறினார்கள் இது வன்றி சன்னியாசங் கொள்வதற்கு விரோ தமாயுள்ள அநேக விஷயங்களையும் தெரிவித் திருக்கிறார்கள்.

(1) ஹஸ்ரத் உத்மானிப்னு மத்ஊன் (ரலி) அவர்கள், பெண் வாசனை திரவியம் சுவை பொருந்திய வஸ்துக்கள் ஆகியவைகளை தங் கள் மீது ஹறாமாக்கிக் கொள்ள நாடிய பொழுது, முஸ்லிம்காள்! அல்லாஹ் தஆலா உங்கள்மீது ஆகுமாக்கிவைத்திருக்கும் தூய் மை பொருந்திய வஸ்துக்களை எதற்காக ஹறா மாக்கிக்கொள்கின்றீர்கள்? எனக்கூறி, அல்லாஹ் தஆலா வரம்பை மீறி நடப்போரை ஒருபொழு தும் உகக்கமாட்டான் என அவன் அறிவித் திருப்பதை, அதற்கு ஆதாரமாகவும் எடுத்துக் காண்பித்திருக்கின்றார்கள்.

சன்னியாசங் கொள்வதானது நடுத்தர வாழ்க்கைக்கு முற்றும் விரோதமாயிருப்ப தால், அதனை இஸ்லாம் மதம் அங்கீகரிக்க வில்லை என்பதை மேல் கூறப்பட்டுள்ள ஆயத் தால் நன்கு தெரிந்துகொள்கிறோம். ஏனெனில், இஸ்லாமிய வாழ்க்கையானது முழுச் சுவண் டியை அனுபவிப்பதுமல்ல; ஒரு விஷயத் தில் வரம்பைக் கடந்து சென்று சுவைபொருந் திய பதார்த்தங்களையும் வாசனை திரவியங் களையும் தங்கள்மீது ஹறாமாக்கிக் கொள்வது மல்ல. ஆகவே சாராயத்தைப்போல் குளிர்ந்த தண்ணீரையும், இதர பெண்களைப்போல் தன் பெண்சாதியையும் தம்மீது ஹறாமாக்கிக் கொள்வதுகூடாது.

(2) சன்னியாசங் கொள்வதானது தற்கொலை செய்து கொள்வதுபோலிருந்தது. அதாவது மானிடன் அல்லாவுக்காக எவ்வளவு தூரம் கஷ்டமெடுத்துக் கொள்கிறானே அவ்வளவுக்கு அல்லா, இவன்மீது பிரீதிகொள்வதாக மானிடர் கள் எண்ணிக்கொண்டிருந்தனர். ஆனால் எம் பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் இவ்வாறான எண்ணம் தவறென்பதை நிரூபித் துக்காட்டி யிருக்கிறார்கள். உதாஹரணமாக, ஒரு வருடத்தில் ஒரு சஹாபி தங்களிடம்வந்து விட்டுத் திரும்பிப்போய்விட்டார். மறு வருடம் அவர் சமுகம் வந்தகால், அவரைப் பார்க்கும் போது அவருடைய உருவங்களெல்லாம் மாறிப்போய் இன்னாரென்று தெரிந்துகொள்ள முடியாது அவரே தாம் இன்னாரென்று அறி விக்கும்படியாய்விட்டது. (தொடரும்)

கர்பலா சம்பவ நிகழ்ச்சி

'கர்பலா' என்பது 'புராத்' நதிக்கரையி லுள்ள ஒரு வனந்தரத்துக்குப் பெயராக யிருந்தது. இதுபொழுது ஆங்கு செய்யி துஷ்ஷுஹ்தா ஹஸ்ரத் இமாம் உஸைன் (ரலி.) அவர்கள் அடக்கம் செய்யப்பட்டிருப்பதால் அஃது பெரியதோர் பட்டணமாய்த் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. பக்தாத் பட்டணத்தி லிருந்துகர்பலாவுக்கு ஒரு வழியு மேற்பட்டிருக் கின்றது. இதுகாலை அஃது ஆங்கில ஆக்ஷியின் கீழிருந்து இந்தியாவைப்போன்று சுதந்திரம் பெறுவதற்கு முயற்சித்து வருகின்றது. அது உஷ்ணம்பொருந்திய பிரதேசமாகையால், ஹஸ் ரத் அவர்கள் ஷஹீதாக்கப்படுங்காலையும் ஆங்கு உஷ்ணம் அதிகரித்திருந்ததால், ஹஸ்ரத் அவர் களின் அனுமதியின்மீது கூடாரம் அடிக்கப் பட்டது. அதன் காரணமாய் உமர்ஸஅதின் சேனைகளும் ஹஸ்ரத் அவர்களை முற்றுகையிட் டுக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டது. உமர்ஸ அத் என்பவன் இதுவிவரங்கள்முழுதையும் இப் னுஜியாதுக்கு எழுதித் தெரியப்படுத்தவே, ஹுஸைன் (ரலி.) யை எவ்வழியிலும் செல்ல விடாது எஜீதிடம் அறுதிமானஞ் செய்வதற் காக வற்புறுத்த வேண்டுமென்றும், தன் (இப்னுஜியாதின்) கைமூலம் எஜீதிடம் அறுதி மானஞ் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் இப்னுஜியாத் பதில் வரைந்தனுப்பி யிருந்தான்.

'உமர்ஸஅத்' என்பான் இவ்விஷயத்தை ஹஸ்ரத் அவர்களுக்கு அறிவிக்கவே, முஸ்லி மிப்னு உகைல், ஹானி இன்னோரை அனீதி யாய்க்கொன்றுவிட்ட விஷயமாய்ப் பரிகாரங் கூற வேண்டிய பொறுப்பு இப்னுஜியாதின் மீதேற் பட்டிருப்பதால், முதலாவது இப்னுஜியாத் அதற்குக்காரணம் கூறட்டும்; எஜீத் சம்மந்த மாய் ஆரம்பத்தில் யான் எதைக் கூறினேனோ இதுபொழுதும் அதைத்தான் கூறுகின்றேனாத லின், பாவியும் தகுதியற்றுவனுமாகிய எஜீதி டம் ஒருக்காலும் அறுதிமானஞ் செய்ய முடியா தென ஹஸ்ரத் அவர்கள் தெரிவித்துவிட்டார் கள்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள் கர்பலாவுக்கு, முஹற்றம்மாதம் முதல் திகதியே வந்து ஏழு இரவு பகல் அங்கேயே இருந்தார் கள். இதற்கிடையே இப்னுஜியாதிடமிருந்து உமர்ஸஅதின் மூலம் தூது வந்து போய்க் கொண்டிருந்தது. ஒவ்வொரு தூதின் நோக்க மும் ஹஸ்ரத் அவர்கள், எஜீதுக்கு வழிப் பட்டு நடக்க வேண்டுமென்பதையே வற் புறுத்துவதாக யிருந்ததால், ஹஸ்ரத் அவர்கள் குஞ்சிறிப்போடு,

யான் எனது நோக்கத்தின் மீதே உறுதியா யிருப்பேன் எனக் கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர் களும் அவர்களைச் சார்ந்தோரும் இரவு முழு தும் வணக்கம் புரிந்துகொண்டிருப்பார்களாத லின், ஹஸ்ரத் அவர்கள் தொழுகையை நிறை வேற்றியவுடன் ஒவ்வொருநாளும் பிரசங்கம் புரிய ஆரம்பித்து, இஸ்லாத்தின் உண்மைத் தத் துவம், பொருமை கொள்வதாலேற்படும் பலா பலன் முதலியவைகளை போதிப்பார்கள். அத் துடன் எஜீதின் செயல்கள் சன்மார்க்கத்துக்கு விரோதமாயிருப்பதாயும், அவன் இஸ்லாமிய கட்டளைக்கு பஹிரங்கமாய் மாறுசெய்து வரு வதால் அவனுடைய இச்செய்கையானது இதர குடிமக்களிலும்பரவி இஸ்லாத்தையேகெடுத்து விடுமென்றும், அதனல்தான் அவனுடன் அறு திமானஞ்செய்வது தகாத காரியமாக இருக் கிறதென்றும் கூறிவிட்டு, தங்கள் சந்ததிகளை நோக்கி, எஜீதின் தந்தையான முஆவியாவான வர்,உங்கள் பாட்டனாரான ஹஸ்ரத் அலீ (ரலி.) இடம் சதிபுரிந்தார். எஜீதுடைய பாட்டனோ உங்கள் நானா (நபிகள்திலகம் ஸல்.) அவர்களு க்கு அளவற்ற துன்பம் விளைவித்தான்: பத்ர், உஹத், கந்தக் முதலிய இடங்களில் யுத்தம் புரிந்தான். எஜீதின் தாதி (பாட்டி) யானவள், ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களின் பெரிய தந் தையராகிய ஹஸ்ரத் அமீர்ஹம்ஜா (ரலி.) அவர் களின் ஈரல் குலையை மெண்டாள். சுருங்கக் கூறின், பனூ உமையாக்கள் நம் பனூஹாஷிம் களின் சத்துருக்களாகும். யான் ஒருக்கால் யஜீ துக்கு வழிப்பட்டுப்போன போதிலும், குடும் பப்பகைமையின் காரணமாக, அன்னோர் சதா வும் நம்மைத் துன்புறுத்திக்கொண்டே யிருப்

பார்களாதலின் யுத்தம்புரிந்து மரணமடைவதே சிறந்ததாகுமெனத் தெரிவித்தார்கள்.

தண்ணீர் தடைபடுத்தியது.

ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் சந்ததிகளுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடாதென்பதற்காக 'புராத்' நதிக்கரையில் காவல் ஏற்படுத்துமாறு 8-ந்தேதி அதிகாலையில் இப்னு ஜியாத் என்பவன் உமர்ஸஅதுக்கு ஒரு உத்திரவு அனுப்பியிருந்தான் என்று ஒரு றிவாய்த்திலும், 9-ம் நாள் அஸருடைய நேரத்தில் ஷும்ர் மூலம் உமர்ஸஅதுக்கு இவ்வுத்திரவு அனுப்பப்பட்டதாக மற்றொரு றிவாயத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் பிரபல்யமான றிவாயத்துப்படி இவ்விரண்டும் வாஸ்தவமானதென்றே தெரிகிறது. அதாவது, 8-ந்தேதி அதிகாலையில் தண்ணீரைத் தடைசெய்துவிட வேண்டுமென்னும் கட்டளைவரவே, உமர்ஸஅத் அக் கட்டளையை நிறைவேற்றி வைத்தானயினும், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களை சில வீரர்களுடன் அனுப்பித் தண்ணீர் கொண்டுவரும்படி செய்திருந்தார்கள். அதுபொழுது அங்கு காவல்புரிந்துவந்த உமர்ஸஅதின் படையினர் எதிர்த்தினராயினும், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள் சண்டை சச்சரவுக்கிடையே கொஞ்சம் தண்ணீர்கொண்டுவந்தார்கள். என்றாலும் அஃது எல்லோருக்கும் போதியனவாயிருக்கவில்லை. இவ்விஷயம் இப்னுஜியாதுக்குத் தெரியவே, அவன் 9-ம் நாள் அஸருடைய நேரத்தில் ஷும்ர்மூலம், உமருக்கு ஓர் உத்திரவு அனுப்பி, நதிக்கரையில் தக்க காவல்காரர்களை ஏற்படுத்தி ஹுஸைனுக்கு ஒரு சொட்டுத் தண்ணீரும் கிடைக்காமற் செய்துவிட வேண்டுமென்று கடிஸான உத்திரவு அனுப்பி, உமர் இவ்வுத்திரவைத் தக்கமுறையில் அனுஷ்டிக்காவிடில் அவருக்குப் பகரமாய் ஷும்ரை ஏற்பாடு செய்துவிடுவதாய்த் தெரியப்படுத்திருந்தான்.

'ஷும்ர்' என்பான், கூபாவிலிருந்து யுத்தகளத்துக்கு வந்து பார்க்குங்கால் தண்ணீர் தடை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து சந்தோஷமடைந்தானயினும், உமர் என்பான் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்கு ஒரு நாள் தவணைகொடுத்து, நாளை 10-ம் நாள் யுத்தம் புரிய வேண்டுமெனக் கூறியிருந்ததைக் கண்டு சினங்கொண்டு, ஒரு நிமிடநேரங்கூட தவணை கொடுப்பது தகாதென்றும், எதற்காக ஹுஸைனுக்கு இவ்வாறு தவணை அளித்தீரென்றும் கோபம் மேலிட்டவனய் வினவினன். அதற்கு உமர்ஸஅத் என்பான், ஹுஸைன் (ரலி.) வணக்கம் புரிவதற்காக ஒருநாள் தவணை கோறினர்; அதற்காக தவணை கொடுக்கும்படி நேரிட்டுவிட்டதெனத் தெரிவித்தான்.

ஈரான் சக்ரவர்த்தி குமாரத்தி

10-ம் இரவில், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களின் சகோதரியான ஹஸ்ரத் ஜைனப் (ரலி.)யும், பெண்ஜாதியாகிய ஹஸ்ரத் ஷஹ்ஜனன்—ஷஹர்பானும், இதர பெண்டீர்களும் கூடாரத்தில் ஒன்றுகூடி, காலையில் நடைபெற விருக்கும் யுத்த விஷயமாய் ஹஸ்ரத் அவர்களிடம் வினவினர்கள். அதற்கு ஹஸ்ரத் அவர்கள் ஆம்! காலையில் யுத்தம் நடைபெறுமென்றும், மாலைக்குள் தாங்கள் வகைரா முடிவடைந்து போவது நிக்ஷயமென்றும் கூறி, உங்கள் கூடாரங்கள் கொள்ளையடிக்கப்பட்டு நீங்களெல்லீரும் சிறை செய்யப்பட்டு திமிஷ்க் கொண்டு போகப்படுவீர்களென்றும் தெரிவித்தார்கள். இதனை செவியுற்ற ஹஜ்ரத் அவர்களின் மனைவியும் ஈரான் சச்ரவர்த்தியாகிய எஜ்தகிரின் புத்திரியுமாகிய ஷஹர்பான் என்னும் மாது (ஈரான் ஜெயபேரிகை கொண்டபொழுது ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் இம்மாதை ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்கள். ஹஸ்ரத் இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி.) அவர்கள் இம்மாதின் வயற்றில் பிறந்தவர்களாகும்) ஹஸ்ரத் அவர்களை நோக்கி, யான் ஒரு அரசர்(எஜ்தகிர்) உடைய மகளும், மற்றொரு அரசர் (ஹஸ்ரத் ஹுஸைன் ரலி.) உடையமனைவியும், வேறொரு அரசர் (ஹஸ்ரத் அலீ ரலி) உடைய மருமகளுமாயிருப்பதால் யுத்தம் புரிவதில் எனக்கு எவ்வாறான அச்சமுங்கிடையாது. ஆனல் இவ்வாறான உதவியற்ற நிலைமையில் உயிரை தியாகஞ் செய்வதை நான் விரும்பவில்லையாகையால், தாங்கள் யுத்தம் புரிவதை ஒத்திவைத்து, மிஸர் ஈரான் முதலிய தேயங்களுக்குத் தெரியப்படுத்தி விடுவீர்களாயின், கூடிய சீக்கிரம் உதவிக்காக பட்டாளம் வந்துசேர்ந்துவிடும்; அதுபொழுது எஜீதின் முழுபலத்தையும் பார்த்துவிடுவதற்கு வசதி ஏற்பட்டுவிடுமெனத்தெரிவித்துக் கொண்டார்கள். இதனை செவியுற்ற ஹஸ்ரத் அவர்கள், குஞ்சிறிப்புடையவர்களாய், சென்ற ஏழுதினங்களாக பல இடங்களிலிருந்

தும் உதவி புரிவதின் தூதுவந்து கொண்டிருந்தது. ஆனல் யான் அந்தத் தூதை அங்கீகரித்துக்கொள்ளவில்லை. இதுபொழுது மிஸர் ஈரான் தேசங்களுக்கு தூதனுப்பத் தேவையில்லை. அதற்குக்காரணம், நம் வகைராக்கள்மீது எஜீது அதிக்கிரமம் புரிவதன்மூலம் அவனுடைய அநீதிகள் முஸ்லிம் சமூகத்தினருக்குத் தெரிந்து, அவர்களை விழிக்கச்செய்ய வேண்டுமென்றிருப்பதால், ஒருபெரும் படையைத் திரட்டி யுத்த முஸ்தீப்புச் செய்ய முயற்படுவேனுகில் என் நாட்டங்கள் நிறைவேருது போய்விடும் என்பதாகும்.

10-ம் நாள் அதிகாலை

முஹர்ரம் 10-ம் நாள் வெள்ளிக்கிழமையன்று அதிகாலையில், பகைவர்கள் அணி வகுத்து நிற்பதைக்கண்ட ஹஸ்ரத்இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள், தங்கள் கூடாரத்துக்குச் சூழால் அகிழ் தோன்றி அதில் தீமூட்டி விரோதிகள் கூடாரத்துக்குள் பிரவேசித்து விடாத படி செய்துவிட்டார்கள். உடனே ஷும்ர் என்பான்வரிசையிலிருந்து வெளிவந்துஏஹுசைன்! இவ்வுலகிலும் நெருப்பிருக்கிறது ; மறுமையிலும் ஏற்பட்டுவிடும்; உம்முடைய தந்தையான அலியும் (ரலி.) நெருப்புக்குச் சென்றுவிட்டார் என்று உறத்த தொனியில் கூறினன். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அவர்கள், யார் நெருப்பிலிருக்கின்ருர், எவர் சுவர்க்கமடைந்திருக்கிருர் என்பது நாளை மறுமைநாளில் தெரிந்து விடுமென விடைபகர்ந்தார்கள். அதுபொழுது ஹஸ்ரத் அவர்களுடனிருந்தவர்களி லொருவர் முன்வந்து, ஷும்ர் மீது அம்பெய்வதற்கு அனுமதி கோறினர். உடனே ஹஸ்ரத் அவர்கள், பகைவர்களிடம் எதிர்ப்புப்புரிய நேரிடுங்கால், முந்தும் வழக்கம் தங்களிடம் கிடையாது எனக்கூறி, அவரைத் தடைசெய்து விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அவர்கள் தங்களைச் சார்ந்தோர்களின் வரிசையிலிருந்து முன்வந்து மனக்கவர்ச்சியைஅளிக்கவல்ல தக்கதோர்சொற்பெருக்காற்றினர்கள். உடனே உமர்ஸஅத் என்பான் ஹஸ்ரத் அவர்களது படையின்மீது ஒரு அம்பை வீசி "முதன் முதல் ஹுஸைனுடைய படையின்மீது உமர்ஸஅத்தான் அம்பெய்தான்" என்பதை நீங்களெல்லீரும் தெரிந்துகொள்ளுங்கள் என அறிவித்தான். பின்பு விரோதிகளின் புறத்திலிருந்து ஒருவன் வெளிவந்து ஏஹுஸைன்! "நரகத்தைக் கொண்டு உமக்கு நன்மாருயம் கூறுகின்றேன்" எனப் பிதற்றியதை ஹஸ்ரத் அவர்கள் கேட்டு குஞ்சிறிப் புடையவர்களாய் அவனைக் கூர்ந்து பார்க்கவே, அவன் குதிரை மிரண்டு அத்துடன் கிடங்கில் விழுந்து நாசமடைந்தான். உடனே ஹஸ்ரத் ஹுர்ருப்னு எஜீத் முன்வந்து ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் சந்ததிகளுக்கு உதவியாய் யுத்தம் புரிவதாகக் கூறிக் கொண்டு கூபாவாசிகளை எதிர்த்து உயிரைதியாகஞ் செய்து விட்டார்கள்.

யுத்த முழக்கம்.

ஹஸ்ரத் ஹுர்ரு அவர்கள் மரணமான பின், உமர்ஸஅத் இப்னுஜியாத் இவ்விருவரின் அடிமைகளும் முன்வந்தார்கள். உடனே ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களின் ஓர் அடிமை முன்வந்து அவ்விருவரையும் எதிர்த்துக்கொன்றுவிட்டார். பின்னர் ஒவ்வொரு தலைவராய் முன் வருவதும் ஹஸ்ரத் அவர்கள் புறத்திலிருந்து ஒவ்வொரு ஆள் முன்வந்து யுத்தம் புரிவதுமாகயிருந்தது . இவ்வாறு செய்வதில் பகைவர்களுக்குப் பெரும் தோல்வி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஏனெனில், ஹஸ்ரத் அவர்களுடனிருந்தவர்கள் வீரபராக்கிரமத்துடன் எதிர்ப்பு புரிந்ததால், ஒவ்வொருவரும் 10 நபர்கள் வரை கொன்றுவிட்டு மரணமடைந்திருக்கிருர்கள்.இச்சம்பவ நிகழ்ச்சிகளைக்கண்ட ஷும்ர், ஸஅத் இருவரும் ஆலோசித்து ஒவ்வொருவராய் எதிர்ப்புப் புரிவதில் தங்களுக்குத் தோல்வி ஏற்படுகிறதென்னும் முடிவுக்கு வந்து, ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி.) அவர்களின் படையை நாலு பாகங்களிலும் வளைந்து கொண்டால் சீக்கிரம் காரியம் முற்று பெற்று விடுமென்னும் முடிவிற்கு வந்தர்கள்.இவ்வாலோசனைக் கேற்ப கூபா ஷாம் வாசிகள் யாவரும் ஹஸ்ரத் அவர்கள் படையின்மீது ஒரே அடியாய்த் தாக்கினர்கள். இத்தாக்குதலின் காரணமாய் ஹஸ்ரத் அவர்களைச் சார்ந்தோர்களின் குதிரைகள் முழுதும் மரணமாய் மூன்றே குதிரைகள் எஞ்சி இருந்தன. யுத்தம் முஸ்தீப்பாய் நடைபெற்றுக் கொண்டிருக்குங்காலை ஷும்ர் என்பான் கூடாரத்தின் பக்கல் செல்வதற்கு நாடிய பொழுது, ஹஸ்ரத் அவர்களைச் சார்ந்தோரில் ஒருவர், ஷும்ர் மீது அம்பெய்ததன் காரணமாக, அவனுடைய குதிரை மரணமாகி அவன் கீழேவிழுந்து விட்டான். இதற்கிடையே ஜும்ஆத்தொழுகையின் நேரம் நெறுங்கிவிட்டதால்,

தொழுகைக்காகயுத்தத்தைநிறுத்திவைக்குமாறு ஹஸ்ரத் அவர்கள் உறத்த தொனியில் கூறினார்கள். ஆனால் கூபாவாசிகள் நிறுத்திவைக்காததால் ஹஸ்ரத் அவர்களைச் சேர்ந்தோர் தொழுகையை நிறைவேற்றிவைத்தார்கள்.

அலிஅக்பர், அலிஅஸ்கர்ஷஹாதத்

கூபாவாசிகள் தொழுகை நேரத்திலும் துயர்படியாய் போர்நடத்தி, தொழுதுகொண்டிருந்தவர்களைக் கொன்றார்கள். ஹஸ்ரத் அவர்கள் தொழுகையை நிறைவேற்றிவிட்டுத் திரும்பிப் பார்க்குங்காலை, தங்களைச் சார்ந்தோர் யாவரும் கொல்லப்பட்டுப்போய் அலி அக்பர் அவர்கள் மட்டில் மிஞ்சியிருப்பதைக் கண்டார்கள். அதுபொழுது கூடாரத்துக்குள்ளிலிருந்து அலி அஸ்கர் அவர்கள் தாகமேலீட்டால்பெரிதும் வருந்திக்கொண்டிருக்கும் செய்தி அறிவிக்கப்பட்டு, ஹஸ்ரத் அவர்கள் கூடாரத்துக்குள் சென்று அவர்களை மடியிலேந்திக்கொண்டு வெளியில் வந்து, “பாவமற்ற இச்சிறு குழந்தை நமக்கிடையே நடைபெறும் யுத்தச்செய்தியொன்றையும் அறியாததாகையால் இதற்காகக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்” என வேண்டிக்கொண்டார்கள். உடனே எதிரிகள் ஓர் அம்பெய்தார்கள். அது பாலகரின் கழுத்தில்பட்டு ஷஹீதாய்விட்டது. ஹஸ்ரத் அவர்கள் இரத்தத்தில் மூழ்கியவர்களாய் அச்சிசுவை மடியில் அணைத்துக்கொண்டு கூடாரத்துக்குள் சென்று, பிள்ளையின் தாயாரிடம் கொடுத்து வெளியில் வந்து விட்டார்கள். பின்னர் மற்றொரு புதல்வராகிய அலீஅக்பர் அவர்களை யுத்தகளத்துக்கனுப்பி அவர்களும் பராக்கிரமத்துடன் யுத்தம் புரிந்து அனேகம் பகைவர்களைக் கொன்றுகொண்டிருக்கும்போது, ஓர் அநியாயக்காரன் ஈட்டியால் நெஞ்சில் குத்தவே, அது நெஞ்சிலிருந்து முதுகுப்பக்கல் வெளிவந்துவிட்டது. உடனே ஹஸ்ரத் அவர்கள் குதிரையை விரட்டியவர்களாய் படைக்குட்சென்று இளவாலிபருடைய ஜனாஸாவை எடுத்துவருங்காலை, குஞ்சிறிப்புடன் அலிஅக்பரின் முகத்தில் வடிந்துகொண்டிருக்கும் இரதத்தைத் துடைத்துக்கொண்டே, என்குமாரர் சன்மார்க்கத்தின் மகிமையை அதிகப்படுத்துவதற்காக தன் கடமையை நிறைவேற்றிவிட்டார்; இவர் உருவத்தில் என்பாட்டனாரைப் போன்றிருக்கின்றார்; இன்று யான் எமது மூதாதையரான ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களின் சுன்னத்தைப் பரிபூர்ணமாக்கி வைத்து குமாரரை தியாகஞ்செய்து விட்டேன் எனக்கூறினார்கள்.

இமாம் ஹுஸைன் (ரலி) மரணம்

ஒருவரும் மீதமில்லாது யாவரும் ஷஹீதாய்விடவே, ஹஸ்ரத் அவர்கள்கூடாரத்தினின்று வெளிப் புறப்படஉத்தேசித்தகாலை, பெண்டீர்கள் சிசுக்களை நோக்கி பொறுமையைக் கைகொள்ளவும், தைரிய மிழக்கா திருக்குபடியும் உபதேசம் செய்தபோது, ஹஸ்ரத் அவர்களின் குமாரரான இமாம்ஜைனுல் ஆபிதீன் அவர்கள் சுகயீனமாயிருந்தும், வாளைக் கையிலெடுத்துக்கொண்டு யுத்தகளத்துக்குச் செல்ல முற்படுவதை ஹஸ்ரத் அவர்கள் பார்த்து குஞ்சிறிப்புடன் தாம் செல்லவேண்டாம்; உம்முடன் என் சந்ததி அற்றுப்போகும்; என் உயிரை யான் தியாகஞ் செய்தவுடன் நீர் சிறை செய்யப்படுவீர்; அதனால் மானிடர்களுக்கு ஓர் உணர்ச்சி ஏற்பட்டு என் பாட்டனாரின் உம்மத்தோர்கள் மறதி கேட்டிலிருந்து விழித்து வெளிவருவார்கள் என அறிவித்துவிட்டு, யுத்தகளத்துக்கு வந்துசேர்ந்தார்கள். உடனே உமர் ஸஅத் என்பான், எதிர்ப்பதற்காக முன் வந்தான். ஹஸ்ரத் அவர்கள் அவனைப் பார்த்தவுடன் “என் முன்னால் நிற்காது விலகிப்போய் விடு” எனக்கூறவே, அவன் நடுக்க முற்றவனாய் பின்னால் நகர்ந்துவிட்டான். உடனே ஷிம்ர் என்பான் காலாட்படைகளுக்குச் சயிக்கினை செய்யவே, அன்னோர் ஹஸ்ரத் அவர்களை நாலு பக்கங்களிலும் வளைந்துகொண்டு ஹஸ்ரத் அவர்கள்மீது வாளாலும் அம்பாலும் கணக்கற்ற காயமேற்படுத்தி விட்டார்கள். இதுவன்றி மூன்றுநாள் வரை தண்ணீரருந்தாமலேஇருந்ததால் நாவரண்டுபோயும் காயங்களிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டுமிருந்தது. அதுபொழுதும் ஹஸ்ரத் அவர்கள் வாளைக் கையிலெடுத்தவர்களாய் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். கடைசியாக ஷிம்ர் என்பான் தங்களை வளைந்துகொண்டபோது தர்ஆ பின் ஷரீக் என்பான் தங்கள் இடகரத்தின்மீது வாள்வீசியதால் கை துண்டாக்கப்பட்டு கீழே விழுந்தது. அதுபொழுது ‘ஸனான் இப்னு அனஸ்’ என்பான் நெஞ்சில் ஈட்டியால் குத்தவே, அது முதுகுப்பக்கல் வந்துவிட்டது. உடனே ஹஸ்ரத் அவர்கள் பூமியின்மீது விழுகவே, கவ்லா என்பான் நெஞ்சின் மீது ஏறி உட்கார்ந்து தலையை அறுத்துக்கொண்டாள்.

சுகாதாரம்—பிராணவாயு

ஆரோக்கியத்துக்கும், பிராணனுக்கும் நல்ல காற்று அவசியம் வேண்டப்படுகிறது.

பிராணவாயுவைக் கண்டுபிடித்தவர் ஜோஸப் ப்ரீயிஸ்ட்லீ என்னும் ஆங்கிலப் பாதிரியாகும். இவருக்கு சாஸ்த்திர விஷயத்தில் அதிக ஊக்கமும் ஆவலுமுண்டாகையால், அவர் ஓர் நுட்பமான-மகத்தான விஷயத்தைக் கண்டுபிடிக்க நேர்ந்தது. பிராணவாயு கண்டுபிடிக்கப் பட்டபிறகு பிராணனைக் காப்பாற்றக்கூடியது காற்றிலுள்ள பிராணவாயுதானென்றும், அஃதில்லாவிடின் உயிர்வாழ முடியாதென்றும் சாஸ்த்திர ஆராய்ச்சியாளர் இதுபொழுது கூறுநிற்கின்றனர். ஆகவே, இஃது ஆகாயத்திமட்டுமின்றி சமுத்திரத்திலுங்கூட பிரதானமாய் வேண்டற்பாலதாகுமென்பது நன்கு புலனுகின்றது. உயிர்ப்பிராணிகள் எவ்வாறு ஆகாயத்திலுள்ள காற்றை உட்கொண்டு ஜீவித்திருக்கின்றனவோ அவ்வாறே, சமுத்திரத்திலுள்ள மீன்களுக்கும் பிராணவாயு அத்தியாவசியமென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. எனவே பிராணவாயு இல்லாவிட்டால் உயிர் வாழமுடியாதென்பது திண்ணம்.

பிராணவாயு, ஜீவியத்துக்கு அத்தியாவசியம் எனத் தெரிந்தவுடன் டாக்டர்கள் மேலும் மேலும் ஆராய்ச்சிசெய்து, அது எவ்வளவு தூரம் பிரயோசனப்படுகிறதென்பதைக்கண்டு பிடிக்க முற்பட்டுவிட்டனர். எனவே, மலைமீது ஏறிப்போகிறவர்களுக்கு உண்டாகும் ஒருவித மயக்கம், மூச்சுத் திணறுதல் இவையாவும் போதுமான பிராணவாயு இராமையினாலேயே ஏற்படுகிறதென கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனை ஒரு அறைக்குள்விட்டு காற்று புகவொட்டாமல் அறையை மூடிவிடுவோமாகில் பிராணவாயுவின் குறைவால்மயக்கம், மூச்சுத்திணறுதல் முதலியனஉண்டாகுமென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இதனை ஆராய்ச்சி செய்ய முற்பட்ட டாக்டர்கள், ஆராய்ந்து பார்த்து அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஆகாயத்திலுள்ள பிராணவாயு குறைந்துவிடுமாகில், அதில் சம்மந்தப்பட்ட மனுஷியனுக்கு நாது படபடவென்று துடிக்கும்; முகம் நீலவர்ணமாக மாறும்; மூச்சு தடமாடும். ஒக்காளம், வாந்தி முதலியன ஏற்படும். அதனால் உஷ்ணகிரகமும் ஏறி நோயாளிகளைத்து அவனுக்கு ஜன்னிகண்டு, கடைசியில் அவன் பிரஞ்ஞையற்றுப் போகும் படிநேரிடும். அதுபொழுது அம்மனிதனுடைய இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்ப்போமாகில், பிராணவாயு இருக்கவேண்டிய அளவுக்கு மிகவும் கம்மியாக யிருப்பதுடன் அவனுடைய நுரையீரல்மட்டுமல்ல, தேகத்திலுள்ள தசை நரம்புயாவும் பிராணவாயுவின் குறைவினால் அவஸ்த்தைப்பட்டுக்கொண்டிருக்கும். ஆகவே, ஜீவிபகாரியாதிகள் நடைபெறுவதற்கு பிராணவாயு இன்றியமையாச் சாதனமாய்த் திகழ்கின்றது.

சென்ற மகாயுத்தத்தில், பிராணவாயு காற்றின் ஓர் முக்கியபாகமென்றும், அதுவே ஜீவிப்புக்கு தக்கமருந்தென்றும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே டாக்டர்களாகிய ஹால்டேன், பெல்ட்ஜர் ஆகியோர் பிராவாணயுவை மருந்தாக உபயோகிக்கலாமென்று தீர்மானஞ் செய்திருப்பதால், டாக்டர் ஹால்டேன் மகாயுத்தத்தில் அதனை உபயோகித்து அநேக உயிர்களைக் காப்பாற்றினர்; முகத்திற்கு மூடி ஒன்றை கண்டுபிடித்து, அதை யீரல்களில் நீர் தங்கியிருக்கும் கேஸுகளிலும் விஷப்பட்ட ஆவிகளால் வருந்தும் கேஸுகளிலும் பிரயோகப்படுத்தி அந்தக் கேஸுகளைச் சொஸ்தப்படுத்தி யிருக்கிறார். டாக்டர் மெல்ட்ஜர் என்பவர், நியூமோனியா என்னும் கபவாத ஜுரத்தினால் வருந்திய நோயாளிகளுக்கு பிராணவாயு சிகிச்சை செய்தார். பின்னர் காலஞ் செல்லச்செல்ல பிராணவாயுவினால் சிகிச்சை செய்யும் முறை ஸ்திரப்பட்டுப்போயிற்று. வேறு எவ்வித மருந்தும் பிரயோசனப்படாமல், நோயாளி கைவிடப்படுங்காலை பிராணவாயு உபயோகப்படுத்தப்பட்டு தக்க பிரயோசனமளிக்கின்றது. அதிலும் முக்கியமாய் கபவாத ஜுரத்திலும் இருதய சம்பந்தமான வியாதியிலும் தக்க பிரயோசனமளிக்கின்றது.

பிராணவாயுவும், கபவாதஜுரமும்

டாக்டர் பெல்ட்ஜரும் இதரர்களும் கபவாத ஜுரத்துக்கு சிகிச்சை செய்ய ஆரம்பத்தில் முகமூடியை உபயோகித்து வந்தனர். அதில் பிராணவாயு அதிகமாய் விரயப்படுவதாகத் தெரிய வரவே, அதைவிட சிரேஷ்டமான முறையைக் கண்டுபிடிக்க வேண்டிய ஆவசிய மேற்பட்டு, முகமூடியைவிட ஒருகூடாரமிருந்தால் சவுகரியமாயிருக்குமெனத் தோன்றியதால், முதன்முதல் டாக்டர் வியூனர்டுஷில் என்பவர் ரப்பரால் ஒரு கூடாரம் தயார் செய்து, நோயாளி படுக்கையிலிருக்கும்போது அவன் மேலே மூடும்படி செய்தார். இது நேர்த்தியாக யிராதபோதிலும் முகமூடியைவிட சிலாக்கியமானதெனக் கருதப்பட்டது. இதற்குச் சிறிது காலத்திற்குப் பின் டாக்டர் ராத் என்பவர் தலைக்குமட்டும் ஒரு கூடாரம் தயாரித்து ஹில் செய்தது போல் தளர்த்தியாக யில்லாமல் கெட்டியாக யிருக்கும்படி அமைத்தார்.

க்டைசியாக, டாக்டர் பாரக் என்பவர் ஒரு படுக்கை கூடாரம் கண்டுபிடித்திருக்கிறார். அதில் காற்றை உலர்த்தி பனிக்கட்டியின் மேல் செல்லவிட்டு பின்னர் குளிரச் செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு சதுரமான மூடி'பாயும், நோயாளியின் தலையையும் மார்பையும் மூடிக்கொண்டிருக்கக் கூடியதுமாயிருக்கிறது. அதற்கு முன்னால் இரண்டு துவாரங்களும் உச்சியில் ஒரு துவாரமுமிருக்கின்றது. இவர் பிராணவாயுவின் குணங்களைக் கண்டுபிடிக்க அதிக சிரத்தை எடுத்து, கபவாத ஜுரத்தைத் தடுப்பதற்கு அது தக்கதோர் ஔஷதமென்று கண்டுபிடித்திருப்பதன்பயனாக, அந்த கூடாரத்தின் உதவியால் 300-க்கு அதிகமான கபவாத ஜுரக் கேஸுகளுக்குச் சிகிச்சை செய்தார். அதனைப் பின்பற்றி இதர டாக்டர்களும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தார்கள். இந்தப் பிராணவாயு சிசிச்சையில் டாக்டர் பாரக் சில அற்புதமான விஷயங்களைக் கண்டுபிடிக்க முயற் சித்து தம்மிடமுள்ள கபவாத ஜுர கேஸுகளில் 8 கேஸுகளை அநேக நாட்கள் வரையிலும் திறக்காமல் பிராணவாயு கூடாரத்திலேயே வைத்திருந்தார். பிறகு அந்த கூடாரத்தை எடுத்துவிடவே, பயங்கரமான குறிகள் சில காணப்பட்டன உடனே, அதைத் திரும்பவும் போட வேண்டியதாயிற்று. நீடித்த கபவாத ஜுரத்தால் வருந்திகொண்டிருந்த மற்றொருவரை இரண்டு மாதகாலம்வரை இந்த கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்தது. பலமுறை அந்த கூடாரம் அப்புறப்படுத்தப்படுந்தோறெல்லாம், பயங்கரகுறிகள் காணப்பட்டு உடனே அவைகள் திரும்பவும் வைக்கப்பட்டிருக்கிறது. பிறகு அவனுடைய நுரையீரல்கள் சரிப்பட்டவுடன் கூடாரத்தை எடுத்துப் பார்த்ததில் யாதொரு கெட்ட குறிகளும் காணப்படவில்லை.

சில சமயங்களில் கபவாதஜுரம் மும்மரமாய் அடிக்கும்போது நோயாளியின் நுரையீரல்கள் இரண்டும் அதிகமாய்ப்பழுதுபட்டுப் போகின்றன. எனவே, அவை மிருதுவாயும் இலேசாயுமிருப்பதைவிட்டு, கெட்டியாயும் கனத்தும்போகின்றன. இந்த சிகிச்சை கண்டுபிடிப்பதற்குமுன், இந்த வியாதியால் அநேகர் மாண்டு போய்க்கொண்டிருந்தனர். டாக்டர் பாரக் தமது பிராணவாயு கூடாரத்தால் இந்தப் பிரச்சினையை தீர்த்துவைக்க ஆரம்பித்தார். அவர் இந்நோய் கண்டோரை வெகுநாட்கள் வரை பிராணவாயு நிரம்பிய கூடாரத்தில் வைத்து, சில சமயங்களில் ஒருவருடம் வரையிலும் அப்படியே இருக்கும்படிசெய்து விடுவார். இம்மாதிரி அநேகர் அவரிடம் சிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

பிராணவாயுவும், இருதய வியாதியும்

ஹிருதயவியாதி, பிராணவாயுவின் சிகிச்சையால் குணப்படுகிறதென டாக்டர்கள் பெட்டார்டு லெம்பிரி இவர்கள் கண்டுபிடித்தனர். ஹிருதயம் கெட்டுப்போன அநேக கேஸுகளுக்கு தினம் 2-4 மணிநேரம் சுத்தமான பிராணவாயுவை சுவாசிக்கும்படி செய்ததில் தக்க குணம் ஏற்பட்டதென்று கண்டுபிடித்திருக்கின்றனர். இதற்குச் சிறிதுகாலத்திற்கெல்லாம் டாக்டர் பேகரிடம் ஒரு நோயாளி வந்தார். அவருக்கு ஹிருதயக்கோளாறு ஏற்பட்டு ஹிருதயத்துடிப்பு மிகவும் குறைந்துபோய், அதனால் பிராணாதாரமான உறுப்புக்களுக்கெல்லாம் இரத்தம் கம்மிப்பட்டு அடிக்கடி நோயாளி களைத்து விழுந்து விடுவது வழக்கம். அவனுக்கு யாதொரு மருந்தும் பிரயோசனப்படாதுபோகவே, கடைசியாக டாக்டர் பேகர், பிராணவாயுவை முகரும்படி செய்தார். உடனே ஆச்சரியமான பலன் ஏற்பட்டு, அந்த வியாதி அடியோடே ஒழிந்துபோயிற்று; ஹிருதய துடிப்பு சாதாரண நிலைமைக்கு வந்து வலுவடைந்து போய் முன்போல் களைப்பு ஏற்

படாதுபோயிற்று. ஆகவே ஹிருதய வியாதியில் உயிரைக் காப்பாற்றக் கூடியது பிராண வாயுவேயாகும்.

அனேக காரணங்களால் ஹிருதயநோய் (மார்நோய்) காணும்போது, பிராணவாயுவை உபயோகப்படுத்தியதால் நோய் மட்டுப்பட்டுப்போனதாக டாக்டர் பாரக் கண்டுபிடித்திருக்கிறர். 50 வயதிற்கு மேற்பட்ட 3 நபர்களுக்கு அவர்களின் ஹிருதயநாடிக்குழாய்கள் தடித்துப்போயிருந்ததால், அவர்களுக்கு எப்போதும் மார்நோய் இருந்துகொண்டே இருந்தது. அதனல் சிலசமயங்களில் துடித்துக்கொண்டு மிருப்பார்கள். எவ்வளவோ மருந்துகளைக் கொடுத்துப் பார்த்தும் பிரயோசனப்படாது, கடைசியாக ஹிருதயத்துக்குப் போதுமான இரத்தமில்லாக் குறையினுல்தான் இந்தநோய் உண்டாயிற்றென்றும், அதனுல் பிராணவாயு குறைவுபட்டிருக்கிற தென்றும் வாதிக்க முற்பட்டு, இதற்கு இந்த சிகிச்சையே செய்ய வேண்டு மென்னும் தீர்மானத்துக்கு வந்தார். உடனே அம்மூன்று நபர்களேயும் பிராண வாயு கூடாரங்களுக்குள் விட்டு இரண்டு வாரங்கள்வரை அங்கேயே அவர்களே வசித்திருக்கச் செய்தார். இந்த கூடாரங்களில் வசிக்கும் வரை, நோய்வரவர மட்டுப் பட்டுவந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் ஒழிந்தே போயிற்று. ஆனல் நாடிக்குழாய்கள் மட்டும் தடிப்பாகவே இருந்தபடியால், நோய் அடிக்கடி மறுபடியும் வந்து கொண்டேயிருந்தது. பிறகு இந்த வியாதி ஏற்படுந்தோரெல்லாம், இந்த சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று. முடிவாக அவ்வியாதி தீராமற்போன போதிலும் நோய் மட்டுப்பட்டு அவர்கள் உயிர் வாழ்ந்து வந்தனர்.

இப்போது மற்றெரு கொடிய ஹிருதய வியாதி ஏற்பட்டிருக்கின்றது. இது 50 வயதிற்கு மேற்பட்ட ஸ்திரீ புருஷர்களைப் பீடிக்கும். இது திடீரென்று உண்டாகி தக்ஷணமே ஆளைக் கொன்று விடுகிறது. இந்த வியாதி கண்ட நபருக்கு அவனது இருதயமானது ஒரு கொரடாவினல் கெட்டியாய் அமுக்கிப் பிடிப்பதுபோலிருந்து ஹிருதயத்துனுள்ளே ஏதோ கணகணவென்று எரிந்து கொண்டிருப்பதுபோல் உணர்ச்சி தோன்றும். இது அடிக்கடி மார்பெலும்பு மேல் ஆரம்பித்து அங்கேயேயிருக்கும். அல்லது இடது புஜம் தோள் முதலிய வற்றிற்கும் பரவும். சில கால் நோய் பொறுக்க முடியாமலிருந்து பிரஞ்ஞை தப்பிப் போகும்படியும் நேரிடும். அதுகாலே தேகம் வெளுத்துப்போய் வியர்வை அதிகமாய்க் கொட்டிக் களைத்துப்போய் வரவர முகம் நீல நிறமாக மாறும். நோய் பொறுக்கமுடியாமல் நோயாளி வாந்தி எடுப்பார். அதுபொழுது தாது ஒடுங்கிப்போய் மரணகாலம் சமீபித்து விட்டதென்றே எண்ணவேண்டும்.

பிராணவாயுவைக் கண்டுபிடித்து 200 வருஷங்களாகின்றன. இதனுல் எவ்வளவோ பிரயோசனங்கள் ஏற்பட்டபோதிலும் இதன் மருந்து குணம்தான் பிரதானமாகும். இதன் உபயோகங்கள் முழுதும் இன்னும் கண்டுபிடிக்கப் படாமல் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. சமீபத்தில் பிராண வாயுவை இன்ஜெக்ஷன் மூலம் நுரையீரல்களுக்குள் செலுத்தி, அதனுல் கபவாத ஜுரத்தினுல் வருந்துவோரை சொஸ்தப்படுத்தியிருக்கின்றர்கள். ஆகவே நுரையீரல்கள், இருதயம் இந்த உறுப்புகள் சம்மந்தமான வியாதிகளில் தான் பிராணவாயு அதிகப் பிரயோசனமளித்திருக்கிறது. இருதயமும் நுரையீரல்களுமே பிராணவாயுவுடன் நேராக சம்மந்தம் வைத்திருப்பதால், இவ்விரண்டும் தேகத்துக்கு பிராணவாயுவைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. நுரையீரல்களுக்கும், இருதயத்துக்கும் மட்டுந்தான் பிராணவாயு வேண்டுமென்பதில்லை. தேகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவுக்கும் தேவை. இந்தப்பிராணவாயு இராவிடில் ஒரு வஸ்துவும் பிழைத்திராது. ஆனதுபற்றியே, இருதயமும் நுரையீரல்களும் தம்தம் தொழில்களைச் சரிவர செய்யாமற்போகும் பக்ஷத்தில் ஆபத்து உண்டாய் விடுகிறது. இந்த பிராணவாயு பிராணுதாரமான தொழில்களை எவ்வாறு நடப்பிக்கிறது என்பது மட்டுமல்ல, தேகத்திற்குப் பிராண வாயுவைக் கொடுக்கும்படியான உறுப்புக்கள் பழுதாய்ப் போனல் எவ்வாறு அந்த பிராண வாயுவை அதற்குக் கொடுக்கிறது என்பதைப் பற்றியும் நவீனவைத்திய சாஸ்திரம் ஆராய்ச்சி செய்து வருகிறது.

புதிய சீர்திருத்த உணர்ச்சி

அல்லாஹ் இல்லை என்று கூறிக்கொண்டிருக்கும் நாஸ்தீகரான பர்னட்ஷா என்பார் எதுபொழுது, உலகின் எதிர்கால மதம் இஸ்லாமாக இருக்கும் என்று அறிவித்தாரோ அதுமுதல், ஐரோப்பா முழுதிலும் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதனால் மேனாட்டிலுள்ளோரில், அபரிமிதமான சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருப்போர் கோபம் நிறைந்த கண்களைக்கொண்டு பர்னட்ஷாவை நோக்கி, நீர் இதுபொழுது ஒரு முறை உலகத்தை இரத்த சமுத்திரத்தில் மூழ்கடிக்கக் கருதியிருக்கின்றீர் போலும்; ரிஸர்டு, ஸலாஹுத்தீன் இவர்கள் காலத்தில் லக்ஷக்கணக்கான மானிடர்களின் ஆத்மாக்கள் மதத்தின் பெயரால் பலியிடப்பட்டது உமது கவனத்துக்கு வரவில்லையோ? ஆகவே மதம் என்னும் பெயரை நாவால்கூட உச்சரிக்கலாகாது; அது இரத்தம் ஓட்டுவதையே கற்பிக்கின்றது; மானிடர்களுக்கிடையே ஒருவித வெறுப்பை அதிகப்படுத்திக் கொண்டே போகிறது. சுருங்கக்கூறின், மதமென்பது சுயேச்சையுடைய ஒரு மனிதனை, அவன் மார்க்க அடிமையாய் விடுவதற்குக் கற்பித்துக் கொடுக்கிறதென்று அடிக்கடி கூறிக்கொண்டிருக்கின்றனர்.

நம்இந்தியாவின்கண் வதிபவர்களில், நவீனக் கொள்கை ததும்பும் இள வாலிபர்களிற் சிலர், மேனாட்டாரின் இக்கூற்றைச் செவியுற்ற மாத்திரத்திலேயே, மேனாடு மதமென்பதையே இல்லாது துலைப்பதற்கு முற்படாவிடினும் யாங்கள் அதனை இந்தியாவென்ன? உலகமடங்கலை விட்டு அகற்றிவிட முயற்சிப்போமென்றும், மதமென்மது வீணான ஒரு மூடக்கொள்கை என்றும், அது தேவையற்றதென்றும், மதத்தை விட்டு விடுதலை பெறாதவரை முன்னேற்றமடையமுடியாதென்றும், மதமில்லாது போனால், உலகமுழுதும் விடுதலைபெற்று ஒற்றுமையின் கயிற்றில் கோர்க்கப்பட்டுப்போமென்று சுயேச்சை எழுச்சியானது தங்களுக்கறிவிப்பதாகவும் கூறுகின்றனர். மேலும் இவ்வெழுச்சி மெள்ளமெள்ள மானிடர்களின் ஹிருதயத்தைப் பற்றிக்கொண்டு வருவதன் பயனாக, பாதிரிகள் தங்கள் மார்க்கத்தை விட்டுவிட்டார்களென்றும், முல்லாக்கள் அதைவிட்டு விரண்டோடுகிறார்களென்றும், பண்டிதர்கள் அதனை வெறுத்துவிட்டார்களென்றும் கூறுகிறார்கின்றனர். ஆனால் அதி சமீபகாலமாய் மேனாட்டாரிடையே தோன்றிவரும் புதியசீர்திருத்த உணர்ச்சியானது, திறை மறைவில் ஓர்மார்க்கத்தைப் பிரசாரஞ் செய்வதில் ஈடுபட்டிருப்பதாகத்தெரிகிறது. எனவே அந்த உணர்ச்சியானது மேனாட்டாரை நோக்கி, யான் மார்க்கத்தை அலக்ஷியஞ் செய்யும் ஒரு மாதின் கோலத்தில் வெளியான போதிலும், வாஸ்தவத்தில் என்மனம் ஒரு சன்மார்க்க வழிகாட்டியைப் பின்பற்றி நடக்க விருப்பங்கொள்வதால், மேனாட்டாரால் இயற்றப்பெற்ற புத்தகங்களை ஆராய்ச்சி செய்ய விருப்பங்கொள்ளாது, கீழ்நாட்டின் மார்க்கத் தலைவர்களால் இயற்றப்பெற்றிருக்கும் பழைய கிரந்தங்களை ஆராய்ச்சிசெய்வதி லீடுபட்டிருக்கிறது என்றுகூறுகின்றது. இதனால் மேனாட்டிலுள்ள சில பத்திரிகைகள், அரபதேசத்திலுள்ள ஏதோ ஆத்ம சக்தியானது எனக்கு இவ்வாறான போதனைசெய்திருக்கக் கூடுமென்று பறைசாற்ற முற்பட்டிருக்கின்றன. சிலரோவெனில், இப்புதிய உணர்ச்சியானது அந்தரங்கத்தில் இஸ்லாத்தின்மீது பற்றுக்கொண்டு இவ்வாறானதோற்றத்தில் வெளியாய்க்கொண்டிருக்கிறதென்று கூறுகின்றனர்.

இச்சீர்திருத்த உணர்ச்சிக்கு இதுகாலை உலக முழுதிலும் ஓர்வித செல்வாக்கு ஏற்பட்டு, மேனாடு கீழ்நாடுகளில், கோடிக்கணக்கானவர்கள் இதற்கு வழிப்பட்டு, உலகின் நானாபாகங்களிலும் வசித்துவருகின்றார்கள். எனவே, அது தினேதினே முன்னேற்றமடைந்து செல்வதைக் காணும் அநேகர், ஒருக்கால் ஐரோப்பிய அதிகார சிம்மாஸனத்தைகூட கவிழ்த்துவிடுமோ வென்று அஞ்சுகின்றனர்.

சிலகாலத்துக்குமுன் இச்சீர்திருத்த உணர்ச்சியின் பிரதான ஓர் அறிக்கை, உலக முழுதிலுமுள்ள வர்த்தமானப் பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யப்பட்டிருந்தது. அதாவது, குறிப்பிட்ட நபர்கள் பரம்பரைபாத்தியமாய் அதிகாரஞ்செய்து வருவதை அறவே ஒழித்துவிடவேண்டும் எனவே தகப்பனுக்

குப் பிறகு மகனும், அதற்குப்பின் பேரனும் இவ்வாறே துயர்படியாய் அதிகாரப்பதவி வகிப் பதற்கு எவருக்கும் பாத்தியதை கிடையாது. அதற்குப் பகரமாய், தேசத்தில் பல வகையி லும் சிறந்து விளங்கும் ஒரு மனிதனைத் தேர்ந்தெடுத்துச் சிம்மாஸனத்தில் அமர்த்த வேண்டுமென்று அறிவித்தது. புதிய உணர்ச்சி இவ்வாறு அறிக்கையிட்டதைக் கண்ட நாஸ்தீ கக் கொள்கையுடையோர், இது இஸ்லாம் கற் பித்திருக்கும் ஓர் வழியாகும்; இதுகாலை ஐரோப்பாவும், இஸ்லாமியகலீபாக்களைப்போல் தங்கள் அரசரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமா? இது இஸ்லாத்தைப் பின்பற்றும் செயலாக யிருப்பதால், ஒருக்காலும் இதனை ஏற்றுக்கொ ள்ள முடியாதெனக் கூக்குரலிட்டனர். ஆனால் நாஸ்தீகர்களின் இக்கூக்குரலுக்கு எவரும் செவி மடுக்கவேயில்லை. ஆகவே இப்புதிய உணர்ச்சி யின் இவ்வறிக்கையால், ஐரோப்பாவில் ஓர் உணர்ச்சி தோன்றி அநேக அரசர்கள் சிம்மா ஸனத்திலிருந்து இறக்கப்பட்டு, இஸ்லாமிய ஆசாரப்படியே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் கள். புதிய உணர்ச்சியின் இவ்வெற்றியை நாஸ் தீகக் கொள்கையுடையவர்கள் கண்டு, இவ் வுணர்ச்சியானது இஸ்லாத்தின் பக்கல்கொண்டு சேர்க்கிறதாயிருக்கிறதென்று கருதுகின்றனர்.

இப்புதிய உணர்ச்சியானது, ஐரோப்பிய வல்லரசுகளுக்கு ஓர் அறிக்கை வெளியிட்டு அதில், ஜினிவாவில் அகில உலக ஐக்கியசங்க மொன்றை ஏற்படுத்தி, அதில் உலகிலுள்ள சகல அரசர்களுடைய பிரதிநிதிகளும் ஒரே நேரத்தில் ஒன்றுசேர்ந்து, தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடவேண்டுமென்று கோரியிருந்தது. ஆனால் மேனாட்டிலுள்ள நாஸ்தீகர்கள் புதிய உணர்ச்சியின் இவ்வா லோசனையைத் தெரிந்துகொண்டவுடனே, இது இஸ்லாம்மார்க்கம் கற்பித்திருக்கும் வழியாகும். ஆனால் முஸ்லிம்கள் மக்கா வில் கூடுகின்றார்கள்; புதிய உணர்ச்சியானது ஜினிவாவில் கூடும்படி கோருகிறது. ஆக வே இதில் இஸ்லாம் மதத்தைப் பின்பற்று வது காணப்படுவதால் இஃது ஒருக்காலும் முடியாதெனத் தெவிரித்தார்கள். ஆனால் ஐரோப்பாவானது, நாஸ்தீகர்களின் குறுகிய மனப்பான்மையை ஏற்றுக்கொள்ளாது, ஜினிவா வில் கூட்டத்தை ஏற்படுத்தும் ஆலோசனையை அங்கீகரித்துக்கொண்டது. எனவே முஸ்லிம் கள் வருடத்திற்கொருமுறை மக்கமாநகரில் ஒன்றுசேருவதுபோல், இதுகாலை உலகிலுள்ள மானிடர்கள், ஒவ்வொரு வருடமும் ஜினிவாவில் ஒன்றுகூடுகின்றார்கள். இதனைக்கண்ட நாஸ்தீ கர்கள் வெறுப்புற்றவர்களாய், இந்தயோசனை, அந்தரங்கத்தில் முஸ்லிம்களைப் பின்பற்றி நடப்பதாக இருக்கிறதென்று கூறுகின்றனர்.

புதிய உணர்ச்சியானது ஒரு சமயத்தில் தன் மன உணர்ச்சியை வெளியிட்டு, மானிடர்கள் முன்னேற்றமடைவதற்காகவும், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பாகுபாட்டை நீக்கு வதற்காகவும் ஒரு சபை ஏற்படுத்தவேண்டு மென்றும், அதில் ஏழை பணக்காரன் என்னும் வியாசம் பாராட்டாது யாவரும் ஒன்றுகூடி தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட வும் தங்களுக்கிடையே பிரீதியை அதிகரிக்கச் செய்யவும் முயற்சிக்க வேண்டுமென்றும், இவ் வாறான கூட்டம் ஒவ்வொரு தெருவிலும், பிறகு தெருக்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒவ்வொரு ஊரிலும், பிறகு பட்டணவாசிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து ஜில்லாவிலும் கூட்டம் நடை பெறும்படி செய்யவேண்டுமென்றும், பின்னர் வருஷத்துக்கு ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ பற்பல ஜில்லாவாசிகளும் ஒன்றுசேர்ந்து, தங்கள் ஜில்லாக்களிலுள்ள சபைகள் செய்துள்ள தொண்டையும் வேலைத் திட்டத்தையும் சபைமுன்வைத்து ஆலோசனை புரியவேண்டுமென்றும் தெரிவித்திருந்தது. நாஸ் தீகர்கள் இவ்வாலோசனையைக் கேட்டமாத்தி ரத்திலே கோபாவேசத்துடன் எழுந்து, புதிய சீர்திருந்த உணர்ச்சியானது, இஸ்லாத்தின் கோலத்தில் எங்களுக்கு தொழும் விதத்தைக் கற்பித்துக் கொடுக்க முன்படுகிறது போலும்; இதுமுழுதும் முஸ்லிம்களின் வழக்கமாயிருக்கி றது; முஸ்லிம்கள் நாளொன்றுக்கு ஐந்து முறை தெருப்பள்ளியில் சேகரமாகின்றார்கள்; பின்னர் ஊர்வாசிகள் யாவரும் வெள்ளிக் கிழமையன்று ஓர்பெரிய பள்ளியில் சேகர மாகின்றார்கள்; இதற்குப் பின்னர் வருடத்தில் இரண்டுமுறை பெருநாள் சமயத்தில் பலஊர் வாசிகளும் ஒன்றுசேர்கின்றார்கள். ஆதலின் இதனை யாங்கள் ஒருக்காலும் ஏற்று நடக்கத் தயாராகயில்லை என்று கூறிவிட்டனர். ஆனால் இவ்வாலோசனை விஷயமாய் ஆங்காங்கு கவ னிக்கப்பட்டு, ஒருவாறு வெற்றி தோன்றி பற் பல சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டுவருகிறது. நாஸ்தீகர்களோ வெனில், இதைக்கண்டு கூக் குரலிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்புதிய உணர்ச்சியுடைய டாக்டர் ஒருவர், சென்ற ஆண்டில் பிரான்ஸில், மருத்துவ மகாநாடொன்றைக் கூட்டினார். அதில் வயதிலும் அழகிலும் அதிகப்படுவதற்குள்ள ஓர் வழியையும், மானிடர் சுகஜீவியாக வாழ்வதற்குள்ள மார்க்கத்தையும் கண்டுபிடிக்கவேண்டுமென்னும் ஆலோசனை சபைமுன்கொண்டுவரப்பட்டு, ஆழ்ந்த ஆலோசனைக்குப்பின், பிரான்ஸ் தேசடாக்டர்களில் கியாதி வாய்ந்தோர் அதன் இரகசியத்தைத் தெரிந்து கொண்டு, அன்னோர் ஓர் அறிக்கை வெளியிட்டி டிருந்தனர். அதில், வயது அழகு முதலியவைகள் அபிவிருத்தியடைவதற்கும், சுகவாழ்வைக் கைகொள்வதற்கும் மானிடன் வாரத்துக்கொருமுறை பகலில் யாதொன்றையும் புசியாதிருப்பது தக்க சாதனமாகுமெனத் தெரிவித்தார்கள். இதனைச் செவியுற்ற நாஸ்தீகர்கள், பிரான்சு டாக்டர்கள், முஸ்லிம்களைப் போன்று தங்களையும் நோன்பு நோற்கும்படி கூறுகின்றார்கள்; இஃது முஸ்லிம்கள் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதைப் பின்பற்றுவதாகயிருப்பதால் ஒருக்காலும் அதனை யாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்; இதுவெல்லாம், புதிய சீர்திருத்த உணர்ச்சியானது திரைமறைவிலிருந்துகொண்டு வேலைசெய்வதன் பலனாகுமென்று கூறினர்.

புதிய உணர்ச்சியின் கீழ்காணும் ஆலோசனை தேசத்தின் நானாபாகங்களிலும் ஏற்று நடப்பதற்கு தக்கதெனக் கருதப்பட்டுவருகிறது. அதாவது, தேசத்தின் பற்பல விடங்களிலும் பற்பல சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அதன்மூலம் ஏழைகளுக்கு உதவிபுரியவேண்டுமென்பதேயாகும். இவ்வாலோசனைக்கேற்ப தேசாதிபதிகளின் பேருதவியால் லக்ஷக்கணக்கான கலாசாலைகளும் மருத்துவ நிலயங்களும் பற்பல சங்கங்களின் ஆதரணையின்கீழ் திறக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நாஸ்தீகவாதிகள், பஹிரங்க பிரயோசனமுடைய இவ்வாலோசனைக்கும் எதிரிடையாகயிருந்துகொண்டு, இஸ்லாமிய போதனையிலிருந்து எடுக்கப்பட்ட இவ்விஷயத்தை அனுஷ்டிக்க தாங்கள் ஒருக்காலும் தயாராகயில்லையென்று கூறினர். ஆனால் குறுகிய சிந்தனையுள்ள இவ்வாலோசனையை யாரும் ஏற்றுக்கொள்ளாது, தேசத்தின் பற்பல பாகங்களிலும் பற்பலவாறான சபைகளை ஏற்பாடுசெய்து, அதன்மூலம் மானிடர்களுக்கு உதவிசெய்து வருகின்றார்கள். இதனைக்கண்ணுற்ற அன்னோர், புதிய உணர்ச்சியானது உலகம் முழுதையும் இஸ்லாத்தின் பக்கல் கொண்டு செல்லுகிறதென்றும், இஸ்லாத்தின் அனுஷ்டானத்தைப் பின்பற்றியொழுகுமாறு வற்புறுத்தி வருகிறதென்றும் பறை சாற்றமுற்பட்டிருக்கின்றனர்.

மாதர்கள் நிர்வாண கோணத்தில் முன்னேற்றமடைந்து வருவதைக்கண்ட புதிய சீர்திருத்த உணர்ச்சியானது, இக்கோலம் மாதர்களை நாசத்தின்பக்கல் கொண்டுசெல்வதாக இருப்பதை நன்கு தெரிந்துகொண்டு, கி. பி. கோ. 1929-ம் ஆண்டில் ஐரோப்பாவின் பெரிய பாதிரியாகிய போபிடம் சென்று இவ்வியாதியினின்று மாதர்களைக் காப்பாற்றி வைப்பதற்குள்ள மார்க்கத்தை தேடவேண்டுமென கேட்டுக்கொள்ளவே, போப் பாதிரியார் பெண்களது முகம் இருகை இவைகளைத்தவிர வேறு உறுப்புகள் திறந்திருக்குமாகில், கடிஸான தண்டனை கொடுக்கப்படுமென்று இடேலியில் அறிவித்தார். அப்புதிய சீர்திருத்த உணர்ச்சியானது இடேலி மாதுக்களை ஒழுங்குபடுத்திய பின், ஐரோப்பாவின் இதர பாகங்களை நோக்கிய காலை, ஐரோப்பாவின் உயர் குடும்பத்தில் ஜனித்த மாதர்களெல்லாம் வெட்கங்கெட்ட சுபேக்ஷை என்னும் வியாதியில் அகப்பட்டு விழிக்கும் நிலைமையில், அவர்களின் புருடர்கள் அம்மாதுகளை வீட்டிற்கு எஜமாத்திகளாகச் செய்துவிட வேண்டுமென்று முயற்சித்து வந்ததால், இதனை அன்போடு ஆதரிக்க முற்பட்டனர். ஆனால் நாஸ்தீகக் கொள்கையுடைய மாதர்களோ, இவையெல்லாம் புதிய சீர்திருத்த உணர்ச்சியின் பலாபலன்களாகும்; இவ்வுணர்ச்சி நம் மாதர்களுக்கு இஸ்லாம் மதம் அளித்திருக்கும் சுதந்திரத்தை மட்டும் அளிக்கப்பார்க்கிறது; முஸ்லிம்கள், மாதர்களுக்கு அளித்திருக்கும் சுதந்திரம் தான் பெண்களுக்கு அளிக்கக் கூடியதாகும் என்று கூறுவதால், அந்தப் புதிய சீர்திருத்த உணர்ச்சியை குழிதோன்றி புதைக்க வேண்டியதாகயிருக்கிறது என்று கூக்குரலிடுகின்றனர்.

இப் புதிய சீர்திருத்த உணர்ச்சியுடைய வைத்திய நிபுணர்கள், மானிடர் ஆரோக்கிய வாழ்க்கை நடத்த வேண்டுமென்னும் விஷயமாய் சமீபத்தில் பற்பல பாகங்களிலும் சொற்பெருக்காற்றிய காலை, தாடியைச் சிரைப்பதுகொண்டு கண்பார்வையில் குறைவு ஏற்படுவதால், அதைச்

சிறைக்கலாகாதென்றும், பூமியில் ஊர்ந்து திரியும் பூச்சிகள், இடுப்பில் கட்டிக்கொள்ளும் துணி மூலம், உடம்பில் ஏறிவிடுவதால், கிரண்டைக் காலுக்கு மேல் அந்த துணியிருக்கும்படி செய்து கொள்ளவேண்டுமென்றும், பிரடியில் புழுபூச்சி ஏறித்தொந்திரை செய்வதால்,நாளொன்றுக்கு மூன்று நான்கு முறை தண்ணீரால் பிடரியைத்துடைக்க வேண்டுமென்றும், மூக்கு துவாரத்தின் வழியாக புழு பூச்சிகள் உள்ளால் சென்று மூளையைத் தாக்குவதால், அப் பூச்சி உள்ளால் செல்லாது நாளொன்றுக்கு 2, 3 முறை நாசிக்குள்ளால் தண்ணீர் கொண்டு கழுவவேண்டுமென்றும் கூறினர். வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை நாஸ்தீக வாதிகள் எதிர்த்து, இச் செய்கைகளெல்லாம் இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றி யொழுகுவதாகயிருக்கிறதென்றும், இஸ்லாம் மார்க்கத்தில் தாடியைச் சிறைத்துக் கொள்ளுதல் ஆகாக் கருமமாயிருப்பதால், இது காலை டாக்டர்களும் தாடி சிறைத்துக் கொள்ளுவது கூடாதென்று கூறுகின்றார்களென்றும், இஸ்லாம் மார்க்கத்தில் கிரண்டை முளிக்குக் கீழால் துணி அணிந்து கொள்வது விடலக்கப்பட்டிருப்பதால், இது காலை டாக்டர்களும் அவ்வாறு கூறுகின்றார்களென்றும், இஸ்லாம் மார்க்கத்தில் ஒளுச் செய்வதன்மூலம் பிடரிதண்ணீரால்துடைக்கப் பட்டும், நாசிக்குள்ளால் தண்ணீர்கொண்டு கழுவப்பட்டும் வருவதால் இது காலை டாக்டர்களும் அதனைப் பின் பற்றுகின்றார்களென்றும், இவ்வாலோசனைகளை தாங்கள் ஒருபோதும் அங்கிகரிக்க முடியாதென்றும், புதிய இவ்வுணர்ச்சியானது, சீர்திருத்தம் வைத்திய முறை முதலிய கோலத்தில் தங்களுக்கு இஸ்லாத்தின் போதனையை கற்பித்துக் கொடுக்க முற்படுகிறதென்றும், அதனை அங்கீகரிக்க முடியாதென்றும் தெரிவித்து விட்டார்கள்.

புதிய சீர்திருத்த உணர்ச்சியின் தத்துவார்த்தங்களை யெல்லாம் பத்திரிகை மூலம் நாம் தெரிந்துகொண்டபின், நம் முஸ்லிம்கள் மேனுட்டாரின் நடைஒழுக்கம் முதலியவற்றைப் பின்பற்ற எவ்வாறு நம்மவரின் மனம் துணிபுகொள்கிறதோ யாம் அறிகிலேம். அவ்வாறு நாம் பின்பற்ற முயற்சிப்போமாகில், பெயரளவில் மட்டும் நம்மை முஸ்லிம்களென்று அழைத்துக் கொள்ள முயற்சிக்கிறேமென்பது நன்கு புலனுகின்றது. நாம் பெயரளவில் மட்டில் முஸ்லிமாக இல்லாது, உண்மையிலேயே முஸ்லிமாக இருப்போமாகில், இது காலை உலகிலுள்ள சகல வகுப்பினரும் நம்முன் அடிபணிந்து நிற்பரென்பது திண்ணம்.

நாஸ்தீக வாதிகளோ, உலகம் இஸ்லாத்தின் வழியை தெரிந்துகொண்டிருக்கிறதென்று கூக்குரலிடுகின்றனர். ஆனல் முஸ்லிம்களோ மார்க்கத்தை அழித்து வருகின்றார்கள். உலகத்தின்எதிர்காலமதம்இஸ்லாமாக இருக்குமென்று அறிவு கூறுகின்றது. ஆனல் அது இஸ்லாம் என்னும்பெயரால் அழைக்கப்படாது வேறு பெயரால் உலகோர்முன் எடுத்துக்காண்பிக்கப் படும்போல் தோன்றுகிறது. ஒருவர்க்கத்தாரின் மார்க்கம் உலகோர்க்கு வழிகாண்பிக்கிறதாயிருக்கும்போது, அவ்வர்க்கத்தார் அந்த மார்க்கத்தின் தத்துவார்த்தங்களைத் தெரிந்துகொள்ளாதிருப்பது விபரீதமல்லவா? ஆகவே, உலகிலுள்ள உண்மையான மார்க்கத்தை நாமெல்லோரும் மகிமையுடன் தக்கமுறையில் பின்பற்றி நடப்பதற்கு ஏகவல்லநாயன் கிருபை பாலிப்பானுக.

இஷா அத்துல் இஸ்லாம்

நேயன்மீர் !

மதுரை ஜில்லா கம்பம் நகரில், இஷா அத்துல் இஸ்லாம்—இஸ்லாமிய பிரசார சபை ஸ்தாபிக்கப்பட்டு தக்கசேவை புரிந்துவருவதை யாவரும் நன்கறிவீர்கள். எனவே கடந்த 3 ஆண்டுகளாய் அச்சங்கம் தனது ஸ்தாபனநோக்கங்களை முற்றிலும் அனுசரித்து, இஸ்லாமியப் பிரசார வேலையை அதிவிமரிசையாய் பெரிதும் செய்துகொண்டு வருகிறது. இதுவரை கம்பம் பகுதிகளில் சுமார் 1100 மக்களும், திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த பலபாகங்களிலும், தமிழ்நாட்டின் அநேக ஊர்களிலுமிருந்து வந்தவர்கள் 400 பேர்களும் சத்தசத்திய இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி யிருக்கின்றூர்

களாதலின், சங்கம் அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசைசெய்து, இஸ்லாத்தில் சிறந்து விளங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

சென்ற ஆண்டு கம்பமா நகரில் இஷாஅத்துல் இஸ்லாம் சங்கத்தின் முதலாவது மகாநாடு ஆலீஜனுப் ஸவுக்கார் C. அப்துல்ஹகீம்சாஹிப் பஹாதுர் அவர்களது அக்கிராசனத்தின் கீழ் வெகு விமரிசையுடன் நடைபெற்றகாலை, நம் மாகாணத்தின் பற்பலபாகங்களிலுமிருந்து அநேகப் பிரதிநிதிகள் விஜயஞ்செய்து, மகா நாட்டில் கலந்து கொண்டதுடன் சங்கம் ஆற்றியுள்ள அருந் தொண்டுகளையும், நவ் முஸ்லிம்களையும் நேரில் கண்டு களிப்புற்றுச் சென்றிருக்கின்றார்கள்.

புதிதாய் இஸ்லாத்தைத் தழுவினவர்கள் விஷயத்தில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் எவ்வளவோ சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உலகறிந்த விஷயம். எனவே அவர்களுக்கு சகல துறைகளிலும் உபகாரஞ் செய்யவேண்டியது அவசியமாகும். எனவே ஏழை முஸ்லிம்களை ஆதரிக்கவேண்டியது நம்மவரின் கடமையாகயிருக்கிறது. அந்த நவ்முஸ்லிம்கள் நம்முடைய ஆதரிப்பையும் உபகாரத்தையும் எதிர்பார்த்து மற்றும் பலரும் இஸ்லாத்தைத் தழுவத் தயாராகயிருக்கிறார்கள். இத்தக்க சந்தர்ப்பத்தைக் கைவிடாது தக்க உதவி புரிவோமாகில் தக்க பலன் கிட்டுமென்பது திண்ணம். நம் சமூகம் எவ்வளவுக்கு பெருகிக்கொண்டு போகிறதோ அவ்வளவுக்கு எல்லாத் துறைகளிலும் நமக்கு அநுகூலமுண்டென்பதை நன்குணருவோமாக.

அங்கு இஸ்லாத்தில் சேர்ந்திருப்பவர்களின் பந்துக்களில் இதுபொழுது பெரியகுளம் தாலுகாவில் மட்டும், பல ஆயிரக்கணக் கானோர் இஸ்லாத்தைத் தழுவத்தயாராக இருப்பதாகத் தெரிய வருகிறது. சங்கத்தார் ஏற்கனவே இஸ்லாத்தைத் தழுவியிருக்கும் நவ் முஸ்லிம்களின் சம்ரக்ஷணைக்காவனவற்றைச் செய்யும் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கின்றனராதலின், இனித் தழுவ யிருக்கும் மக்களுக்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு திட்டம் தயார் செய்யவேண்டியது அத்தியாவசியமா யிருக்கின்றது. ஆகவே, இப்பிரசாரத்துக்கு தக்க பண உதவி தேவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. தனவந்தர்களான மகான்கள் தயாள சிந்தையோடு முன்வந்து பண உதவி செய்வார்களாயின், கூட்டங் கூட்டமாக மக்கள் நம் சன்மார்க்கத்தில் வந்து சேர்ந்து கொள்வதை நாம் கண்ணாரக் காணும் பாக்கியம் பெறுவோமென்பது திண்ணம்.

சங்கத்தின் தொண்டை சகல முஸ்லிம்களுக்கும் எடுத்துக் காட்டி அன்னார்களிடமிருந்து பண உதவிபெற்று மென்மேலும் அப்பிரசாரச் சேவையை ஊக்கத்தோடு நடத்துவதற்கு ஹேதுண்டு பண்ணவேண்டுமென்னும் நோக்கத்துடன், சங்கத்தின் இரண்டாவது மகாநாட்டை சென்னையில் ஆலீ ஜனுப் மௌலானா ஷவ்கத் அலீ சாஹிப் அவர்கள் தலைமையின் கீழ் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்னும் சுபச்செய்தி முஸ்லிம் சோதிரர்களனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்குமென்று நம்புகிறோம்.

சென்னையில் இம் மகாநாட்டை சிறப்புற நடைபெறச் செய்வதற்காக இங்குள்ள பல பிரமுகர்களைக் கண்டுபேச, கம்பத்திலிருந்து ஜனுப்களான E. ஷாகுல்ஹமீது ருவுத்தர், P. நாகூர்மீராருவுத்தர் இவ்விருவர்களும் விஜயஞ்செய்து, பிரமுகர்களிடம் ஆலோசனை செய்ததில், ஆலீஜனுப்சௌகார் C. அப்துல் ஹகீம் சாஹிப் பஹாதுர் அவர்களது வியாபாரஸ்தலத்தில், ஆலீ ஜனுப் கான்பஹாதுர் மௌலானா மௌல்வீ ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் அவர்களது தலைமையின்கீழ் முஸ்லிம் பிரமுகர்களின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்று, அதில் ‘இஷா அத்துல் இஸ்லாம்’ மகாநாட்டை சென்னையில் மேமீ 6-ந் தேதி மௌலானா ஷவ்கக் அலீ சாஹிப் அவர்களது தலைமையில் நடத்தவேண்டுமென முடிவு செய்யப்பட்டிருப்பதுடன், இம் மகாநாட்டை வெற்றிகரமாய் நடத்தி வைப்பதற்குள்ள தக்க ஏற்பாடுகளையும் செய்யும் பொருட்டு பல பிரபலஸ்தர்களடங்கிய கமிட்டியொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, முஸ்லிம் நேயர்கள் திரள் திரளாய் இம்மகாநாட்டிற்கு விஜயஞ்செய்து, இஷாஅத்துப் பிரசாரம் தக்க முறையில் முன்னேற்றமடைந்து செல்ல உதவிபுரிவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

காதியானி மதகண்டன நூல்கள்

ஹயாத்தமஸீஹ் அலைஹிஸ்ஸலாம்

ஹஸ்ரத் ஈஸாநபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சரித்திர சுருக்கம், அவர்கள் உலகிற்கு வரும் விபரம் ஆகியவைகள், குர்ஆன் ஹதீதுகளின் ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டது. இந்நூலைப்போல் இதுகாறும் தமிழில் வெளிவந்தது கிடையாது.

முதல்பாகம் 90 பக்கங்கள் கொண்டது அண 7. 2-ம் பாகம் 350 பக்கங்கள் கொண்டது ரூ. 1

கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு

இந்நூலை வாசிப்பது கொண்டு, லாகூர் அஹ்மதிய்யாப் பார்ட்டித்தலைவர் முஹம்மது அலியால் எழுதப்பட்ட இயேசுவின் இரகசியம் என்னும் புத்தகம் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் முற்ற முற்ற விரோதமாயிருப்பது நன்கு புலனாகும். விலை அண 6

சுன்னத்ஜமா அத்தின் விஸ்வாசம்

சுன்னத்து ஜமாஅத்து என்றால் என்னவென்று பரிகாசமாய் வினவும் காதியானிகளுக்கு இது தக்க வாயாப்பாகும். இது சுன்னத்ஜமாஅத் கொள்கை, அவர்கள் யார்? வழிகேடர்களின் கொள்கை யாது? என்பனவற்றை நன்கு துலக்கும். விலை அண 6

காதியானி மத ஆராய்ச்சி

காதியானி மதக் கோட்பாடுகள் இன்னவை என்று தெரிந்து கொள்ளாது அநேகர் அன்னோரால் பிரசுரிக்கப்படும் நூல்களைப் படித்து வழிதவறிவிடுகின்றனராதலின், இஸ்லாத்துக்கும் காதியானி மதத்துக்குமுள்ள வேற்றுமை, காதியானிகள் முஸ்லிம்களென்று கூறிக்கொண்டு அதைக் கெடுப்பதற்காகச் செய்துவரும் சூழ்ச்சி முதலியவைகள் தக்க முறையில் விளக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1

முஸ்லிம்களின் நவீன அநுஷ்டானம்

அனாச்சார ஷிர்க்பித்அத் முதலிய நவீன அனுஷ்டானங்களில் கிடந்துழலும் முஸ்லிம்களுக்கும், அனாவசியமான சடங்குகளைக் கைக்கொண்டு கடன்பட்டு கஷ்டப்படாதிருக்கவும், வீண்டாம்பீகச் செலவுகளிலிருந்து விடுவிக்கவும் அறிய புத்தகம். விலை அண 10

குர்ஆன் ஆங்கில வியாக்யான ஆராய்ச்சியின் முகவுரை

இது, காதியானி அஹ்மதியாப்பார்ட்டித் தலைவர் முஹம்மது அலீ, எழுதிய ஆங்கில வியாக்யானத்தில் இஸ்லாத்துக்கு விரோதமாயுள்ள தவறுகளிற் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறது. விலை அண 4

அஹ்மதியர்களைப்பற்றிய கோர்ட்டுதீர்ப்பு

இதில் காதியானி மதஸ்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும், மஸ்ஜித் கபரஸ்தான் சம்பந்தமாக ஏற்பட்ட வியாச்சியங்களும் கோர்ட்டு தீர்ப்புகளும் அடங்கியிருக்கிறது. விலை அண 2

காதியானிப்பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும்

சிலோன் கம்பளையில் காதியானிகளுக்கும் உலமாக்களுக்கும் நடக்க இருந்த தர்க்கவாத சம்பந்தமாக எழுதப்பட்டது. விலை அண 6

ரத்துல் காதியானி

வஹீ என்பதென்ன? அது எவருக்கு வரலாம். தற்காலம் வஹீ உண்டா? இல்ஹாம் என்றால் என்ன? என்பன போன்ற விஷயங்கள் விபரமாயும் தெளிவாயும் கூறப்பட்டிருக்கிறது. விலை அண 4

காதியானிமதஸ்தருடன் ஒற்றுழையாமை

காதியானிக் கொள்கைகள் நந்தென்னாட்டில் தலைகாட்ட முற்பட்டிருக்கும் இதுகாலை, இந்நூல் ஒவ்வொருவரிடமுமிருக்கவேண்டியது அவசியமாகும். விலை அண 8

கிடைக்குமிடங்கள் :— (1) முஸல்மான் ஆபீஸ், தென்காசி.

(2) ஜனாப் மு. முஹம்மது ஷரீப் சாஹிப்,
439-A, நார்த்பிரிட்ஜ் ரோடு, சிங்கப்பூர்.

இஷா அத்துல் ஹஸனாத்

பீதர்ஜுமத்தில் பாக்கியாத் ஸாலிஹாத்

இந்நூல், வேலூர் மத்ரஸயெ பாக்கியாத் ஸாலிஹாத்தில் நீண்டகாலம் பிரதம ஆசிரியராக இருந்து காலஞ்சென்ற மௌலானா மௌல்வீ அல்ஹாஜ் அப்துல்காதிர் பாஷா சாஹிப் மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்துவிலியற்றப்பெற்ற "அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்" என்னும் உருது நூலின் தமிழ்மொழி பெயர்ப்பாகும்.

இவ்வரும் நூலில், நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலியன சம்பந்தமாக நம் சன்மார்க்கம் எந்தெந்த சட்டதிட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறதென்பதையும், அவைகளிலெது சன்மார்க்கத்துக்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்நூல் நம்மவருக்குத் தக்க பிரயோசனமளிக்க வல்லதென தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ்அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. அழகிய செந்தமிழின் எளியநடையில் எழுதப்பட்டிருப்பதால், இதனை ஒவ்வொருவரும் வாங்கிப்பார்த்து பயனடைவார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

தபால்சார்ஜ் பிரத்தியேகம் கிரயம் ரூபா 1—8—0

கிடைக்குமிடம் :— நாஜிர், மத்ரஸாபாக்கியாத் ஸாலிஹாத்,

அரபிக்காலேஜ், வேலூர்.

208338
சென்னை-600 028

ஹயாத்தெ மஸீஹ் (அலை)

இரண்டாம் பாகம் வெளிவந்துவிட்டது.

சகோதரர்களே! காதியானி அஹ்மதிய வகுப்பார்களின் கொள்கை இஸ்லாத்துக்கு முற்ற முரணென்பது கண்கூடு. மதநிபுணர்களான உலமாக்களும், ஆங்கிலக்கலை மேதாவிகளும் இக்கொள்கையை உள்ளுணர்ந்து பார்த்தபின், வெறுத்துத்தள்ளி வருகிறார்களென்பது வெளிப்படை. ஹயாத்தெ மஸீஹ்அலை முதற்பாகத்தில் திருமறை திருநபிஹதீது, ஸஹா பாக்கள், மதப்பெரியார்களென்னும் ஆராய்ச்சி மிக்க மேதாவிகளின் சான்றுகளால் இப்புதிய கொள்கை முற்றிலும் தவறென்பதை நிரூபித்துவிட்டோம். எனினும் அன்னாரின் குயுக்தி வாதங்களுக்குத் தக்க ஆராய்ச்சியுடன் இரண்டாம் பாகம் வெளியிடுவோமென்ற முன்னுரைப்பிரகாரம் ஆதி நாயனருளால் இதோ உங்கள்முன் வெளிவந்துலவும் சுபச்செய்தியைத் தெரிவிக்க மிகச் சந்தோஷமடைகின்றோம். அல்ஹம்துலில்லாஹ். இந்த இரண்டாம் பாகத்தின்கண் சிறந்து விளங்கும் அட்டவணையின் சுருக்கக் குறிப்பு வெளிவந்துளது. மற்றும் அழகிய அத்தாக்ஷிகளுடன் கூடிய விரிவுரைகளைப் பார்த்தபின்னரே அதன் மகிமையைத் தெரிந்து ஆனந்தமடையப் போகின்றீர்கள். காதியானிமத ஊழல்களை எடுத்துக்காட்டி அவர்களை நேர்வழியில் கொண்டு வருவதற்கு இஃதோர் நிகரற்ற நூலென்பது மிகையாகா. அன்னார் இஸ்லாத்தின் கொள்கைப் பிரகாரம் ஈஸா நபியவர்களின் ஜீவிப்பை ஏற்றுக்கொண்டு மிர்ஸாயீமதம் பொய்மார்க்கம் என்பதை அங்கீகரித்தல் வேண்டும். இஃதன்று வேறோர் வழி கிடைக்கப்பெற மாட்டார்களென்பதைத் தெளிவாகக் கண்ணுற்றின்புற விரும்புவீர்களேல், இன்றே ஆர்டர் செய்யுங்கள். ஸ்திரீகள் முதல் புருஷர்வரை யாவரும் பார்த்து உண்மையை விளங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் 1—4—0 ரூபாய் கிரையமானதை 1—0—0 ஒரு ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த டிம்மி 350 பக்கங்கள் கோண்டது விலை ரூ. 1—0—0 தான்.

இங்ஙனம்

ஆசிரியர்,

முஸல்மான் ஆபீஸ், தென்காசி.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb. Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.